

**09**

**சூடானில் என்ன நடக்கின்றது?**

**கிழக்கில் தலையெடுக்கும் இனவாதம்**

**05**



**சிலைகள் வடிக்கும் விம்பங்கள் 10**

மாவனல்லை சிலை உடைப்பு







# மீள்பார்வை


මීල්පාර්වෙ

Registered as a Newspaper in Sri Lanka
GPO-QD/116/NEWS/2019 - ISSN 2012-5038

Meelparvai Fortnightly
meelparvai.net

සමාජ වෙනසකට නගන හඬ
சமூக மாற்றத்திற்கான குரல்

இதழ் - 411 • 18 ஜனவரி 2019 வெள்ளிக்கிழமை • ஜமாதுல் அவ்வல் 1440 • விலை 40.00







# மாவனல்லை சிலை உடைப்பு

## உயர் மட்ட வெளிநாட்டுச் சக்திகளைத் தேடிக் கொண்டிருக்கிறோம்

மாவனல்லைச் சிலை உடைப்புச் சம்பவம் ஒரு தனித்த சம்பவமல்ல. இது ஒரு வலையமைப்பில் செயல்படுகிறது என கேகாலை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஏ.எஸ்.பி கமல் பெரேரா தெரிவித்தார்.


மாவனல்லை சிலை உடைப்புச் சம்பவத்தின் தற்போதைய நிலவரம் தொடர்பில் அவரிடம் வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மாவனல்லையில் மாத்திரமல்ல. பொதுஹர, கம்பளை, மன்னார் பிரதேசங்களிலும் சிலைகள் உடைக்கப்பட்டிருக்கின்றன. பௌத்த சிலைகள் மட்டுமன்றி இந்து, கிறிஸ்தவ வழிபாட்டுச் சின்னங்களும் உடைக்கப்பட்டிருக்கின்றன. அந்த வகையில் மன்னார், திருகோணமலை, காத்தான்குடி போன்ற பிரதேசங்களில் எல்லாம் இந்தச் சிலை உடைப்புடன் சம்பந்தப்பட்டவர்களுத் தொடர்பிருப்பதாக நாங்கள் சந்தேகிக்கிறோம். இவர்கள் தாமாக இயங்கவில்லை. (பக். 02)



உலக போரா சமூகத்தின் ஆன்மீகத் தலைவர் கலாநிதி முபழ்ழல் ஸைபுதீன் இந்த வாரம் இலங்கைக்கு மேற்கொண்ட குறுகிய விஜயத்தின் போது எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவை அழைத்து ஆசி வழங்கினார். மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலத்தில் பஹ்ரைன் விஜயத்தின் போது அவருக்கு கலீபா பட்டமும் வழங்கப்பட்டது.

## மீண்டும் உயிர்த்தெழும் மிருக நலன் சட்டமூலம்



புதுவருட தினத்தன்று நீர்கொழும்பில் தீயில் எறியப்பட்ட நாயை முன்வைத்து மிருக நலன் தொடர்பான சட்டமூலம் தொடர்பான குரல்கள் மீண்டும் எழத் துவங்கியிருக்கின்றன.

குறித்த சட்ட மூலம் 2006 ஆம் ஆண்டில் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்ட போதும் பல்வேறு காரணங்களுக்காகவும் இது பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படுவது (பக். 02)



## இலங்கை தனது கடப்பாடுகளை நிறைவேற்றியே ஆக வேண்டும்

இலங்கையின் பொருளாதாரச் சவால்கள் குறித்தும் நாட்டின் கொள்கைகளில் முதன்மைப்படுத்தப்பட வேண்டிய விடயங்கள் குறித்தும் நாங்கள் கலந்துரையாடினோம் என சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கிறிஸ்டின் லகார்டே தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான சந்திப்புக்காக வொஷிங்டன் சென்றிருந்த நிதி அமைச்சர் மங்கள சமரவீர தலைமையிலான குழுவினருடன் நடந்த சந்திப்பை அடுத்தே அவர் இவ்வாறு தெரிவித்தார். அமைச்சருடன் மத்திய வங்கி ஆளுனர் கலாநிதி இந்திரஜித் (பக். 02)

## கடனைத் திருப்பிச் செலுத்துவற்கு ஒதுக்குகளில் கைவைக்கிறது



மஹிந்த ராஜபக்ஷ காலத்தில் ஐந்து வருட கால ஒதுக்குக் கடனாகப் பெற்ற 01 பில்லியன் அமெரிக்க டொலர்களையும் திருப்பிச் செலுத்த வேண்டிய காலப்பிரிவு கடந்த திங்களுடன் (14) முடிவடைந்த நிலையில் இலங்கை அரசாங்கம் தனது ஒதுக்குகளில் இருந்து கடனை அடைப்பதாக மத்திய வங்கியின் ஆளுனர் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி தெரிவித்துள்ளார். வெளிநாட்டு நிதி மூலங்களில் இருந்து நிதி திரட்டுவதற்கு அரச வங்கிகள் மூன்றுமே தவறியதால் மத்திய வங்கியின் ஒதுக்குகளில் (பக். 02)

## பழைய முறையில் தேர்தலுக்கான சட்டமூலம் தயாரிக்கப்படுகிறது

மாகாண சபைத் தேர்தலை பழைய முறையில் நடத்துவதற்கு புதிய சட்டத் திருத்தங்களை மேற்கொள்வதற்கான சட்டமூலத்தைத் தயாரிப்பதற்கான ஆவணம் சட்டவரைஞர் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக



மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சு அறிவித்துள்ளது. இதன்படி இன்னும் இரண்டு வார காலத்துக்குள் சட்டவரைஞர் திணைக்களம் அடிப்படைச் சட்ட வரைவைத் தயாரிக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

2017 ஆம் ஆண்டில் புதிய முறையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த (பக். 02)

## திரிபீடகத்தை உலக மரபுரிமையாக்கும் முயற்சி



கடந்த ஐந்தாம் திகதி தேசிய மரபுரிமையாகப் பிரகடனப்படுத்தப்பட்ட திரிபீடகத்தை சர்வதேச மரபுரிமையாக மாற்றுவதற்கான முன்மொழிவொன்றினை ஐக்கிய நாடுகள் சபையில் முன்வைப்பதற்கு அமைச்சரவையில் முன்வைக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (பக். 02)

## வடக்கு கிழக்குக்கு மேலும் 10,000 வீடுகள்



பயனாளர்களின் பங்களிப்புடன் வடக்கிலும் கிழக்கிலும் செங்கல் மற்றும் சீமெந்துக் கல் வீடுகள் 10,000 இனை நிர்மாணிப்பதற்கான பணிகளை தேசியக் கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு, வடமாகாண அபிவிருத்தி, இளைஞர் விவகாரம், தொழிற் பயிற்சி மற்றும் திறன்விருத்தி அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தைப்பொங்கல் தினத்தோடு ஆரம்பித்துள்ளார். (பக். 02)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எப்படி நாட்டின் பொருளாதாரத்தினை நிர்வகிப்பதென மூன்று மாதத்தில் செய்து காட்டுவேன்



"200 நிறுவனங்கள் என்னிடம் உள்ளன. 58ஆயிரம் பேர் அதில் வேலை செய்கின்றனர். அரசியலில் எனக்கு ஆர்வமில்லை. ஆனால், திறைசேரி செயலர் பதவி கிடைத்தால் எப்படி நாட்டின் பொருளாதாரத்தினை நிர்வகிப்பதென செய்து காட்டுவேன். மூன்று மாதத்தில் செய்து காட்டுவேன்..

வடக்கில் 11 லட்சம் மக்கள் உள்ளனர். இரண்டு லட்சத்து 40 ஆயிரம் பேர் பாடசாலை செல்கின்றனர். அந்த மாணவர்களுக்கு பிஸ்கட் ஒன்றை வழங்கக் கூட அந்த மாகாண சபையால் முடிந்ததா? அங்குள்ள அரசியல்வாதிகளால் அதைக் கூட செய்ய முடியவில்லை.

1972 இல் அரசியலமைப்பு திருத்தம் செய்யப்பட்டபோது சிலோன் ஸ்ரீலங்காவாக மாற்றப்பட்டது. பெயர்மாற்றம் செய்தால் எல்லாம் சரியாகிவிடும் என்று அப்போது மக்கள் நம்பினர். 1940களில் இருந்து 19 தடவைகள் அரசியலமைப்பு திருத்தம் செய்யப்பட்ட போதும் அந்த ஒவ்வொரு தடவையும் ஏதாவது நடக்குமென மக்கள் நம்பினர்.

எனது நிறுவனம் ஒன்று நட்டத்தில் போகிறது. அதற்காக கம்பனியின் பெயரை மாற்றுவோம் என்று யாராவது நிர்வாகி ஒருவர் என்னிடம் வந்து சொன்னால் அவர் எனது நிறுவனத்தில் வேலை செய்யும் கடைசி தினம் அதுவாகவே இருக்கும்."

பிரபல தொழிலதிபர் தம்மிக்க பெரேரா தெரண தொலைக்காட்சிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவிப்பு.

- சிவா ராமசாமி




## சமூக வலைத்தளங்களில் அலசப்படுபவை

### ஜும்மா அமைதி



ஜும்மாவுல எழும்பி கேள்வி கேட்டால் ஜும்மா முறிஞ்சிடும் என்றதாலதான் மௌலவி சொல்ற எல்லாத்தையும் பலபேர் அமைதியா இருந்து கேட்டுட்டு போறானுகள் என்று முஅத்தினார் சொன்னாரு...!!!

- ஸனூஸ் அப்துல்லாஹ் -

# நிலத்தொடர்பற்ற முஸ்லிம் பெரும்பான்மை மாகாணம்




முஸ்லிம் பெரும்பான்மை மாகாணமொன்று கிழக்கில் நிலத்தொடர்பற்ற முறையில் கிடைத்தால் மட்டுமே, அதிகாரப் பரவலாக்கல் என்பது அர்த்த முள்ளதாக இருக்கும். இதைத் தான் முஸ்லிம் பெரும்பான்மை மாகாணம் வேண்டும் என்ற கோரிக்கையில் மறைந்த தலைவர் அஷ்ரப் தெளிவுபடுத்தியிருந்தார். நிலத் தொடர்பற்ற வகையில் இந்தியாவிலுள்ள பாண்டிச்சேரி மாநில அமைப்பை ஒத்ததாக, முஸ்லிம்களுக்குரிய பெரும்பான்மை மாகாணம் அமைய வேண்டும் எனவும் ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பின் செயலாளர் நாயகமும், முன்னாள் ராஜாங்க அமைச்சருமான எம்.ரி. ஹசன் அலி தெரிவித்துள்ளார்.

புதிய அரசியலமைப்பு உருவாக்கம் பற்றிய விவகாரம் இப்பொழுது மீண்டும் செய்திகளில் முக்கியத்துவம் பெற்று வருகிறது. இக்காலகட்டத்தில் தமிழர் தரப்பு தங்களது உரிமைகள் பற்றி மிகவும் லாவகமாக தைரியத்துடன் காய்களை நகர்த்திக் கொண்டு போராடி வருகின் றனர். அதேநேரம் முஸ்லிம் தரப்புக்கள் தங்களுக்குக் கிடைத்த அமைச்சுப் பதவிகளைக் கொண்டாடுவதிலும் அபிவிருத்திப் பணிகளை முடுக்கி விடுவதிலும் வாக்குறுதிகளைத் தாறுமாறாக வழங்கி மக்களைத் திசை திருப்பி இலவசங்களுக்கு ஏங்கும் ஏமாளிகளாக மாற்றி வருவதனையும் காணக் கிடைக்கிறது. அரசியல் யாப்பு விவகாரத்தில் முஸ்லிம்களுக்கு எவ்வித சம்பந்தமும் இல்லை என்றவாறு நாடாளுமன்றிலுள்ள முஸ்லிம் கட்சிகளின் தலைவர்கள் நடந்து கொள்கின்றனர்.

தற்பொழுது அரசியல் அதிகாரம் குவிந்துள்ள மத்திய அரசாங்கத்திடமிருந்து, உரிமைகளுக்காகப் போராடிக் கொண்டு எதையாவது பெற்றுக்கொள்ளும் நமது சமூகம், எதிர்காலத்தில் அதிகாரம் குவிந்துள்ள 09 மாகாண அரசாங்கங்களிடம் தனித் தனியாகப் பிரிக்கப்பட்ட மாகாண மட்டக் குழுக்களாக சிதறி அரசியல் வலிமையற்றுப் போன நிலையில் போராட வேண்டிய நிர்க்கதி ஏற்படும்.

முஸ்லிம் சமூகத்தை அவ்வாறு அரசியல் வலிமை குன்றியவர்களாக மாற்றிய பாவிகளாக, இன்றைய அரசியல் தலைமைகள் எதிர்கால சந்ததிகளால் அடையாளப்படுத்தப்படுவார்கள் என்பது மட்டும் உறுதியாகும்" என்றார்.

- அலிப்F சப்ரி

# கிழக்கு ஆளுனருக்கெதிரான எண்ணெய்வார்ப்பு



குறுகிய அரசியல் அபிலாசையை இலக்காக கொண்டு தமிழ் இனவாத பின்புலங்கள் குழப்பங்களை ஏற்படுத்தி வரும் இந்நிலையில் முஸ்லிம் கட்சிகளின் முக்கிய பிரதிநிதிகளும் தமது பங்கிற்கு எரிகின்ற நெருப்பில் எண்ணெய் ஊற்றுகின்ற விடயத்தை கச்சிதமாகச் செய்துகொண்டுள்ளனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் மூத்த உறுப்பினர் ஒருவர் கிழக்கில் காணப்படும் குறிப்பாக மட்டக்களப்பில் காணப்படும் முஸ்லிம் களது காணிப்பிரச்சினையை உடனடியாக புதிய ஆளுநர் ஹிஸ்புல்லாஹ் அவர்கள் தீர்க்கவேண்டும் என்ற பகிரங்க மடலை ஊடகங்களுக்கு வழங்கி இருந்தார்.

தாம் மாகாண சபையில் இருந்த நான்கு வருட காலப்பகுதியில் தீர்க்க முடியாததை, முஸ்லிம்கட்சிகள் அரசுகளின் பங்காளிகளாக மாத்திரமன்றி முக்கிய அமைச்சுக்களை சுமந்துகொண்டு முஸ்லிம் சமூகத்தை விற்றுப் பிழைப்பு நடாத்தும் பொழுது கிழக்கு ஆளுநர் குறுகிய சில நாட்களுக்குள் முஸ்லிம்களது காணிப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என தமிழ்த் தரப்பிற்கு காட்டிக் கொடுப்பு செய்ய முனைவது வேடிக்கையானது. குறித்த கட்சிகளின் அமைச்சர்களும் ஆளுநர் பதவிப் பிரமாணம் செய்தவுடன் அல்லாமல் ஹர்த்தால் அனுஷ்டிப்பு செய்திகளின் பின்னர் ஆளுநருக்கு வாழ்த்து சொல்ல முனைந்தமை இவர்களது தார்மீகத்தை கேள்விக்குட்படுத்துவதாக உள்ளது.

ஆக மொத்தத்தில் ஆளுநர் என்ற துருப்புச் சீட்டு பல்முனை அரசியல் ஆடுகளத்தில் பரீச்சாத்தமாக வீசப்பட்டுள்ளது. மறுபுறம் கிழக்கின் ஆளுநராக ஒரு முஸ்லிம் சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்தவர் வரக்கூடாது என்ற வக்கிர எண்ணத்துக்கு மத்தியில் இணைந்த வடகிழக்கில் முஸ்லிம்கள் தமிழ் தரப்பிடமிருந்து எதனையும் பெற்றுக்கொள்ளப் போவதில்லை என்ற கசப்பான உண்மையினை தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மௌனத்தில் இருந்தும், இனவாதத்தை மூலதனமாகக் கொண்டுள்ள சில்லறை தமிழ்க் கட்சிகளிடம் இருந்தும் முஸ்லிம் சமூகம் புரிந்துகொள்ள வாய்ப்பாக உள்ளது.

- ஜுனைத் நளீமி

## மாவனல்லை... (01 ஆம் பக்கத் தொடர்)

இவர்கள் இயக்கப்படுகிறார்கள். பெரும்பாலும் வெளிநாடுகளில் இருந்தே அவர்கள் இயக்கப்படுவதாகச் சந்தேகிக்கிறோம். அது ஐஎஸ் ஆகவும் இருக்கலாம். வேறு சர்வதேசச் சக்திகளாகவும் இருக்கலாம். அந்த உயர் மட்டத் தொடர்பைத் தான் நாங்கள் தேடிக் கொண்டிருக்கிறோம் என அவர் தெரிவித்தார்.

சம்பவத்துடன் தொடர்புடையவர்களை உடனடியாகக் கைது செய்ததினாலேயே திகன போன்ற கலவரங்கள் ஏதும் இன்றி நிலைமையைக் கட்டுப்படுத்த முடிந்தது. தற்போது தலைமறைவாகியுள்ள இரண்டு இளைஞர்களும் சரணடைந்தால் எந்தப் பிரச்சினையும் இல்லை. அவர்கள் நாட்டை விட்டுத் தப்பிச் செல்ல முடியாதவாறு விமான நிலையத்துக்கு அறிவித்திருக்கிறோம். கடல் மார்க்கமாக அவர்கள் தப்பிச் செல்வதற்கும் வாய்ப்பிருக்கிறது என அவர் மேலும் தெரிவித்தார்.

மாவனல்லையில் சிங்கள முஸ்லிம் உறவுக்கு நீண்ட வரலாறு இருக்கிறது. இந்த உறவைப் பாதுகாப்பதற்கு நாங்கள் தொடர்ந்தும் எம்மாலான முயற்சிகளைச் செய்வோம் எனவும் அவர் தெரிவித்தார்.

## இலங்கை... (01 ஆம் பக்கத் தொடர்)

குமாரசுவாமி, திறைசேரியின் செயலாளர் கலாநிதி சமரதுங்க உட்பட மத்திய வங்கியினதும் திறைசேரியினதும் உயர் அதிகாரிகளும் இந்தக் குழுவில் அடங்கியிருந்தனர். வொஷிங்டனில் நிலவிய கடும் பனியுடனான காலநிலை காரணமாக குறித்த சந்திப்பு காலதாமதமாகியே நடைபெற்றது.

சர்வதேச நாணய நிதியத்தின் உதவியுடனான திட்டங்களின் கீழ் பொருளாதாரத்தை மறுசீரமைப்பதற்கான நிகழ்ச்சி நிரலை நடைமுறைப்படுத்துவதில் இலங்கையின் தொடர்ச்சியான அர்ப்பணிப்பினை நாங்கள் வலியுறுத்தினோம். இது தொடர்பிலான நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதில், நிகழ்ச்சி நிரலின் தாக்கமான நடைமுறைப்படுத்தலுக்கான கொள்கை வகுத்தல் பிரதானது என்பதில் இருதரப்பும் உடன்பட்டுள்ளோம். தொடர்ச்சியான கண்காணிப்புக்கான தொடரில் அடுத்த மாதம் நடுப்பகுதியில் நாங்கள் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளோம் எனவும் முகாமைத்துவப் பணிப்பாளர் லகார்டே தெரிவித்தார்.

மஹிந்த ராஜபக்ஷ காலத்தில் வாங்கிய கடன்களில் 1 பில்லியன் அமெரிக்க டொலர்களைத் திருப்பிச் செலுத்துவதற்கான காலம் இம்மாதம் 14 ஆம் திகதியுடன் காலாவதியாகிறது. இந்த நிலையிலேயே 1.5 பில்லியன் விரிவாக்கப்பட்ட நிதி வசதிகளைப் (EFF) பெற்றுக் கொள்வதற்காக இலங்கைக் குழுவினர் வொஷிங்டன் சென்றுள்ளனர். இதனைப் பெற்றுக் கொள்வதற்காக சர்வதேச நாணய நிதியம் விதிக்கும் கடப்பாடுகளை நிறைவேற்றுவது என்ற முடிவிலேயே குழுவினர் அதிகாரிகளைச் சந்தித்துள்ளனர்.

## மீண்டும் உயிர்த்தெழும்... (01 ஆம் பக்கத் தொடர்)

தாமதமாகி வந்தது. பின்னர் சிலாபம் முன்னேஸ்வரம் கோவிலில் நடைபெற்று வந்த மிருகபலி பூஜையை முன்வைத்து மத வழிபாட்டிடங்களில் மிருகபலி கொடுப்பது தடை செய்யப்பட்டது.

புத்தாண்டுச் சம்பவத்தைத் தொடர்ந்து மீண்டும் மிருக நலன் சட்டமூலம் தொடர்பில் குரலெழுப்பப்பட்டு வருகிறது. வசப்படுத்தியுள்ள மற்றும் வீட்டுப் பிராணிகளை சித்திரவதை செய்தல், துஷ்பிரயோகம் செய்தல், பராமரிக்காது விடுதல் போன்றவற்றைத் தடுக்கும் வகையில் தேசிய மிருக நலன் அதிகார சபை ஒன்றை நிறுவுவது தொடர்பிலும் இந்தச் சட்டமூலத்தில் முன்மொழியப்பட்டிருந்தது.

நடைமுறையில் உள்ள 1907 ஆம் ஆண்டின் மிருகவதைச் சட்டத்தின்படி, மிருகவதைக்கெதிரான அதிகூடிய தண்டப் பணமாக 100.00 ரூபாவே குறித்துரைக்கப்பட்டுள்ளது. இதுவன்றி வேறு எந்தத் தண்டனையையும் குற்றவாளி பெறுவதில்லை. வரையப்பட்டுள்ள சட்டமூலத்தில் தண்டப்பணமாக ரூபா. 10,000 மும் ஒரு வருட சிறைத் தண்டனையும் குறித்துரைக்கப்பட்டுள்ளது.

மிருகங்கள் எல்லாம் மக்களின் பயன்பாட்டுக்கானது என்றே இலங்கை மக்கள் கருதுகின்றனர் எனக் கூறிய மிருக நலன் சட்டவாக்கத்துக்கான சட்ட ஆணைக்குழுவின் முன்னாள் ஆலோசகர் சேனக வீரரத்ன, இறைச்சி வியாபாரம் இங்கு சக்திமிக்கதாக மாறியிருக்கிறது. அவர்கள் சட்டம் இயற்றுபவர்களின் வாய்களைப் பொத்தியிருக்கிறார்கள். சமூகத்தின் செல்வாக்குமிக்கவர்கள், சமூகத்தை வழிநடத்துபவர்கள், அரசியல் நிறுவனங்கள், ஊடகங்கள் அனைத்தையும் இந்த இறைச்சி வியாபாரிகள் தமது பணத்தினால் வாய்மூட வைத்திருக்கின்றனர் எனவும் தெரிவித்துள்ளார்.

தயாரிக்கப்பட்டுள்ள மிருக நலன் சட்டமூலத்தின் திருத்தங்களுக்கும் அங்கீகாரத்துக்குமாக தற்பொழுது கிராமிய பொருளாதார அலுவல்கள் மற்றும் கால்நடை அமைச்சர் பீ.ஹரிஸனிடம் வழங்கப்பட்டுள்ளது. பின்னர் அது சட்டவரைஞர்களிடம் கையளிக்கப்பட்டு சட்ட மா அதிபரிடமும் அதை அடுத்து இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்திடமும் முன்வைக்கப்படும். இறுதியாக அது பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

## கடனைத் திருப்பிச்... (01 ஆம் பக்கத் தொடர்)

இருந்து கடனை அடைக்க வேண்டியிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

முதலீட்டாளர்களின் ஏமாற்றமான பங்களிப்பினால் அரச வங்கிகளுக்கு எதிர்பார்த்த வெளிநாட்டு நிதியைத் திரட்ட முடியாது போயுள்ளது. 2018 ஒக்டோபரில் இருந்த 7.9 பில்லியன் டொலர் வெளிநாட்டு நாணய ஒதுக்கீடு, நடந்து முடிந்த அரசியல் கலவரத்தினால் 2018 முடியும் வேளையில் 6.9 பில்லியன் டொலர்களாகக் குறைந்திருந்தது. சர்வதேச ஒதுக்குகளினூடாக நாம் எமது 01 பில்லியன் டொலர் கடனை அடைத்து விட்டோம் என பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

இலங்கை இந்த வருடம் 5.9 பில்லியன் டொலர்களை கடனாகத் திருப்பிச் செலுத்த வேண்டியுள்ளது. அதில் 2.6 பில்லியன் டொலர்கள் முதல் மூன்று மாதங்களிலும் திருப்பிச் செலுத்தப்பட வேண்டியவை.

## வடகிழக்குக்கு... (01 ஆம் பக்கத் தொடர்)

இதன் முதற்கட்டமாக 4750 வீடுகள் நிர்மாணிக்கப்படும். 550 சதுர அடிகள் கொண்ட இந்த வீடுகள், இரண்டு படுக்கையறைகளையும், சமையலறை மற்றும் வரவேற்பறையையும் கழிவறையையும் கொண்டமைந்ததாகும். ஒரு வீட்டுக்கான செலவாக 10 இலட்சம் ரூபா மதிப்பிடப்பட்டுள்ளது என அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி தெரிவித்தார்.

முன்னுரிமை அடிப்படையிலேயே இந்த வீடுகள் வழங்கப்படவுள்ளன. உள்ளூரில் இடம்பெயர்ந்தோர், நலன்புரி முகாம்களில் தங்கியிருக்கும் குடும்பங்கள் என்பனவற்றுக்கு முன்னுரிமை அளிக்கப்படவுள்ளன. அத்தோடு, மீள் குடியேற்றத்துக்காகத் திரும்பி வருகின்ற பெண்தலைமைமைத்துவக் குடும்பங்கள், உடல் உறுப்புக்களை இழந்தவர்கள், கண்ணிவெடியால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள், குழந்தைகளையும் முதியவர்களையும் கொண்ட குறைந்த வருமானம் உழைக்கும் குடும்பங்கள் ஆகியனவற்றுக்கும் முன்னுரிமை அளிக்கப்படும்.

அந்த வகையில் உள்ளூரில் இடம்பெயர்ந்தோர், நலன்புரி முகாம்களில் தங்கியிருக்கும் குடும்பங்கள், மீள்குடியேற்றத்துக்காகத் திரும்பி வருகின்ற குடும்பங்களுக்கே முதற்கட்டமாக 4750 வீடுகள் வழங்கப்படவுள்ளன. இதில் யாழ்ப்பாணம் 1500, கிளிநொச்சி 670, முல்லைத்தீவு 630, வவுனியா 450, மன்னார் 350, மட்டக்களப்பு 625, திருகோணமலை 400, அம்பாறை 125 என்ற அடிப்படையில் இந்த வீடுகள் பகிர்ந்தளிக்கப்படவுள்ளன.

## பழைய முறையில்... (01 ஆம் பக்கத் தொடர்)

வேண்டும் என நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டத்தைத் திருத்தும் வகையிலான சட்டமூலம் ஒன்று தயாரிக்கப்படவுள்ளதாக மாகாண சபைகள் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சின் செயலாளர் கமல் பத்மசிறி தெரிவித்துள்ளார்.

இதற்கமைய 1982 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டத்தை மீண்டும் நடைமுறைப்படுத்தி அதிலிருக்கும் குறைபாடுகளை நிவர்த்தி செய்து மாகாண சபைத் தேர்தலை பழைய முறையில் நடத்துவதற்கான சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

தற்போது நிறைவேற்றப்பட்டுள்ள புதிய சட்டம் முன்னாள் அமைச்சர் பைஸர் முஸ்தபாவினால் தயாரிக்கப்பட்டு அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது.

## திரிபீடகத்தை...

(01 ஆம் பக்கத் தொடர்)

ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்ட இந்த அமைச்சரவைப் பத்திரம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படுவதற்காகச் சமர்ப்பிக்கப்படும்.

தேரவாத பௌத்தத்தின் திரிபீடகத்தை உலக மரபுரிமையாக்குவதற்கான கலந்துரையாடல் ஜனாதிபதியின் செயலாளர் உதய செனவிரத்ன தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது சிந்தனையும் செயற்பாடுகளும் விசாலப்பட வேண்டும்



செய்னுலாப்தீன் நிஹாஸ்

அழகிய எமது இலங்கை நாடு ஆசியாவின் ஆச்சரியமாக சிங்கப்பூராக மாற வேண்டும் என்ற கனவு நாட்டில் நலனில் அக்கறை கொண்ட எல்லோரின் விருப்பமாகும்.

ஆனால் நாட்டை ஆட்சி செய்யும் அரசியல் தலைவர்களும் சரி, அதிகாரிகளும் சரி இவ்வாறான ஒரு கனவோடு பயணிப்பதாகத் தெரியவில்லை. ஒரு நாடு அபிவிருத்தி அடைய வேண்டுமாக இருந்தால், முன்னேற்றகரமான நாடாக மாற வேண்டுமா இருந்தால், இரண்டு விடயங்கள் அடிப்படையாகத் தேவைப்படும். ஒன்று நாட்டை நேசிக்கும் ஒரு உறுதியான தலைவர் வேண்டும். இரண்டு தலைவரின் வழிகாட்டலில் நாட்டுக்காக உழைக்கும், தியாகம் செய்யும் மக்கள் கூட்டம். உலகில் அபிவிருத்தி அடைந்த எந்த நாட்டினதும் முன்னேற்றத்தில் இந்த இரண்டும் அடிப்படையானது. இது சீனாவானாலும் மலேசியாவானாலும் சிங்கப்பூரானாலும் இதுவே யதார்த்தமாகும்.

துரதிஷ்டவசமாக இலங்கையின் சுதந்திரத்திற்காகப் போராடிய அனைவரும் நாடு சுதந்திரம் அடைந்த பின்பு இலங்கையை ஒரு முன்னேற்றகரமான நாடாகக் முன்கொண்டு செல்ல வேண்டும் என்ற திட்டத்தோடு நாட்டை வழி நடத்தியதாகத் தெரியவில்லை. முதன் முதலில் உருவாக்கப்பட்ட LSSP, UNP, SLFP ஆகிய இக்கட்சிகள் தங்களது கட்சிகளை நிலைப்படுத்திய சிந்தனைகளையே முன்னிறுத்தி செயல்பட்டன. இலங்கை வரலாற்றில் கட்சிகளின் எழுச்சியும் வீழ்ச்சியும் உடைவும் நாட்டை முன்னேற்ற வேண்டும் என்ற கருத்தியல் விவாதத்தால் அல்ல. கட்சிகளின் உள்முரண்பாடுகளும் சிந்தனைச் சிக்களும் அதிகாரப் போட்டியுமே ஆகும்.

நாட்டை முன்னேற்றகரமான ஒரு நிலைக்குக் கொண்டு வருவதற்கான முரண்பாடாக இருந்திருந்தால் ஏதோ ஒரு வகையில் நாடு முன்னேறியிருக்கும். எனவேதான் அரசியல் கட்சித் தலைவர்களாக மக்களால் நேசிக்கப்பட்டார்களே தவிர, நாட்டின் தலைவராக மக்கள் பார்க்க முடியாத நிலை தோன்றியது.

அண்மைக் காலத்தில் கட்சிகளையும் தாண்டி தமது அரசியல் தலைமையைத் தக்க வைத்துக் கொள்வதற்காக குறிப்பிட்ட இனத்தின் தலைவராக தன்னை இனம் காட்டும் ஓர் அரசியல் கலாச்சாரம் முன்னெடுக்கப்படுகின்றது. அண்மைக் கால வெளிப்பாடுகளாக இன்று சிங்கள தமிழ் முஸ்லிம் தலைவர்களாக கட்சியின் தலைவர்கள் பார்க்கப்படுகின்றார்கள். இதன் விளைவாக நாட்டிற்கு ஏற்பட்ட ஆபத்து என்னவென்றால், ஒவ்வொரு தலைவரும் முன்னெடுக்கும் செயற்பாடுகள் அடுத்த இனங்களால் சந்தேகக் கண் கொண்டு பார்க்கும் நிலை உருவாகியுள்ளது.

இரண்டாவது விடயத்தை எடுத்துக் கொள்வோமேயானால், முன்னர் குறிப்பிட்டது போன்று நாட்டை நேசிக்கும் தலைவர் இல்லாததினால் நாட்டை நேசிக்கும் மக்கள் உருவாக்கப்படவில்லை. ஒரு நாட்டின் அபிவிருத்தி, அதன் வளர்ச்சியில், மக்களை உருவாக்கும் இடங்களில் பாடசாலை, பல்கலைக்கழகம் என்பது முக்கியமானது.

துரதிஷ்டவசமாக எமது நாட்டில் பாடசாலை பாடவிதானங்கள் நாட்டை நேசிக்கும் மக்களையோ நாட்டை அபிவிருத்தி செய்யும் நடைமுறை சார்ந்த கல்வி திட்டத்தையோ காண முடியாமல் போனது. அறிவை சோதிக்கும் மனன சக்தியைச் சோதிக்கும் கல்வி முறையாகவே காணப்படுகிறது. விஞ்ஞானம், விவசாயம், தொழில்நுட்பம், கைத்தொழில் இன்னும் இவ்வாறான தொழில் சார்ந்த முன்னேற்றகரமான கல்விக் கொள்கைகள் உருவாக்கப்பட வேண்டும்.

இலங்கை ஒரு விவசாய நாடாக அதற்கான எல்லா வளங்களையும் கொண்டிருந்து இன்னும் விவசாயத் துறைக்கான வளர்ச்சியைக் காண முடியவில்லை. இந்த வேலைத் திட்டத்தில் மக்கள் உள்வாங்கப்படவில்லை. நாட்டின் முன்னேற்றத்தில் ஒரு குடிமகனாகிய நான் என்ன செய்ய வேண்டும் என்று வழிகாட்டப்படவில்லை. இதனால் நாடு பற்றிய, அதன் அபிவிருத்தி பற்றிய கவலை நாட்டு மக்களிடம் காணக் கிடைக்கவில்லை.

நாட்டு மக்களிடம் நாட்டுப் பற்று வளர்க்கப்பட வேண்டுமாக இருந்தால் அங்கு அமைதியும் சுதந்திரமும் அடுத்தவர்களை மதிக்கும் மனப்பான்மையும்



காணப்படும். இந்த விடயத்தில் இலங்கை மக்கள் சரியாக வழிநடத்தப்படாததன் விளைவு, இன்று இனங்களுக்கு இடையிலான மோதல் உருவாகியுள்ளது. சிங்கள தமிழ் பிரச்சினையாக கடந்த 30 வருடங்களாக ஏற்பட்ட உள்நாட்டுப் போர் முடிந்தவுடன் நாட்டின் சகல மக்களும் சந்தோஷப்பட்டனர்.

இலங்கையில் யுத்தம் முடிவடைந்து விட்டது. அதற்காக செலவிடப்பட்ட பணம் நாட்டின் அபிவிருத்திக்குப் பயன்படும், விலைகள் குறையும், நாட்டின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி அடையும், விரும்பிய இடத்தில் சந்தோஷமாக வாழலாம், தொழில் செய்யலாம் என்று அனைவரும் கனவு கண்டனர். யுத்த முடிவின் ஆரம்பம் வருடங்கள் அப்படித்தான் கழிந்து சென்றது. ஆனால் அது அதிக காலம் நீடிக்கவில்லை. சிங்கள-முஸ்லிம் முரண்பாடுகளாக அவை ஒரு மாற்றப்பட்டன.

விளைவு, அளுத்கம திகன என திட்டமிடப்பட்ட வன்முறைகள் உருவாக்கப்பட்டு, இந்த நாட்டின் பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய்கள் அழிக்கப்பட்டன. மின் இணைப்பு இல்லாத கடைகளிலும் மின் கசிவால் தீ பற்றி அதிசயம் எமது நாட்டில்தான் ஏற்பட்டது. எங்காவது கடை தீப்பற்றினால் இன்று எல்லோருக்கும் தெரியும், ஒரு முஸ்லிம் நபருக்குச் சொந்தமான கடையாக அது இருக்கிறது. அதற்குக் காரணம் மின் ஒழுக்கு இருக்கும் என்ற மனோநிலைதான் உருவாகியுள்ளது.

இக்காலப் பிரிவில்தான் முஸ்லிம்-சிங்கள மக்களின் இன நல்லுறவை அழிக்கக் கூடிய தீவிர சிந்தனை கொண்ட குழுக்கள் பெரும்பான்மை சமூகத்தில் தோன்றி இன்று வரை நாட்டிற்கும் அதன் அபிவிருத்திக்கும் சாபக்கேடான நிகழ்வாக மாறியிருக்கின்றது.

இது இவ்வாறிருக்க சமகாலத்தில் தமிழ் முஸ்லிம் முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் ஒரு நிகழ்ச்சி நிரல் அண்மைக் காலமாக வடக்கு கிழக்கு பிரதேசங்களில் இடம்பெற்று வருவதை காணலாம். முஸ்லிம் சமூகத்தைக் குறிவைத்து தாக்குதல், பொருளாதாரம், தனிமனிதன் மீதான தாக்குதல் என இது தொடர்கிறது. எனவே இன்று நாட்டில் வாழ்கின்ற சிங்கள, முஸ்லிம், தமிழர் அனைவரும் மோதிக் கொள்ளும் நிலைமை காணப்படுகிறது.

இவ்வாறான வருந்தத்தக்க நிகழ்வுகள் நடந்தேறி வருகின்ற ஒரு இத்தருணத்தில் தான் கடந்த வருடம் ஒக்டோபர் 24 நடைபெற்ற அரசியலமைப்பு சார்ந்த குழப்ப நிலைகளும் ஆட்சி மாற்றமும் கட்சி மாறல்களும் எமது நாட்டின் பொருளாதாரத்தில் மிகப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. 'மழை நின்றும் தூவானம் நிற்கவில்லை' என்ற பழமொழிக்கேற்ப இந்த அரசியல் முரண்பாடுகள் இன்னும் முடிந்ததாகத் தெரியவில்லை. அடுத்த ஜனாதிபதித் தேர்தல் வரும்வரை இந்நிகழ்வுகள் தொடர்வதற்கான சாத்தியப்பாடுகளே காணப்படுகின்றன.

இவ்வாறான கசப்பான அனுபவங்களுக்குப் பின்னாலும் நாட்டின் எதிர்காலத்தை, அதன் அபிவிருத்தியை நம்பிக்கையோடு எதிர்பார்க்கக் கூடிய ஒரு சூழ்நிலையும் வளர்ந்து வருவது மிகவும் மகிழ்ச்சியான ஒரு எதிர்பார்ப்பை எம்மில் உருவாக்கியுள்ளது.

அது பற்றி இங்கே பேசுவோமாக இருந்தால்,

1. அண்மையில் ஏற்பட்ட அரசியல் குழப்ப நிலையின்போது நீதிமன்றம் செயற்பட்ட விதமும் அரசியல் அழுத்தங்களுக்கு அப்பால் நீதியும் அரசியல் யாப்பும் பாதுகாக்கப்பட்டமை இலங்கையின் நன்மதிப்பை நாட்டு மக்களிடத்திலும் வெளிநாடுகளிலும் அதிகரிக்கச் செய்துள்ளது. எனவே நீதிமன்றங்களின் இவ்வாறான உறுதியான செயற்பாடுகள் அநீதி இழைக்கப்படும்போது குற்றவாளிகள் யாராக இருப்பினும் தண்டிக்கப்படுவார்கள் என்ற மனோநிலை உருவாகியுள்ளது. இதனால் குற்றச் செயல் குறைவடையும் சாத்தியப்பாடுகள் காணப்படுகிறது. இதன் மூலம் இனவாதிகளின் முறையற்ற செயற்பாடுகளும் குறைவடையும் சாத்தியப்பாடுகள் உருவாகியுள்ளது.

2. நாட்டையும் நாட்டின் அபிவிருத்தியையும் இன நல்லுறவையும் நேசிக்கும் சக்திகள் அதிகமாக பெரும்பான்மை சமூகத்திலிருந்து சிறுபான்மை சமூகத்திலிருந்தும் உருவாகியுள்ளதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இந்த வகையில் கண்டி ஃபோரம், புனருதய, UPM, தேசிய ஷூரா சபை, அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா போன்ற இன்னும் பல சிவில் அமைப்புகளைக் குறிப்பிடலாம்.

குறிப்பாகச் சொல்லப் போனால் கண்டி திகனயில் நடைபெற்ற கலவரத்தை கண்டி ஃபோரம் என்ற பெரும்பான்மை சமூகத்தைச் சார்ந்த பிரதிநிதிகள் தாமாகவே முன்வந்து, அங்கு உண்மையில் நடந்தது என்ன என்பதையும் முஸ்லிம் சமூகம் கலவரத்தின்போது திட்டமிட்டு தாக்கப்பட்டுள்ளது என்பதையும் அதற்கான

(பக்.14)

---

• முஜீபுர் ரஹ்மான். பி.எம்

# வடகிழக்கு ஆளுனர்களே! உங்களுக்கான என் தூது

வடகிழக்கு ஆளுனர்களே! 30 வருட யுத்தம் வடகிழக்கை மயான பூமியாக மாற்றியது. அங்கு நடமாடித் திரிபவர்கள் மயான பூமியின் நடைபிணமாக அலைந்து திரிகிறார்கள். இதனை நான் உங்களுக்கு எடுத்துக் கூறு வதற்கு நீங்கள் ஒன்றும் அறியாதவர்கள் இல்லை.

உங்கள் இருவரையும் எனக்கு நன்கு தெரியும். அதேபோல் என்னையும் உங்களுக்குத் தெரியும். நீங்கள் கலாநிதிகள் கல்வித் துறை மற்றும் அரசியல் துறையில் நீண்டகால அனுபவம் மற்றும் ஆய்வுகளை மேற்கொண்டவர்கள். இருந்தும் வடக்கைச் சேர்ந்தவன் என்ற முறையில் உங்களுக்கு ஒரு ஞாபகமூட்டல் செய்வது எனது கடமை என்பதால் இதனை வரைகிறேன்.

### ஜனாதிபதியின் பிரதிநிதிகள்

நீங்கள் இந்நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் ஏகப் பிரதிநிதிகள். உங்களை மக்கள் பிரதிநிதிகள் என்று கூற என் மனம் மறுக்கிறது. அதேபோல் இலங்கை அரசியல் யாப்பும் மறுக்கிறது. மேலும், நீங்கள் மத்திய அரசாங்கத்தின் செல்லப் பிள்ளைகள். மத்திய அரசு இடுகின்ற கட்டளைகளை -மன்னிக்க வேண்டும்- மத்திய அரசு என்று சொல்வதைவிட ஜனாதிபதி இடுகின்ற கட்டளைகளை அப்படியே பின்பற்றுகின்ற, செயற்படுத்துகின்ற, ஜனாதிபதியின் ஏவல்களை முன்னெடுக்கின்ற செயல்வீரர்கள்.

எனவே, உங்களை மதிப்பிடுவதென்றால் ஜனாதிபதியை மதிப்பிட வேண்டும். ஜனாதிபதி எப்படிப்பட்டவர்? அவரின் அரசியல் நகர்வுகள் எவ்வாறு அமைகிறது? ஜனாதிபதிக்கும் சமூகத்திற்கும் உள்ள தொடர்பு என்ன? அவர் எவ்வாறு சட்டம் ஒழுங்கு, யாப்பு என்பவற்றை மதிக்கின்றார்? போன்ற கேள்விகளுக்கு நீங்கள் பதிலாக அமைகிறீர்கள். ஜனாதிபதி எதனைச் செய்வாரோ அதனையே நீங்களும் செய்வீர்கள் என்பது குறித்து சில கேள்விகள் எழுகின்றன. அதற்கான பதில் எதுவாக இருக்கும் என்ற கேள்வியும் எழுகின்றது.





### ஓராண்டு காலப் பதவி

ஆனால், நீங்கள் சிறந்த செயல் வீரர்கள் என்பதை நான் நன்கு அறிவேன். இது உங்களுக்குக் கிடைத்த தங்கமான பரிசு. எனவே, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்னமும் ஓர் ஆண்டு வரைதான் பதவியிலிருக்கப் போகிறார். அவர் கடந்த ஒக்டோபர் மாதம் அரசியல் யாப்புக்கு முரணாக ஜனநாயக விரோத செயற்பாடு ஒன்றைச் செய்தார். இறுதியில் உச்ச நீதிமன்றம் அவரை யாப்புக்குப் பொறுப்புக் கூற வைத்ததை நீங்கள் நன்கு அறிவீர்கள்.

ஆனால், இந்த ஆளுனர் நியமனத்தை நோக்குகின்றபோது, 2018 ஒக்டோபரில் நடந்த ஜனநாயக விரோத ஆட்சிக் கவிழ்ப்புக்கு யார் யார் சாதகமாகவும், ஒத்துழைப்பாகவும் இருந்தார்களோ அவர்களுக்கு வழங்கியுள்ளதை அவதானிக்க முடிகின்றது. மேலும், முஸ்லிம் மற்றும் தமிழ்க் கட்சிகள் அவருக்கு எதிராகச் செயற்பட்டமையும் இந்நியமனத்திற்குப் பக்கபலமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

எது எவ்வாறாயினும், நீங்கள் செயற்பாட்டாளர்கள் என்ற வகையில்
யுத்தத்தின் பின்னர் வடகிழக்கு
திற்கு அம்மக்களின் பிரச்சினைகளை உணர்ந்து அவர்களில் ஒருவராக இருந்து அம்மக்களுக்காக சேவை செய்யக் கூடிய ஒருவரை இதுவரை ஆளுனராக நியமிக்கவில்லை.

இது உங்களது உழைப்புக்கும், நேர்மைக்கும் உங்களுக்குக் கிடைத்த பரிசு, அது ஒரு அரிய சந்தர்ப்பம். அதனை வரவேற்கிறேன். எனவே, இந்த ஒரு வருட காலத்திற்குள் வடக்கு மற்றும் கிழக்கு மக்களின் மயான பூமியாகக் காணப்படுகின்ற தாயக பூமியை மக்களின் உரிமை மற்றும் அபிவிருத்தி பூமியாக மாற்றுவீர்கள் என நம்புகிறேன்.

### உங்களுக்கான விடயங்கள்

விஷேடமாக வடகிழக்கு ஆளுனர்கள் இருவரும் சந்திப்பொன்றை மேற்கொள்ளுங்கள். அதில் வடகிழக்குக்கான சிறந்த செயற்திட்டம் ஒன்றை முன்மொழியுங்கள். நாளாந்தம் சிதைவடைந்து வரும் தமிழ் - முஸ்லிம் உறவை வளர்ப்பதற்காக ஒரு வேலைத்திட்டம் ஒன்றை முன்னெடுக்க முன்மொழியுங்கள். இது இன்றைய

பிரதானமாக வடகிழக்கில் பாரிய காணிப் பிரச்சினைகள் காணப்படுகின்றன. மாகாண சபைக்குக் கீழ் உள்ள காணி அதிகாரத்தைப் பயன்படுத்தியும் மற்றும் ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தியும் இம்மக்களின் காணிப் பிரச்சினைக்கு நிலையான தீர்வொன்றைப் பெற்றுக் கொடுப்பது மிகவும் முக்கியம் என்பதை நான் உங்களுக்கு உணர்த்தத் தேவை இல்லை என நினைக்கிறேன்.

2018 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்குள் வடக்கு கிழக்கில் உள்ள காணிகளில் காணப்படும் சகல பிரச்சினைகளையும் முடிவுக்குக் கொண்டுவந்து விடுவிப்பதாக 2018 ஒக்டோபர் மாதம் 04ஆம் திகதி ஜனாதிபதி கூறியதாக ஊடகப் பிரிவு தெரிவித்திருந்தது. ஆனால், 2019 ஆம் ஆண்டின் முதலாம் (ஜனவரி) மாதமும் நிறைவுறப் போகின்றது. ஜனாதிபதியின் இக்கூற்றுக்கு இதுவரை எந்த முன்னெடுப்பும் இல்லை. எனவே, ஜனாதிபதியின் இந்தத் திட்டத்தை உடனடியாக முன்னெடுப்பீர்கள் என நம்புகிறேன்.

யுத்தத்தின் கோரப் பிடியில் சிக்கிச் சீரழிந்து, சின்னாபின்னமாகி, பல இழப்புக்களைச் சந்தித்து, பிரதேசமற்றவர்களாக இன்னும் சரியான தீர்வின்றி அங்கும் இங்கும் அலைந்து திரியும் வடக்கு முஸ்லிம்களின் நிரந்த மீள்குடியேற்றத்திற்கு அழகிய வழிமுறை மற்றும் தீர்வொன்றை ஏற்படுத்துமாறு அன்பாகக் கேட்டுக் கொள்கிறேன். ஏனெனில், 1990 ஆம் ஆண்டு புலிகளால் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட வடக்கு முஸ்லிம்களில் இதுவரை சுமார் 40 வீதமானவர்களே மீள்குடியேறியுள்ளார்கள். ஏனையவர்கள் தொடர்ந்தும் நாட்டின் ஏனைய பிரதேசங்களிலேயே வாழ்கிறார்கள். வடக்கே இவர்களதும் தாயக பூமி.

நீங்கள் சிறந்த சிந்தனையாளர்கள், கல்வியலாளர்கள், யுத்தம் எத்தனையோ சிறார்களின் வாழ்வை சீரழித்துள்ளது. அதாவது, யுத்தத்தினால் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் அதிகரித்துள்ளது. அக்குடும்ப சுமையை சுமக்க முடியாத பெண்கள் தங்களது பிள்ளைகளின் வாழ்வையும் அவர்களின் எதிர்காலத்தையும் இழக்கிறார்கள். எனவே, யுத்தம் தந்த பரிசான அனாதைச் சிறார்களின் வாழ்வில் ஒளி ஏற்றுங்கள். அவ்வாறு சீரழியும் சிறார்களுக்காகவும், மொத்தத்தில் சிறந்த கல்வி முறைகள் இன்றி காணப்படும் வடகிழக்குப் பிரதேசங்களுக்கு இலவத்துவ பாகுபாடின்றி சமத்துவ அடிப்படையில் சிறந்த கல்வித் திட்டம் ஒன்றை முன்னெடுத்து, முன்னுதாரணமாக நடந்து காட்டுங்கள்.

இவைகளுக்கு அப்பால், யுத்தத்தின் இன்னுமொரு அகோரம்தான் காணாமலாக்கப்பட்டோர். தனது கணவனைத் தேடி நாளாந்தம் எத்தனையோ பெண்கள் அலைகிறார்கள். அவ்வாறே, தனது பிள்ளையைத் தேடி பல ஆயிரம் தாய்மார்கள் நாளாந்தம் சிறைச்சாலை ஏறி இறங்குகிறார்கள். அதேபோல் அண்ணனை இழந்த சகோதரிகள் அண்ணனை விடுவிக்கக் கோரி வீதி ஓரங்களில் நாளாந்தம் போராட்டம் நடத்துகிறார்கள். இவைகளுக்கு நீங்கள் இருவரும் நினைத்தால் நிச்சயமாக நியாயமான தீர்வொன்றினைப் பெற்றுக் கொடுக்க முடியும். இதனை சிறந்த முறையில் தீர்த்து வைக்குமாறு உங்களை இரு கரம் கூப்பிக் கேட்கிறேன்.

(பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

EDITORIAL
49, Sri Mahinda Dharma Mawatha (Perth Road), Colombo-09.
Tel: 0112 691258, 0113 642663
E-mail: meelparvai@gmail.com, Web: www.meelparvai.net

## பிரச்சினையை நோக்கிய அடுத்த கட்ட நகர்வாக புதிய யாப்பு அமையக் கூடாது

பிரதமர் தலைமையிலான அரசியலமைப்பு சபையின் வழிநடத்தல் குழுவின் நிபுணர் குழு தமது அறிக்கையை பாராளுமன்றத்துக்குச் சமர்ப்பித்திருக்கிறது. இந்த அறிக்கையில் இது ஒரு வரைவு என நீர்க்குறி இடப்பட்டிருந்தாலும் இது ஒரு வரைவே அல்ல என அரசாங்கம் அழுத்தமாகக் கூறியிருக்கிறது. ஆனாலும் தனது தலைமையிலான வழிநடத்தல் குழு அதன் பணியைப் பூர்த்தி செய்துவிட்டதாகத் தெரிவித்துள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, நிபுணர் குழுவின் அறிக்கையில் உள்ளடங்கியுள்ள விடயங்களில் சகல கட்சிகளினாலும் இணக்கப்பாட்டுக்கு வரக் கூடிய விடயங்களைத் தெரிவு செய்து கருத்தொருமிப்புக்கு வந்து அரசியலமைப்பு வரைவொன்றை அரசியலமைப்பு சபை தயாரிக்க முடியும் என்றும் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இதுவரை உருவாக்கப்பட்ட மூன்று அரசியல் யாப்புக்களும் இலங்கை எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு தரவில்லை என்பதோடு, நாட்டை முன்னேற்றுவதற்கான எந்த வழிவகைகளையும் நடைமுறைப்படுத்தும் விதமாகவும் அமையவில்லை. மாற்றமாக நாட்டில் பௌத்த மதத்தை முன்னிலைப்படுத்தி ஏனைய சமூகங்களை ஒடுக்கும் வகையிலேயே யாப்புக்கள் வரையப்பட்டுள்ளன. அவ்வப்போது ஆட்சியில் இருக்கின்றவர்களின் தேவைக்கேற்ப வரையப்பட்ட யாப்புக்களாகவே முன்னைய மூன்று யாப்புக்களும் வரையப்பட்டிருந்தன.

குடியரசுக்கு முந்திய டீ.எஸ். சேனாநாயக்கவின் சோல்பரி யாப்பு, இந்திய வம்சாவழி தோட்டத் தொழிலாளர்களின் பிரஜாவுரிமையைப் பறித்தது. பண்டாரநாயக்கவின் முதலாவது குடியரசு யாப்பு சிங்களத்தை அரச கரும மொழியாகப் பிரகடனப்படுத்தி தமிழரின் மொழியுரிமையைப் பறித்தது. ஜேஆர் ஜயவர்தனவின் மூன்றாவது குடியரசு யாப்பை இவை எல்லாவற்றுக்கும் முத்தாய்ப்பு வைத்தது போல, தமிழரின் உரிமைப் போராட்டத்துக்கே காரணமாகி நாட்டை முப்பது வருட யுத்தத்துக்குள் கொண்டு போய்விட்டது. சுதந்திரம் கிடைத்து 70 வருடங்களின் பின்னர் தற்போது உருவாக்கப்படவுள்ள புதிய அரசியல் யாப்பு தமிழர் பிரச்சினைக்கு நியாயமான அளவில் தீர்வைப் பெற்றுத் தரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனாலும் தூரதிருஷ்டி இல்லாத இலங்கையின் அரசியல் தலைமைகள் நாட்டின் மொத்தப் பிரச்சினைகளுக்கும் தீர்வு தரும் வகையில் அன்றி, பிரச்சினைகளை இடம் மாற்றி ஒட்டுப் போடும் முயற்சியினையே புதிய அரசியல் யாப்பினூடாக முன்னெடுப்பதாகத் தெரிகிறது. தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு வரையப்படுவதாகச் சொல்லி விட்டு இலங்கை முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகளை கவனத்தில் எடுக்காமல் முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகளைத் தள்ளி வைத்திருக்கின்ற ஒரு நிலையையே அரசியல் யாப்பு உருவாக்கப் பணிகள் தெளிவுபடுத்துகின்றன.

பௌத்த மதத்துக்கு முன்னுரிமை என்ற பண்டாரநாயக்க காலத்து ஷரத்துகளே புதிய அரசியல் யாப்பிலும் உள்வாங்கப்பட்ட போதும், அது ஒட்டுமொத்த பௌத்த மக்களின் தேவையாகவன்றி பௌத்த தீவிரவாத அமைப்புக்களைத் திருப்திப்படுத்தும் விதமாகவே மீளவும் உள்வாங்கப்பட்டிருப்பது தெரிகிறது. அந்த வகையில் பௌத்த தீவிரவாதிகளின் மேலாதிக்கம் நிலவுகின்ற ஒரு சூழலில் அரசியல் யாப்பைத் தயாரிப்பவர்கள் சூழ்நிலைகளின் கைதிகளாக இருந்துதான் தமது பணியை முடிப்பார்கள் என்பதுதான் எதிர்பார்க்க முடியுமானது.

பௌத்த மேலாதிக்க உணர்வு தற்போதைய சூழலில் முஸ்லிம் சமூகத்தின் மீது ஏவப்பட்டுள்ளதனால் இந்தச் சூழலில் வரையப்படுகின்ற அரசியல் யாப்பு நிச்சயமாக பௌத்த மேலாதிக்கவாதிகளைத் திருப்திப்படுத்தும் வகையில் முஸ்லிம்களுக்கு விரோதமானதாகவே வரையப்படுவதற்கான வாய்ப்பு அதிகமாகவே இருக்கிறது.

நாடு அதற்கென உருவாக்கப்படுகின்ற யாப்பின் அடிப்படையிலேயே செயற்படும். அந்த வகையில் யாப்பின் மூலம் உறுதி செய்யப்படுபவைகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை. அவ்வப்போது ஆட்சிக்கு வருகின்ற அரசியல் தலைமைகளுக்கு வால் பிடிப்பதன் தேவையானதைச் சாதித்துக் கொள்ளலாம் என்ற அடிமைத் தனமான சிந்தனையில் இருந்து விடுபட்டு முஸ்லிம் சமூகத்தின் உரிமைகளையும் தேவைகளையும் யாப்பு ரீதியாக உறுதிப்படுத்திக் கொள்வதற்கு முஸ்லிம் சமூகம் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இப்பத்திரிக்கையானது இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவிற்கு ஒத்துழைப்பு வழங்குகிறது.

வாசகர் உரிமை

நாம் வாசகர்களின் உரிமைகளுக்கு மதிப்பளிப்பதோடு இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் பத்திரிகைத்துறையினருக்கான தொழில்சார் ஒழுக்கக்கோவையின்படி கருமமாற்றவும் தம்மை அர்ப்பணித்துள்ளோம். அதனால் எமது பத்திரிகையில் பிரசுரமாகின்ற விடயங்கள் தொடர்பாக ஏதாவது மனக்குறைகள் அல்லது பிரச்சனைகள் இருப்பின் அதுபற்றி எம்மோடு தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். உங்கள் மனக்குறைகள் அல்லது அதிருப்திகள் குறித்து நாம் கவனம் செலுத்தி அவற்றை நிறைவு செய்ய முயற்சி செய்வோம்.

அதன் மூலம் உங்களால் திருப்தியடைய முடியாவிட்டால்

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு செய்யலாம்.

மேலதிக விபரங்களுக்கு

ශ්‍රී ලංකා පුවත්පත් පැමිණිලි කොමිසම
இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
Press Complaints Commission of Sri Lanka

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
இல. : 96, கிருல வீதி, கொழும்பு - 05
தொலைபேசி : 011-5353635
பெக்ஸ் : 011-5335500
ஈமெயில் : srockwood@pccsl.lk
இணையத்தளம் : www.pccsl.lk

# 2015 - 2019 போலியும் பீடையும் நிறைந்த காலப்பகுதி

• திசரணீ குணசேகர

மந்திரமொன்றை ஜபித்துக் காட்டு யானையை அடக்கச் செல்லும் நபரொருவர் யானைத் தாக்குதலுக்கு உள்ளாகி கொல்லப்படும் காணொளி இணையத்தளத்தில் உலாவுகிறது. இச்சம்பவம் வெஹெரகல நீர்த்தேக்கத்திற்கு அருகிலுள்ள யால 3ஆம் வலயத்தில் இடம்பெற்றுள்ளதாகவும் சம்பவத்தில் பலியானவர் வனஜீவராசிகளை பார்வையிடச் சென்ற உள்ளூர் சுற்றுலாப் பயணி என்றும் கூறப்படுகிறது. அறிவுபூர்வமற்ற, போலி மூட நம்பிக்கைகளால் ஒருவரது புத்தி மாத்திரமல்ல, சாதாரண அறிவு கூட மங்கிப்போய் அது தனது அழிவுக்கே ஆபத்தாய் அமையும் என்பதற்கு இதுவொரு சிறந்த உதாரண.

இம்மாதம் (ஜனவரி) 5 ஆம் திகதி டெய்லி மிரர் பத்திரிகையில் பிரசுரமான செய்தியொன்றின் படி, சுமனதாச அபேகுணவர்தன என்னும் ஜோசியருக்கு மிஹின் லங்கா நிறுவனத்தினால் 2007 ஆம் ஆண்டில் 8.2 மில்லியன் (82 லட்சம்) ரூபா பெறுமதியான மோட்டார் வாகனமொன்று வழங்கப்பட்டுள்ளது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் உத்தரவின் பிரகாரமே இப்பரிசு வழங்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

ராஜபக்ஷவுக்கு 10 இற்கும் மேற்பட்ட சுப முகூர்த்தங்களை கணித்துக் கொடுத்ததாகவும் இவர் குறித்த ஆங்கிலப் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலை நடாத்துவது தொடர்பான அறிவித்தலை வழங்கும் சுப நேரம் 2014 நவம்பர் 20 ஆம் திகதி தயாராகும் போது அதற்கு மறுதினம் அதாவது 21 ஆம் திகதி ராஜபக்ஷவின் எதிர்வரும் அரசியல் பயணத்திற்கு, ராஜபக்ஷவின் மூன்றாவது ஜனாதிபதிக் கனவுக்கு பேரிடி விழவுள்ளது என்பது பற்றி கிரக நட்சத்திரங்களைப் பார்த்து ஜோசியம் கூறும் அபேகுணவர்தனவுக்கு அல்லது அதுபோல் ஜோசியம் கூறுபவர்களுக்கு அறிந்து கொள்ள முடியாமல் போனது. ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் சுகாதார அமைச்சராகவும் சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளராகவும் இருந்த மைத்திரிபால சிறிசேன அரசாங்கத்திலிருந்து விலகி கூட்டு எதிர்க்கட்சியுடன் இணைந்து மஹிந்தவுக்குப் போட்டியாக ஜனாதிபதி வேட்பாளராக மாறிய நிகழ்வே அரங்கேறியது.

### மைத்திரிபால ஜனாதிபதி வேட்பாளரானது தவறா?

2018 ஒக்டோபர் 26ஆம் திகதி மைத்திரிபால சிறிசேன முன்னெடுத்த அரசியலமைப்புக்கு முரணான ஆட்சி மாற்ற நடவடிக்கையானது 2014 இல் மைத்திரி உள்ளிட்ட ஜனாதிபதி வேட்பாளர் பதவியை பொறுப்பேற்ற தன் பிறகு மக்களுக்கு வழங்கிய முதலாவது வாக்குறுதியை மீறுவதற்கு அவருக்கு இடமளித்தமையாகும்.

### நிறைவேற்று அதிகார முறையை நீக்கும் வாக்குறுதி

2014 நவம்பர் 21ஆம் திகதி கொழும்பு புதிய நகர மண்டபத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பை மைத்திரிபாலவின் புதிய அரசியல் பயணத்தின் ஆரம்ப கட்டமாக குறிப்பிட முடியும். தன்னை ஏன் ஜனாதிபதியாகத் தேர்ந்தேடுக்க வேண்டும் என்பதை அவர் இலங்கை வாழ் மக்களுக்கு முதன் முதலாகத் தெளிவுபடுத்தினார். தான் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டால் நாட்டில் முன்னெடுக்கும் மாற்றங்கள் பலவற்றையும் அவர் குறிப்பிட்டிருந்தார். அவற்றுள் 100 நாட்களுக்குள் நிறைவேற்று அதிகார மிக்க ஜனாதிபதி முறையை இல்லாதொழிப்பது முதன்மையான விடயமாகக் காணப்பட்டது.

ஜனாதிபதி வேட்பாளராக மைத்திரிபால சிறிசேன இந்நாட்டு மக்களுக்கு வழங்கிய முதலாவது வாக்குறுதி இதுவாகும். இற்றைக்கு நான்கு வருடங்களுக்கு முன் தவறொன்று இடம்பெற்றிருப்பதாக இருந்தால் அது மைத்திரிபாலவினை ஜனாதிபதி வேட்பாளராக நியமித்ததல்ல. நிறைவேற்று அதிகார முறையை நீக்கிவிடுவதாக நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை மீறியமையாகும். இந்தத் தவறுக்கு பொறுப்புச் சொல்ல வேண்டியது மைத்திரிபால மாத்திரமல்ல, ரணில் விக்ரமசிங்க உள்ளிட்ட ஐ.தே.க.வும் தான்.





சுமனதாச அபேகுணவர்தன என்பவர் ஒரு ஜோசியர். பிற்பட்ட காலத்தில் முன்னாள் ஜனாதிபதி ராஜபக்ஷ இவரை ''அரச ஜோசியர்'' என்னும் பெயரில் பிரபல்யப்படுத்தினார். அத்துடன், தேசிய சேமிப்பு வங்கி, ஊழியர் சேமலாப நிதியம் போன்ற நிறுவனங்களின் பணிப்பாளராகவும் சுயாதீன தொலைக்காட்சி சேவையின் ஆலோசகராகவும் நியமித்தார்.

ஜோதிடர் அபேகுணவர்தனவின் ஆலோசனையின் பிரகாரமே உரிய காலப்பகுதிக்கு முன்னர் அதாவது 2014 இல் ஜனாதிபதித் தேர்தலை நடாத்தும் தீர்மானத்திற்கு மஹிந்த ராஜபக்ஷ வந்துள்ளார் என்பது பிரசித்தமானதொரு விடயம். மஹிந்த ராஜபக்ஷ 2015 ஜனாதிபதித் தேர்தலை மாத்திரமல்ல, அதற்கடுத்த ஜனாதிபதித் தேர்தலையும் வெற்றி கொள்வார் என 2015 ஜனவரி 04ஆம் திகதி ஆங்கிலப் பத்திரிகையொன்றிற்கு வழங்கிய செவ்வியில் அபேகுணவர்தன தெரிவித்திருந்தார்.

இந்நாட்டிலுள்ள பல்வேறு ஜோசியர்கள் இந்தக் கருத்தை ஆமோதித்தனர். மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்தால் துப்பாக்கியால் தன்னைத் தானே சுட்டுக் கொல்வேன் என ஒரு ஜோசியர் பகிரங்கமாகவே கருத்துத் தெரிவித்திருந்ததுடன், மற்றுமொரு ஜோசியர் ராஜபக்ஷ தோல்வியடைந்தால் தன்னைத் தானே தீயிட்டு தற்கொலை செய்துகொள்வதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

இந்நாட்டின் அரசியல்வாதிகளுள் பெரும்பாலானோர் ஜோசியத்தை நம்புகிறார்கள். ஜோசியர்கள் இவ்வாறான கருத்துக்களைச் சொல்லும் போது தனது வெற்றி உறுதியாகி விட்டது என ராஜபக்ஷ நம்புவது ஒன்றும் வியப்பல்ல. 2015 இல் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் என்பதாக மஹிந்த ராஜபக்ஷ 2014 ஆம் ஆண்டு நவம்பர் 20 ஆம் திகதி அறிவித்தலொன்றை விடுத்திருந்தார். இவ்வறிவித்தலுக்கான சுப முகூர்த்தம், சுபநேரம் போன்றவற்றை கணித்துக் கொடுத்தவர் அரச பதவிகள், சொகுசு மோட்டார் வண்டி உள்ளிட்ட இதர வரப்பிரசாதங்களை உரித்தாக்கிக் கொண்ட அரச ஜோசியர் சுமனதாச அபேகுணவர்தன ஆவார். இதற்கான சுபநேரம் மாத்திரமல்லாமல் வேட்புமனுவினை தாக்கல் செய்வது முதல் ஆரம்பக் கூட்டத்தை நடாத்துதல், வாக்களித்தல் வரையிலான இவ்வேறு நிகழ்வுகளுக்காக வேண்டி சுப

ஐ.தே.க. மேற்கொண்ட தீர்மானங்கள் மீளவும் கடும் மீளாய்வுக்கு உட்படுத்தக் காரணமாய் அமைந்துள்ளது. ஐ.தே.க.வின் ஒரு சில ஆதரவாளர்கள் சிறிசேனவுக்கும் சு.க.வின் சில உறுப்பினர்கள் விக்ரமசிங்கவுக்கும் பலவிதமான பட்டங்களைச் சூட்டி இழிவான முறையில் கதைத்தார்கள். இற்றைக்கு நான்கு வருடங்களுக்கு முன்னர் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்ரமசிங்க ஆகிய இரண்டு விடயங்களின் காரணமாகவே ராஜபக்ஷவை தோல்வியடைச் செய்ய முடிந்தது.

விக்ரமசிங்கவின் உதவியினாலேயே சிறிசேனவுக்கு ஜனாதிபதியாக முடிந்தது. சிறிசேனவின் உதவியினாலேயே விக்ரமசிங்கவுக்கு பிரதமராக முடிந்தது. வரலாற்று முக்கியத்தும் மிக்க ஜனாதிபதித் தேர்தலுக்கு நான்கு வருடங்கள் பூர்த்தியாகும் இம்மாதத்தில் கடந்த காலத்தைத் திரும்பிப் பார்க்கும் போது மைத்திரிபால சிறிசேனவை கூட்டு எதிரணியின் பொதுவேட்பாளராக நியமித்து அவரை ஜனாதிபதிக் கதிரையில் அமரச் செய்தது அர்சியல் தவறொன்றா என்கின்ற கேள்வி மேலெழுகின்றது.

2014 இல் ராஜபக்ஷவுக்கு எதிராகத் திரண்ட எதிரணிக்கு முன்னால் காணப்பட்ட மிகப் பெரும் சவால் ஜனாதிபதித் தேர்தலில் ராஜபக்ஷவை தோற்கடிக்க வேண்டும் என்பதாகும். இந்தச் சவாலை வெற்றிகொள்வதற்கு ராஜபக்ஷவை எதிர்க்கும் சகல அமைப்புக்களுக்கும் தலைமை தாங்கும் ஜனாதிபதி வேட்பாளர் ஒருவர் தேவைப்பட்டார். இந்தத் தேவையைப் பூர்த்திசெய்வதற்கு ரணில் விக்ரமசிங்கவிற்கோ, சஜித் பிரேமதாசவிற்கோ, ரவீ கருணாநாயக்கவிற்கோ முடியாமல் போயுள்ளது. மைத்திரிபாலவின் வருகையின் மூலம் அவ்வெற்றிடம் பூர்த்தியாக்கப்பட்டது.

சிறிசேன வேட்பாளராகக் களமிறங்காதிருந்தால் 2015 ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த வெற்றிபெறுவார் என்பது உறுதி. அப்படி நடந்திருப்பின் தற்பொழுது இலங்கையில் ஜனநாயகம் முழுமையாக குழிதோண்டிப் புதைக்கப்பட்டு இந்நாடு ராஜபக்ஷாக்களின் இராசதாணியாக மாறியிருக்கும் என்பதே திண்ணம். தவறு என்னவென்றால் மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதி வேட்பாளராக அல்லது ஜனாதிபதியாக தெரிவுசெய்ததல்ல. 2014 நவம்பர் 21ஆம் திகதி ராஜபக்ஷ அரசாங்கத்திலிருந்து விலகி

சிறிசேன - ராஜபக்ஷ ஒக்டோபர் சூழ்ச்சியின் மூலம் நாட்டிற்கு -குறிப்பாக பொருளாதாரத்திற்கு மிகப்பெரும் பாதிப்பு ஏற்பட்டது திண்ணம். எனினும் அதில் சாதகமான பெறுபேறுகளும் இல்லாமல் இல்லை. ஒன்று, 19ஆவது திருத்தத்தின் மூலம் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையின் விஷம் இல்லாமல் செய்யப்பட்டது என்கின்ற நம்பிக்கை போலி என உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. நிறைவேற்று அதிகார முறையை இல்லாமல் செய்வதாக மைத்திரிபால வழங்கிய வாக்குறுதியும் தான் ஒரு காலப்பகுதிக்கு மாத்திரமே ஜனாதிபதியாக இருப்பேன் என அவர் தெரிவித்த கருத்தும் போலியான கதையென்று சிந்திக்கவும் முடியாது.

ஜனாதிபதியாக மைத்திரிபாலவின் முதலாவது காலப்பகுதி மிகவும் ஜனநாயக பூர்வமான முறையில் கழிந்தது. ஜனாதிபதிப் பதவியின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்தும் 19ஆவது திருத்தத்தை நிறைவேற்ற ஏனைய தலைவர்களை விடவும் அவரே முன்னின்று உழைத்தார்.

எனினும் காலப்போக்கில், ஜனாதிபதிப் பதவிக்கு வருகின்ற சகலரையும் பீடிக்கும் கட்டித் தழுவல் நோய் இவரையும் பீடித்தது. நிறைவேற்று அதிகார முறையை நீக்குவதற்குப் பகரமாக எந்த முறையிலேனும் மீண்டும் ஒரு தடவை ஜனாதிபதிப் பதவிக்கு வருவதே அவரது எதிர்பார்ப்பாகக் காணப்பட்டது. மஹிந்த ராஜபக்ஷவுடன் கூட்டுச் சேர்வதற்கு இவர் தூண்டப்பட்டமையும் அவரைப் பீடித்த பதவி மோகம் எனக் கூறின் பிழையாகாது.

ஒக்டோபர் 26 சூழ்ச்சியின் மூலம் புலப்படுவது யாதெனில் ஜனாதிபதிப் பதவியை வகிக்கும் சகலரது சிந்தனையையும் அப்பதவி சிக்கலுக்குள் தள்ளிவிடும் என்பதாகும். இரண்டாவது தடவையாக ஜனாதிபதியாகும் சிறிசேனவின் எதிர்பார்ப்பு வெறும் கனவு மாத்திரமே என்பதை சிறிசேனவை தவிர மற்றைய அனைவரும் அறிந்துவைத்துள்ளனர். ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக

(பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கில் தலையெடுக்கும் இனவாதம்

## தமிழ் முஸ்லிம் உரையாடலுக்கான தேவை

• கலாநிதி றவூப் ஸெய்ன்

கிழக்கு மாகாணத்தின் ஆளுனராக ஹிஸ்புல்லாஹ் நியமிக்கப்பட்டதை அடுத்து கிழக்கில் தமிழ்-முஸ்லிம் நல்லுறவு பாதிக்கப்பட்டுள்ளதாக சில தமிழ் அரசியல்வாதிகள் பிரச்சாரம் செய்து வருகின்றனர். கிழக்கின் முதலமைச்சராக ஹாபிஸ் நஸீர் அஹ்மத் தெரிவான போதும் தமிழ் ஊடகங்கள் மற்றும் அரசியல்வாதிகள் இதுபோன்ற புரளிகளை கிளப்பியமை பலருக்கு நினைவில் இருக்கும்.

கடந்த ஆண்டில் அக்கரைப்பற்று பகுதியில் முஸ்லிம் ஒருவர் தமிழர்களால் தாக்கப்பட்ட சம்பவம் உள்ளிட்டு சமீபத்தில் ஏறாவூர் ஐயங்கேணியைச் சேர்ந்த ஷஹீத் என்பவர் முகத்துவார வீதி வழியாக சவுக்கடி ஊடாக ஏறாவூருக்குத் திரும்பியபோது கடுமையாகத் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட எத்தனிக்கப்பட்டது. அதேவேளை, முஸ்லிம் இளைஞர் ஒருவரை நிர்வாணமாக்கித் தாக்கிய சம்பவம் மட்டக்களப்பு மாவட்டத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

தமிழ் தேசியப் போராட்டத்தை ரணிலின் சூழ்ச்சித் திட்டத்தில் சிக்கி காட்டிக் கொடுத்த கருணா அம்மான், தற்போது ஆளுனர் ஹிஸ்புல்லாஹ்வை பதவி விலக்க பத்தாயிரம் கையொப்பங்களை சேகரிக்கும் 'சமூகப் பேராட்டத்தில்' குதித்துள்ளார்.

முதலமைச்சராக ஹாபிஸ் நஸீர் பதவி வகித்த காலத்தில் வேலை வாய்ப்பில் தமிழ் இளைஞர்கள் புறக்கணிக்கப்பட்டதாகவும் அரச நிருவாகத்தில் முஸ்லிம்களே இணைக்கப்பட்டதாகவும் வாதாடிய கருணா, கிழக்கில் முஸ்லிம் ஆதிக்கம் பரவி வருவதாக பச்சையாகவே அறிக்கை விட்டவர்.

கிழக்கு மாகாணத்தில் தமிழ்-முஸ்லிம் நல்லுறவுக்கு ஒரு நீண்ட வரலாறு உண்டு. ஆய்வாளர் சிற்றம்பலம் கூறுவதுபோன்று முஸ்லிம்களும் தமிழர்களும் பிட்டும் தேங்காய் துருவலும் போன்று இரண்டறக் கலந்து ஐக்கியப்பட்டிருந்தனர். ஆயுதக் குழுக்களின் வருகையின் பின்னர் இந்நிலமை மாற்றமடைந்தது.

திருகோணமலை சண்முகா தமிழ் வித்தியாலயத்தில் தற்காலிக இடமாற்றத்திற்குப் பின்னர் மீண்டும் பாடசாலை திரும்பியுள்ள முஸ்லிம் ஆசிரியைகளின் மீது அதிபர் காட்டி வரும் துவேசமும் பகையுணர்வும் தமிழ்-முஸ்லிம் நல்லுறவு குறித்த பாரிய ஐயப்பாட்டை உருவாக்குகின்றது.

கிழக்கில் தமிழ் அரச நிருவாகிகள், அரசியல் தலைவர்கள், களயதார்த்தங்களைப் புரிந்துகொள்ளாத கல்வியறிவற்ற பாமரர்கள் ஆகிய பல தரப்பினரும் முஸ்லிம்கள் குறித்து அவ்வப்போது புனைந்துரைக்கும் கட்டுக்கதைகள் இனத்துவேஷத்தை வளர்த்து வருகின்றது.

அரசியல் ஒட்டாண்டிச் தனத்தில் இருக்கும் கருணா அம்மான் போன்றவர்கள் கூறுவது போல, கிழக்கு மாகாணத்தின் பெரும்பான்மையான நிருவாக அதிகாரிகள் முஸ்லிம்கள் அல்லர். கிழக்கு மாகாணத்தில் கல்வி மற்றும் பொது நிருவாகத் துறை அதிகாரத்தில் இருக்கும் பெரும்பான்மையானோர் தமிழர்களே.

அதேவேளை, முன்னாள் கிழக்கு முதலமைச்சர் வரதராஜ பெருமாள் காலத்தில் தமிழ் ஆயுதக் குழுக்களால் முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் குறித்தும், காத்தான்குடியில் தொழுகையில் ஈடுபட்டிருந்த முஸ்லிம்கள் மீது நடத்தப்பட்ட கொலை வெறித் தாக்குதல்கள் குறித்தும் கருணா வசதியாக மறந்து போவதும் கிழக்கில் ஆளுனராக அல்லது முதலமைச்சராக முஸ்லிம் ஒருவர் நியமிக்கப்படும்போது பொங்கி எழுவதும் கிழக்கில் தலையெடுக்கும் ஆபத்தான இனவாதத்தின் குறிகாட்டிகளாகவே கொள்ளப்பட வேண்டும்.

கிழக்கில் சுமார் 25,000 ஏக்கர் நிலங்கள் தமிழர் வசம் உள்ளது. அதில் முஸ்லிம்கள் பூர்வீகமாக வசித்து வந்த நிலங்களும் நெற்காணிகளும் உள்ளடங்குகின்றன. மட்டக்களப்பு மாவட்டத்திலேயே ஒரு பிரதேசத்தில் மாத்திரம் 4000 ஏக்கர் காணிகளை தமிழர்கள் அபகரித்துள்ளனர். புலிகள் அவற்றை முன்னாள் போராளிகளின் குடும்பங்களுக்குப் பகிர்ந்தளித்தனர். இம்மாவட்டத்தில் 39 முஸ்லிம் கிராமங்களிலிருந்து 1990 களில் முஸ்லிம்கள் வெளியேற்றப் பட்டனர்.

கிழக்கின் தமிழ்-முஸ்லிம் சகவாழ்வு தமிழ் ஆயுதக் குழுக்களாலேயே சிதைந்தது. தொடர்ந்து இம்மாகாணத்தில் பிழைப்பு அரசியல் நடாத்த வந்த அரசியல்வாதிகளால் தமிழ்-முஸ்லிம் உறவு பெருமளவு பாதிக்கப்பட்டது. புதிய அரசியலமைப்பு, சமஷ்டிக் கோரிக்கை, வடக்குக் கிழக்கு இணைப்பு ஆகிய விவகாரங்கள் சூடு பறக்க விவாதிக்கப்படும் இத்தருணத்தில் கிழக்கில் தமிழ்-முஸ்லிம் இனவாதம் தலையெடுப்பது எந்த வகையிலும் ஆரோக்கியமானதல்ல.



சுதந்திரத்திற்குப் பின்னர் இலங்கையின் அரசியல் கலாசாரம் இந்நாட்டின் மக்களை பிளவுபடுத்தியமை மிகவும் துயரம் நிறைந்தது. ஐரோப்பிய காலனித்துவத்திலிருந்து அரசியல் சுதந்திரம் பெற்ற நாடுகளில் பாராளுமன்ற ஜனநாயகம் என்பது பெரும்பான்மை மக்களின் ஜனநாயகமாகவே கருதப்பட்டது. ஐரோப்பியர் களும் கணித ரீதியில் பெரும்பான்மையாக இருந்த மக்களிடமே சுதந்திரத்தைக் கையளித்தனர். இலங்கை போன்று ஆசியாவின் பல்வேறு நாடுகளுக்கும் இந்த உதாரணம் பொருந்துகிறது.

அரசியலில் பங்குபற்றுதலுக்கு வாய்ப்பளிக்கப்படாத சிறுபான்மைச் சமூகங்கள் தம்மை ஒரு தேசமாக முன்னிறுத்த வேண்டிய கட்டாயத்தை சுதந்திரத்திற்குப் பிந்திய பெரும்பான்மை அரசியல் உருவாக்கியது. விளைவாக இனம், மொழி, கலாசாரம், மதம், பிராந்தியம் ஆகிய தேச வரண்முறைக்கான அளவுகோல்களை முன்னிறுத்தும் அவசரத்தில் ஒவ்வொரு இனங்களும் தனித்துச் செயல்பட ஆரம்பித்தன. தனக்குரியதையும் தனக்கானதையும் அரசியல் தளத்தில் தேடும் தேசிய இனங்களின் முயற்சிகள் இறுதியில் பாரிய சமூகப் பிளவுகளையும் பிரிவுகளையும் உருவாக்கி விட்டன.

1960களுக்குப் பின்னர் இன ரீதியான சிந்தனை எல்லாத் தளங்களிலும் வேகமாகப் பரவியது. கல்வி, பொருளாதாரம், அரசியல், நிருவாகம் என அது எதனையும் விட்டு வைக்கவில்லை. இனப் பாடசாலைகள் தோன்றியது போல இனரீதியான அரசியல் கட்சிகளும் களத்திற்கு வந்தன. 70 களுக்குப் பின்னர் பேரின வாத அரசாங்கங்கள் பின்பற்றிய சிறுபான்மை மக்களுக்கு எதிரான அணுகுமுறைகள் -குறிப்பாக தமிழ் சமூகத்தை விரக்தியடையச் செய்தது. பல்கலைக்கழக வெட்டுப் புள்ளி தரப்படுத்தல், யாழ்ப்பாணத்தில் தமிழர்கள் எதிர்கொண்ட இராணுவக் கெடுபிடிகள் போன்றன தமிழ் இளைஞர்களை கொதிப்படையச் செய்தது.

1980 களில் அது ஓர் ஆயுதப் போராக வெடித்து, 30 ஆண்டு காலம் போரில் விரயமாகி யது. இலங்கையின் இனப் போர் அடிப்படையில் சிங்கள - தமிழ் சமூகங்களுக்கிடையிலானதே. தமிழ் ஆயுதக் குழுக்களுக்கும் சிங்கள அரசின் படைகளுக்கும் இடையில் வெடித்த ஆயுதப் போர், துரதிஷ்டவசமாக முஸ்லிம்களையும் அதனுள் இழுத்துக் கொண்டது. பாரிய இழப்பும் வலிகளும் வருத்தங்களும் முஸ்லிம்கள் மீது திணிக் கப்பட்டது.

தமிழ் ஆயுதக் குழுக்களின் தோற்றம், சுதந்தி ரத்திற்கு முன்னர் தமிழ் - முஸ்லிம் சமூகங்களுக் கிடையில் நிலவி வந்த சகவாழ்வை அச்சுறுத்தி யது. தமிழ் - முஸ்லிம் நல்லுறவை கிடப்பில் போட்டது. இப்போது மீளவும் நாம் தமிழ் - முஸ்லிம் நல்லுறவு பற்றிய கலந்துரையாடலைத் தொடங்க வேண்டியுள்ளது. அது வெறுமனே அரசியல் திருகுதாளங்களுக்கோ குறுகிய இலாபங் களுக்கோ அல்ல.

வடக்குக் கிழக்கில் பிட்டும் தேய் காய்ப் பூவும் போல ஒற்றுமையாய் வாழ்ந்த இரு சமூகங்களுக்கிடையில் தொடர்ந்தும் காழ்ப்பும் பகைமையும் வேரூன்றியிருப்பது ஆரோக்கிய மானதல்ல. திறந்த கலந்துரையாடல்கள் மூலம் இரு சமூகங்களின் மனக் குமுறல்களையும் பிரச்சினைகளையும் வெளிக்கொண்டு வருவதன் ஊடாக இரண்டு சமூகங்களும் இணைந்தும் இணக்கப் பாட்டுடனும் வாழ முடியும் என்பதை மீண்டும் நாம் நிரூபிக்க வேண்டியுள்ளது.

இன்றைய கொதிப்பான அரசியல் [illegible] இரு சமூகங் களைச் சேர்ந்த ஒரு சில அரசியல்வாதிகளும் நிருவாக அதிகாரிகளும் தேர்தல் இலாபங்களுக் காகவும் தமது சொந்த அரசியல் பிழைப்பு வாதத்திற்காகவும் மென்மேலும் சமூகங்களைக் கூறுபோட எத்தனிக்கின்ற இந்தத் தருணத்தில் தமிழ் - முஸ்லிம் நல்லுறவு பற்றிய இந்த விவாதம் ஆரோக்கியமாக முன்னெடுக்கப்பட வேண்டியுள்ளது.

கடந்த காலங்களில் தமிழ் - முஸ்லிம் உறவில் சில கசப்பான பக்கங்கள் இருக்கின்ற போதும் சில இனிப்பான பக்கங்களும் இருந்ததை நாம் நினைவுகூர வேண்டும். வரலாற்றை நேர்ப்படியாக நோக்கு வதும் நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் அதற்கேற்ற வகையில் உருவாக்கிக் கொள்வதுமே நமக்கு முன்னாலுள்ள பணியாகும்.

இறுதிக் கட்டப் போரில் வன்னியிலிருந்து இடம்பெயர்ந்த இலட்சக் கணக்கான தமிழ் அகதிகளுக்கு காத்தான்குடி பள்ளி வாயல்கள் சம்மேளனம் அம்பாறை மாவட்ட பள்ளிவாயல்கள் சம்மேளனம் என்பவை மில்லியன் ரூபா பெறுமதியான உணவுப் பொருட்களையும் ஏனைய அத்தியாவசியப் பொருட்களையும் வழங்கி, மனிதாபிமான உதவிகளைச் செய்தனர்.

1983 ஜூலைக் கலவரத்தின் போது ஆயிரக்கணக் கான தமிழர்களை தலைநகர் உள்ளிட்டு நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் வாழ்ந்த முஸ்லிம்கள் தமது வீடுகளில் வரவேற்று, அடைக்கலம் வழங்கி, சில நாட்களுக்கு விருந்தளித்துப் பாதுகாத்தனர். தமிழர்களுக்கு தொப்பி அணிவித்து முஸ்லிம் களாகக் காட்டிய சம்பவங்கள் வரலாற்றில் பதிவாகியுள்ளது.

இப்படி இனிப்பான பக்கங்களுக்கு ஏராளமான உதாரணங்களை அடுக்கிச் செல்லலாம். துரதிஷ்ட மாக ஆயுத இயக்கங்களின் தோற்றத்திற்குப் பின்னர் புலிகளும் ஏனைய தமிழ் ஆயுதக் குழுக் களும் முஸ்லிம்களை தூய சைவ வேளாள தாயகத்தின் எதிரிகளாகப் பார்க்கத் தொடங்கினர். 1990 களில் பொலன்னறுவை மாவட்டத்தில் அழிஞ்சிப் பொத்தானையில் புலிகள் அப்பாவி முஸ்லிம்களை சுட்டுக் கொன்றனர். காத்தான்குடியில் பள்ளியில் தொழுது கொண்டிருந்த நூற்றுக்கு மேற்பட்ட முஸ்லிம்களை புலிகளின் இயந்திரத் துப்பாக்கிகள் வேட்டையாடியன. ஏறாவூர் படுகொலைகள், சம்மாந்துறை படுகொலைகள் என கொலைக் கலாச்சாரம் கட்டவிழ்க்கப்பட்டது.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்திற்குப் பின்னரும் கூட முஸ்லிம்களின் மீதான தமிழ் ஆயுதக் குழுக் களின் வன்கொடுமைகள் நிறுத்தப்படவில்லை. எல்லாவற்றுக்கும் உச்சமாக 1990 ஒக்டோபர் மாதம் யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு லட்சம் முஸ்லிம்கள் உடுத்த உடையுடன் விரட்டியடிக்கப்பட்டனர். ஆண்டாண்டு காலமாக தமிழர்களோடு ஒட்டி உறவாடி வந்த வடக்கு முஸ்லிம்கள் வெறுங் கையோடு வெளியேறுவதற்கு வழங்கப்பட்ட அவகாசம் வெறும் 2 மணித்தியாலங்கள் என்பதை எதிர்வரும் ஒக்டோபரில் 27 ஆம் ஆண்டாகவும் நாம் நினைவுகூரப் போகிறோம்.

புத்தளத்திலும் அனுராதபுரத்திலும் அகதிகளாய் வாழும் இம்மக்களை வடக்கில் குடியேற்றுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டணியும் முதலமைச்சருமே இன்று வரை தடையாக இருந்து வருகின்றனர்.

ஒருவரை ஒருவர் தொடர்ந்தும் பகையுணர் வோடு பார்ப்பதற்கு இரு சமூகங்களைச் சேர்ந்த அரசியல்வாதிகளே மூல காரணம் என்பதையும் தமிழ் - முஸ்லிம் பங்குபற்றுனர்கள் ஏற்றுக் கொண்டனர். கடந்த கால கசப்பான அனுபவங் களை அங்கு சிலர் பகிர்வதற்கு முனைந்த போதும் பகை மறப்பின் தேவை வலியுறுத்தப் பட்டதன் விளைவாக ஓர் இணக்கப்பாடு ஏற்பட்டது. தமிழ் முஸ்லிம் நல்லுறவை



வளர்ப்பதற்கான ஒரு செயலணியை உருவாக்க வேண்டும் என்பதில் உடன்பாடு எட்டப்பட்டது.

பரஸ்பர முன்னேற்றத்தில் இரண்டு சமூகங்களும் பங்களிக்க வேண்டியுள்ளது என்பதும் ஏற்கப்பட்டது. ஆறாத காயங்கள், தீராத வருத்தங்கள் இரண்டு சமூகங்களுக்கு மத்தியிலும் இன்னும் நீடிக்கின்றது என்பது துரதிஷ்டமானதே. எனினும், எதிர்காலத் தலைமுறைகளையேனும் இனவாதச் சிந்தனையிலிருந்து பாதுகாக்க வேண்டும் என்பதில் அங்கு கருத்தொருமைப்பாடு ஏற்பட்டது.

வடக்கு கிழக்கின் அரசியல் சூழமைவு தொடர்ந்தும் இனத் தேசியத்தை அடிப்படையாகக் கொண் டால் தமிழ் முஸ்லிம் நல்லுறவு சாத்தியமில்லை என்பது ஒரு பொதுவான புரிதலாகும். அரசியல் நிருவாகத் தலைமைகள் தமது சில வெளிப்படையான நடவடிக்கைகள் மூலம் தத்தமது சமூக வாக்குகளைத் தக்க வைப்பதற்கு முயல்கின்றனர். அது இன விரிசல்களையும் பகை முரண்பாடு களையும் வளர்க்கின்றது.



கடந்த சில மாதங்களுக்கு முன்னர் கருணா அம்மான் விடுத்த அறிக்கையொன்று பத்திரிகைகளில் வெளிவந்தது. கிழக்கில் முஸ்லிம் ஆதிக்கத்தை இல்லாதொழிப்பதற்கு அனைத்துத் தமிழ் தரப்புகளும் ஒன்றுபட வேண்டும் என கருணா அறைகூவல் விடுத்திருந் தார். இத்தகைய உணர்ச்சி பூர்வமான கோசங்கள் தமிழ் - முஸ்லிம் நல்லுறவைக் கெடுப்பதற்கே எண்ணெய் ஊற் றும் என்பதை நாம் மனங்கொள்ள வேண்டும்.

இன்று நாம் வலியுறுத்தும் தமிழ் - முஸ்லிம் உறவு அரசியல் தேவைகளுக்கு அப்பால் இரண்டு சமூகங்களினதும் உடனடியான சமூகவியல் தேவை என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். தமிழ் - முஸ்லிம் நல்லுறவு பற்றிய கருத்தாடலை இரு சமூகங்களையும் சேர்ந்த புத்திஜீவிகளும் செல்வாக்குள்ள சமூகத் தலைமைகளுமே முன்னெடுக்க வேண்டும். அரசியல் வாதிகள் இதை செய்யப் போவதில்லை. அரசியல் ரீதியில் ஏராளமான சிக்கல்கள் இரண்டு சமூகங்களுக்கு மத்தியிலும் உள்ளன. அவற்றை இரு தரப்பு நலன்களின் அடிப்படையில் தாண்டிச் செல்ல வேண்டிய கட்டாயம் இன்றுள்ளது.

இந்த அடிப்படை உண்மைகளை கவனத்திற் கொண்டு தமிழ் முஸ்லிம் நல்லுறவை ஊக்குவிப்பதற்கான செயலணி ஒன்றை உருவாக்குவது இன்றைய உடனடித் தேவையாகும். இது குறித்து நாம் சிந்திப்போமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாடுவது நலம்



இம்தியாஸ் பாக்கிர் மாக்கார்

# பிள்ளைகளின் எதிர்காலத்தைத் தீர்மானிப்பதில் பெற்றோரின் வகிபங்கு

பிள்ளைகளுக்குக் கல்வியை வழங்கும் போது பெற்றோரின் பொறுப்பை எடுத்துக் காட்டும் மிகவும் பெறுமதியான கட்டுரையொன்றை பத்திரிகையில் வாசிக்கக் கிடைத்தது. அதை உங்களோடு பகிர்ந்துகொள்ள நினைக்கிறேன்.

அமெரிக்காவின் மிச்சிகன் நகரில் வசிக்கும் பென்ஜமின் காஸன் என்கின்ற சிறு பிள்ளை, ஒருநாள் தனது தாயிடம் ஒரு வேண்டுகோளை விடுக்கிறது. தாயே! எனக்கு இந்தச் சொல் விளங்கவில்லை, அதன் அர்த்தத்தைச் சொல்லித் தாருங்கள் என்றது. அதற்கு அந்தத் தாய் பார்ப்பம் மகனே! எனக்குச் சரியாக விளங்கவில்லை. கண்ணாடியைக் கொஞ்சம் எடுங்கள் என்றார். நீங்கள் எதற்கும் கொஞ்சம் வாசியுங்கள் என்று தாய் கூறினாள்.

தனக்கு வாசிக்க முடியாமல் இருப்பது கண்ணாடியில்லாததால் அல்ல. தான் கற்றிருக்காவிட்டாலும் அப்புத்திசாலித் தாய் தனது பிள்ளைக்கு அந்தக் குறையை காட்டிக்கொள்ளவில்லை. கறுப்பின அமெரிக்கப் பெண்ணான அவள் திரு மணம் முடிக்கும்போது 13 வயது. ஒரு சில வருடங்கள் மாத் திரமே அவளுடன் வாழ்ந்த அவளது கணவர், இரண்டு பிள்ளைகளையும் அவளையும் விட்டு விட்டுச் சென்றுவிட்டார்.

அவள் கவலைப்படவில்லை, சளைக்கவில்லை. இரண்டு பிள்ளைகளையும் காப்பாற்ற வேண்டிய சுமையை அவள் தன் தோள்மீது சுமந்தாள். வீடு வீடாகச் சென்று வேலைக்காரியாக சேவை செய்யத் தீர்மானித்தாள். அவளிடம் திருமணம் முடிக்கும் எண்ணம் காணப்படவில்லை. இரண்டு பிள்ளைகளுக்கும் சிறந்த கல்வியைக் கொடுக்கத் தீர்மானித்தாள். கல்வியின் மூலமே இக்கொடுமையான வாழ்விலிருந்து கரைசேர முடியும் என நம்பினாள். அதற்காக வேண்டி அவள் தனது முழு வாழ்வையும் அர்ப்பணித்தாள்.

தனது இளைய மகனான பென் காசன் பிறப்பிலிருந்தே மூட்டாளாகக் காணப்பட்டான். எப்பொழுதும் வகுப்பில் கடைசிப் பிள்ளையாகவே சித்தியடைவான். மதிப்பீட்டு அறிக்கையில் சகல பாடங்களுக்கு முன்னாலும் பூச்சியமே பதியப்பட்டிருக்கும். ஆனால் அவனது முழு வாழ்வும் ஒரு நாள் மாற்றமடைய ஆரம்பித்தது. அவனது வகுப்பைச் சேர்ந்த ஒரு மாணவனுக்கு மூக்கில் ஐந்து தையல் விழும் அளவுக்கு பென் காசன் அவனை நையப்புடைத்தான். அவனது தாயார் பாடசாலைக்கு அழைக்கப்பட்டாள்.

காசனின் வகுப்பாசிரியர் அவனது தாயாரிடம் "தாயே இதுவே உங்களுக்கு வழங்கப்படும் இறுதிச் சந்தர்ப்பம். காசன் அந்தப் பிள்ளையை தாக்கியிருக்கிறான். மடையன் என்று கூறியதால் தாக்கியிருக்கிறான். ஆனால் அதில் உண்மையுள்ளது. உமது பிள்ளை வருட இறுதிப் பரீட்சையில் 25 வினாக்களில் ஒரு வினாவுக்கேனும் பதிலளிக்கவில்லை. இதனால் உமது பிள்ளையை இந்த வருட இறுதியில் பாடசாலையை விட்டு விலக்க நேரிடும்." அவள் அழுதுகொண்டே தனது மகனை வீதியில் வீட்டுக்கு அழைத்துச் சென்றாள்.

வீட்டுக்குச் சென்று பிள்ளையின் காலில் விழுந்து "தங்க மகனே! உனது தாய் காலை 6 மணிக்கு எழுந்து மாலை 6 மணி வரை அடுத்தவர்களின் வீட்டில் கழிப்பறைகளை சுத்தப்படுத்துகிறேன். அவர்களது பிள்ளைகளை குளிப்பாட்டுகிறேன். வாகனங்களைக் கழுவுகிறேன். உனக்கும் அடுத்தவர்களின் கழிப்பறைகளை சுத்தப்படுத்திக் கொண்டிருக்கவா ஆசை! தேவையில்லாத பேச்சுக்களை கேட்கவா ஆசை? எனது மகனே நாளைய தினம் பெரியவனாகியும் மோசமான வார்த்தைகளைக் கேட்க விரும்புவாயா? அதை நீயே தீர்மானிக்க வேண்டும். அதை உனக்கு மாத்திரமே மாற்ற முடியும். இன்று முதல் எனது பிள்ளைகள் இருவருக்கும் தொலைக்காட்சி பார்ப்பது தடை."

அவள் தனது மகனுக்கு மிகப்பெரும் சவாலை விடுத்தாள். அதன் பின்னர் அடுத்த வருட இறுதிப் பரீட்சையில் பென் 25 வினாக்களில் 10 வினாக்களுக்கு சரியான பதிலை எழுதினான். அடுத்த வருடம் 15 கேள்விகளுக்கு சரியான பதிலை எழுதினான். மூன்றாம் வருடம் 25 வினாக்களுக்கும் சரியான விடையை எழுதி வருடத்தின் சிறந்த மாணவனாகத் தெரிவு செய்யப்பட்டான். சிறந்த மாணவனுக்கான பரிசில் வழங்கும் விழாவில் வெள்ளையின அதிபர் பின்வருமாறு கூறினார்: "பென் காசன் கருப்பினத்தவன். தந்தையில்லாத தாய் கழிப்பறை கழுவும் கறுப்பினப் பெண். பென் காசன் கஷ்டப்பட்டு திறமையாளனானான். இதன் அர்த்தம் நீங்கள் முயற்சிக்கவில்லை என்பது. வெள்ளையினத்தவர்களாகிய நீங்கள் கறுப்பினத்தவனிடம் தோற்றதற்கு வெட்கப்பட வேண்டும்"

சோன்யா மறுதினமே தனது பிள்ளைகளை அந்தப் பாடசாலையிலிருந்து விலக்கிக் கொண்டாள். மோசமான மனிதர்கள் வாழும் அந்தப் பகுதியிலிருந்து தப்பித்துச் சென்றாள். அதன் பிறகு அவள் வெள்ளையின கறுப்பின மாணவர்கள் ஒன்றாகப் படிக்கும் பாடசாலையில் அவர்களைச் சேர்த்தாள். அந்தத் தாய் இவ்வாறு கூறுகிறாள்: "நான் கறுப்பினத்தவள்தான். ஆனால் எமக்கும் சுயகௌரவம் உள்ளது. எனது பிள்ளைகளது கௌரவம் எனக்கு முன்னால் இழக்கப்படுவதை விட நான் இறப்பதே மேல்." புதிய பாடசாலை பென் காசனை சிறந்த முறையில் வரவேற்றது. இறுதி வகுப்பில் சிறந்த பெறுபேறை பெற்று மிசிகன் கல்லூரியில் மருத்துவப் படிப்பைத் தொடரும் சந்தர்ப்பம் அவனுக்குக் கிடைத்தது. பென்ஜமின் காசன் என்பவர் தற்பொழுது மிசிகன் பல்கலைக்கழகத்தில் மூளை மற்றும் நரம்பியல் மருத்துவ நிபுணராக மாறியிருக்கிறார்.

இவர் உலகில் முதன் முதலாக இரண்டு மூளைகள் ஒட்டிப் பிறந்த பிள்ளைகளை வெற்றிகரமாகப் பிரித்தெடுத்த முதலாவது வைத்தியராவார். இது ஜேர்மனியில் 1987ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது. 1988 முதல் அவர் ஜோன் ஹொப்ஸ்கின் மருத்துவமனையில் பணிப்பாளராக செயற்பட்டார். 2016ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கு அமெரிக்க ரிபப்லிகன் கட்சி சார்பில் அவரது பெயர் உள்ளடக்கப்பட்டிருந்தது. ஒரு பிள்ளையின் தலைவிதியை மாற்றுவதில் பெற்றோருக்குள்ள வகிபாகம், பொறுப்பு எத்தகையது என்பது இந்த உதாரணத்தின் மூலம் விளங்குகிறது. இது பற்றி சிந்தித்து எமது பிள்ளைகளையும் சிறந்த முறையில் வளர்த்தெடுப்போம்.

## இரண்டாவது சுதந்திரப் போராட்டத்தை நோக்கி... - II


# யாப்பு உருவாக்கத்தில் இலங்கைக்கு பெருமைப்படக் கூடிய வரலாறு இல்லை

• விக்டர் ஐவன்

எமக்கு அரசொன்று தேவையென்றால் ஏனைய அனைத்தையும் விட அரசியல் யாப்பு அதற்கு முக்கியமானது. அது ஜேவிபியின் 20 ஆவது திருத்தச் சட்டமோ அல்லது பிரதமர் ரணில் தயாரித்து வரும் அரசியல் யாப்போ அன்றி மொத்த முறைமையினதும் நன்மைக்கும் ஆழமான கட்டமைப்பு மாற்றத்துக்கும் காரணமாக அமைகின்ற வகையில் மக்களால் உருவாக்கப்படுகின்ற மக்கள் யாப்பாக அமைய வேண்டும்.

யாப்பு தயாரிப்பதிலும் அரசியலமைப்பை உருவாக்குவதிலும் இலங்கைக்கு பெருமைப்படக் கூடிய வரலாறு இல்லை. மாற்றமாக வெட்கப்பட வேண்டிய வரலாறு தான் இருக்கிறது. பொதுவாக எந்த நாடும் நீண்ட காலத் தேவைக்கே அரசியல் யாப்பைத் தயாரிக்கின்றன. எழுதப்பட்ட யாப்பு இல்லாத பிரித்தானியாவின் அரசியலமைப்புக்கு 750 வருடங்களாகின்றன. அமெரிக்க யாப்புக்கு வயது 229. எவ்வளவு பழமையானதாக இருந்தாலும் பிரித்தானிய அரசியலமைப்போ அமெரிக்க அரசியல் யாப்போ அதன் மக்களுக்குப் பிடித்தமில்லாததாக மாறியதில்லை. இலங்கையைப் பொறுத்தவரையில் சுதந்திரத்துக்குப் பின்னரான 70 வருடங்களில் அது மூன்று யாப்புக்களைக் கண்டிருக்கிறது. கடைசியாகத் தயாரிக்கப்பட்ட அரசியல் யாப்பின் உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கும் நிலையில் தான் தற்போது நான்காவது அரசியல் யாப்புக்கான ஏற்பாடுகள் நடக்கின்றன.







### இழிவான வரலாறு

இலங்கையில் இதுவரை உருவாக்கப்பட்ட மூன்று அரசியல் யாப்புக்களும் யாப்பு உருவாக்கத்தின் போது கவனிக்கப்பட வேண்டிய மரபுகளும் நியமங்களும் கவனத்தில் எடுக்கப்படாமலேயே தயாரிக்கப்பட்டிருக்கின்றன. இது யாப்புக்கு மதிப்பளிக்காமையையும் அதனை அகௌரவப்படுத்துதலையும் இலங்கைக்கே உரித்தான அவலட்சணமான அடையாளங்களாகக் கருதும் நிலைக்குத் தள்ளியுள்ளது.

சோல்பரி யாப்புக்கு அடிப்படையாக அமைந்த அமைச்சரவைப் பத்திரமாகக் கருதப்படுகின்ற முதலாவது அமைச்சரவைப் பத்திரம், குறைந்த பட்சம் பல்வேறுபட்ட சமூகத்தினரதும் தலைவர்களிடமாவது கருத்துக் கேட்கப்படாமல் டீ.எஸ். சேனநாயக்கவின் வழிகாட்டலிலேயே ஐவர் ஜெனிங்ஸினால் தயாரிக்கப்பட்டது. பின்னர் உதவிச் சட்ட வரைஞர் பீ.பி. பீரிஸினால் அதன் இறுதி வரைவு வைட் ஹோல் அதிகார சபைக்கு அனுப்பப்பட்டது.

பிரித்தானிய அரசு இதனைப் பொருட்படுத்தவில்லை. அமைச்சரவைப் பத்திரத்தில் தமது கருத்துக்கள் உள்வாங்கப்படவில்லை என சிறுபான்மைத் தலைவர்கள் செய்த முறைப்பாட்டை அடுத்து இலங்கைக்குப் பொருத்தமான அரசியலமைப்பொன்றை முன்மொழிவதற்காக சோல்பரி கமிஷனை அது அனுப்பி வைத்தது. பிரித்தானிய அரசின் இந்த நடவடிக்கை டீ.எஸ். சேனநாயக்க உள்ளிட்ட அமைச்சரவையினதும் இலங்கைத் தேசிய சங்கத்தினதும் எதிர்ப்புக்குள்ளானது. இவர்கள் இந்தக் கமிஷனைப் பகிஷ்கரிக்கத் தீர்மானித்தார்கள்.

கமிஷனைப் பகிரங்கமாக எதிர்க்கும் அதே வேளை மறைமுகமாக கமிஷனுடன் உறவுகளைப் பேண வேண்டியதன் அவசியத்தை டீஎஸ்ஸுக்கு ஒலிவர் குணதிலக காட்டிக் கொடுத்தார். கமிஷனுடன் பின் கதவால் தொடர்பு வைத்துக் கொண்ட அடுத்தவர் ஜோன் கொதலாவல. கள்ளத் தனமாகச் செய்து முடிக்கப்பட்ட இந்தக் கொள்கை இல்லாத விவகாரம் கமிஷனின் செயலாளரை ஒலிவர் குணதிலக தனது காதலியாக்கிக் கொள்ளும் அளவுக்கு நீண்டு சென்றது. இதனால் கமிஷன் சேற்றில் நாட்டிய தடியாக மாறியது.

1962 சதிப் புரட்சியினால் ஆளுனர் பதவியிலிருந்து நீக்கப்பட்டதன் பின்னர் ஒலிவர் குணதிலக வெளிநாட்டு வாசம் செய்த வேளையில், சுதந்திரத்துக்கு தாம் வழங்கிய பங்களிப்பு தொடர்பில் ஒரு பேட்டியை வழங்கியிருந்தார். அதே போல 70 ஆம் ஆண்டு தேர்தலின் பின்னர் ஜோன் கொதலாவல இங்கிலாந்தில் வாசம் செய்த வேளையில் நெவில் ஜயவீரவுக்கு ஒரு நீண்ட பேட்டியை வழங்கியிருந்தார். இந்த இரண்டு பேட்டிகளுக் கும் ஊடாக கமிஷனுக்குப் பின் கதவால் நடந்த விவகாரங்களின் உண்மை நிலை தெரிய வந்தது.

சோல்பரி கமிஷன் சார்பாக இங்கு வந்திருந்த அனைவரையும் இலங்கையில் அவர்கள் இருக் கும் வரை சந்தோஷமாக வைத்துக் கொள்ளும் பொறுப்பு டீ.எஸ். சேனநாயக்கவுக்கு வழங்கப்பட்டிருந்தது. டீ.எஸ்ஸுக்கும் தம்மால் தயாரிக்கப்பட்ட சட்ட மூலத்தை எந்தவித மாற்றமும் இன்றி நிறைவேற்றிக் கொள்ளும் தேவை இருந்தது. சோல்பரி பிரபுவை மட்டும் அழைத்து கொதலாவல வழங்கிய விருந்துபசாரமொன்றில் டீ.எஸ் உடைய தேவையைக் குறிப்பிட்டு, அவருடைய இந்தத் தேவையை நிறைவேற்றி வைத்தால் சுதந்திர இலங்கையின் ஆளுனர் பதவியை சோல்பரி பிரபுவுக்கு வழங்குவதற்கு டீ.எஸ். தயாராக இருப்பதையும் கொதலாவல எத்தி வைத்தார். சோல்பரி பிரபு கொதலாவலயுடன் கைலாகு செய்து இந்தப் பேரத்தை ஏற்றுக் கொண்டதாக நெவில் ஜயவீர தி ஐலன்ட் பத்திரிகையில் தொடராக எழுதிய கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

சோல்பரி யாப்பின் 25 வருடங்களுக்குப் பிறகு, 1972 இல் ஐக்கிய முன்னணி அரசு முதலாவது குடியரசு யாப்பைத் தயாரித்த வேளையிலும், எதிர்த் தரப்பினரின் கருத்துக்களைப் பெறாமல் தமக்கிருந்த மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தை வைத்தே யாப்பைத் தயாரித்தனர். பெடரல் கட்சியினர் 09 அம்சங்கள் அடங்கிய பத்திரமொன்றை யாப்புப் பேரவைக்கு சமர்ப்பித்த போதும் அது கலந்துரையாடலுக்கு எடுத்துக் கொள்ளப்படவே இல்லை. இதனால் இந்தக் கட்சியினர் யாப்பு உருவாக்கச் சபையினரைப் பகிஷ்கரித்தனர்.

சிறுபான்மைக் காப்பீட்டுக்கான எந்தவித அம்சங்களும் புதிய யாப்பில் உள்ளடக்கப்படாமலேயே சிறுபான்மையினரின் காப்பீட்டுக்காக சோல்பரி யாப்பில் உள்ளடக்கப்பட்டிருந்த 29 ஆவது சரத்து நீக்கப்பட்டது. தமிழ் மக்களின் பலத்த எதிர்ப்புக்குக் காரணமாக அமைந்த சிங்களத்தை அரச கரும மொழியாக்கும் விடயம் யாப்பில் சேர்த்துக் கொள்ளப்பட்டது. இது தான் தமிழரின் உரிமைப் போராட்டத்துக்கும் காரணமாகியது.

1972 இன் முதலாவது குடியரசு யாப்பின் 06 வருடங்களுக்குப் பின்னர் ஆட்சியில் இருந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசு இரண்டாவது குடியரசு யாப்பைத் தயாரித்தது. இதன்போதும் அது எதிர்த் தரப்பினருடன் இணங்கிய கருத்துக்களை வைத்து யாப்பைத் தயாரிக்கவில்லை. அது ஐக்கிய தேசியக் கட்சிக்கு இருந்த ஆறில் ஐந்து பெரும்பான்மைப் பலத்தை வைத்தே தயாரிக்கப்பட்டது. 1978 இல் தமிழ்க் கட்சிகள் பல இணைந்து உருவாக்கப்பட்ட தமிழ் ஐக்கிய விடுதலை முன்னணி தான் அப்போதைய பிரதான எதிர்க்கட்சியாக இருந்தது.

### யாப்பை நகைப்புக்குள்ளாக்கல்

யாப்பை நகைப்புக்கிடமானதாக்கியதில் முதலாமவர் மைத்திரிபால சிறிசேன அல்ல. அதில் உலக சாதனை படைத்த நாடாக எமது நாட்டுக்குப் பெருமை உண்டு. யாப்பு, நிறைவேற்றதிகாரம், நீதி ஆகிய ஜனநாயகத்தின் மூன்று தூண்களும் தனித்தனியாகவும் கூட்டாகவும் எமது நாட்டில் கேலிக்குள்ளாகியிருக்கிறது.

சோல்பரி யாப்பு கைச்சாத்திடப்பட்டு மை காயுமுன்னரே இந்திய வம்சாவழி தோட்டத் தொழிலாளரின் பிரஜாவுரிமையைப் பறிக்கும் வகையில் முதலாவது பிரதமர் டீ.எஸ்.சேனநாயக்க கொண்டு வந்த இரண்டு சட்டங்களுமே யாப்புக்கு முரணானவை. டீ.எஸ்.இன் பரம வைரியான சமசமாஜ இயக்கத்துடன் சில இடங்களில் இந்திய தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் இணைந்து போட்டியிட்டதனால் ஐக்கிய தேசியக் கட்சியின் வெற்றி நெருக்கடிக்குள்ளாகியதற்குப் பழி வாங்கவே அவர் இந்திய வம்சாவழித் தொழிலாளரின் பிரஜாவுரிமையைப் பறித்தார்.

பின்னர் தமிழ் மக்களின் மொழி உரிமையைப் பறிக்கும் வகையில் பண்டாரநாயக்க கொண்டு வந்த சிங்களத்தை அரச கரும மொழியாக்கும் சட்டமும் யாப்புக்கு முரணானதாகவே அமைந்தது. தமிழ் அரச ஊழியர்கள் பதவி உயர்வு பெறுவதற்காக சிங்கள மொழிப் புலமைப் பரீட்சைக்குத் தோற்றிச் சித்தியடைவதை இந்தச் சட்டம் நிபந்தனையாக்கியது. இதற்கெதிராக கோணேஷ்வரன் எனும் அரச எழுதுவினைஞர், இந்தச் சட்டம் சோல்பரி யாப்புக்கு முரணானது எனக் கோரி நீதிமன்றத்தில் முறையிட்டார். நீதிமன்றம் இவருக்குச் சாதகமாகத் தீர்ப்பு வழங்கிய போதும். தமிழருக்கு அநியாயம் இழைக்கும் இந்தச் சட்டத்தை அரசாங்கம் மாற்றிக் கொள்ளவில்லை.

1978 இன் இரண்டாவது குடியரசு யாப்பில் மேற்கொள்ளப்பட்ட 19 திருத்தங்களில் 07 திருத்தங்கள் யாப்புக்கு முரணானவை. ஆறில் ஐந்து பெரும்பான்மையைக் கொண்ட பாராளுமன்றத்தை ஐதேக அரசு சர்வஜன வாக்குரிமை மூலம் நீடிப்பதற்கு நான்காவது திருத்தம் இடமளித்தது. இது நாட்டின் அரசியல் பயணத்தையே மாற்றியதோடு நாட்டை வன்முறைக்கும் இட்டுச் சென்றது. இதேபோல ஆளும் கட்சியில் இணையும் மந்திரிகளின் மந்திரிப் பதவியைப் பாதுகாப்பதற்கு இடமளிக்கும் வகையில் சந்திரிகாவின் ஆட்சிக் காலத்தில் உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு அரசியல் யாப்பை மீறுவதற்குக் காரணமாகியது. இந்தத் தீர்ப்பின் மூலமாக நிலைநாட்டப்பட்ட யாப்பு மீறல் கலாச்சாரம் மொத்த அரசியலமைப்பையும் பலவீனப்படுத்தியது.

ராஜபக்ஷ ஆட்சியில் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவை பதவியிலிருந்து நீக்குவதற்கு விடுக்கப்பட்ட நீதிமன்ற உத்தரவைப் பொருட்படுத்தாமல் பாராளுமன்றத்தைத் தொடர்ந்து நடத்திச் சென்ற அட்டகாசமான செயற்பாடும் யாப்பை மீறிய மற்றுமொரு சந்தர்ப்பமாகும். இந்த வகையில் யாப்பை மீறிய முதல் நபராக மைத்திரிபால சிறிசேனவைக் கருதுவது தவறு. பிரதமர் ஆட்சிக் காலத்தில் பிரதமர்களும் ஜனாதிபதி ஆட்சிக் காலத்தில் ஜனாதிபதிகளும் உயர் நீதிமன்றமும் பல்வேறு சந்தர்ப்பங்களில் யாப்பை மீறிச் செயற்பட்டிருப்பது தெளிவாகிறது. முன்னர் செய்த தவறுகளுக்கான தண்டனையாகத் தான் சரிந்து கொண்டிருக்கின்ற அரசாட்சியின் வீழ்ச்சிக்குக் காரணமாயுள்ள தற்போதைய அரசியல் நெருக்கடியைக் கருத வேண்டியிருக்கிறது.

### புதியதொரு யாப்பை உருவாக்கல்

இந்தத் துரதிர்ஷ்ட நிலைமையிலிருந்து மீள்வதற்கு புதியதொரு யாப்பை உருவாக்குவதில் நாடு ஈடுபட வேண்டும். யாப்பு தொடர்பிலும் யாப்பு உருவாக்கம் தொடர்பிலும் இலங்கையின் பொது மக்களைப் போலவே புத்திஜீவிகளுக்கும் அரசியல் தலைவர்களுக்கும் போதுமான அறிவு இல்லை. 19 ஆவது திருத்தத்தின் பின்னர் பதவியில் இருப்பது நிறைவேற்றதிகாரம் இல்லாத பெயரளவிலான ஜனாதிபதிதான் என்பதை பொதுமக்கள் மட்டுமன்றி ஜனாதிபதிப் பதவிக்கு போட்டியிடத் தயாராகவிருந்த கோதபாய, பல்லெவத்த, நாகானந்த போன்றோரும் அரசியல் நெருக்கடி வரும் வரை தெரிந்திருக்கவில்லை.

இவர்கள் மட்டுமன்றி அரசியல் யாப்பைத் தயாரிக்கும் குழுவினர் கூட யாப்பு மற்றும் யாப்பு உருவாக்கம் தொடர்பில் பூரண அறிவு இல்லாதவர்களாவே இருந்தார்கள். 19 ஆவது திருத்தத்துக்கும் மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத் திருத்தத்துக்குமென தயாரிக்கப்பட்டிருந்த சட்ட மூலங்கள், பாராளுமன்றமும் நீதித்துறையும் (பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜாவித் யூஸுப் கொழும்பை பிறப்பிடமாகக் கொண்டவர். கொழும்பு ரோயல் மற்றும் ஸாஹிரா கல்லூரிகளின் பழைய மாணவர்களுள் ஒருவர், ஒரு சட்டத்தரணி. கொழும்பு ஸாஹிராக் கல்லூரியின் முன்னாள் அதிபர், சவூதி அரேபியாவுக்கான முன்னாள் தூதுவர், முஸ்லிம் சமாதான செயலகத்தின் (MPS) முன்னாள் பணிப்பாளர் நாயகம், சட்டமா அதிபர் திணைக்களத்தில் சிறிது காலம் பணியாற்றியவர், முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் சிரேஷ்ட ஆலோசகராக செயற்பட்டவர், மனித உரிமை ஆணைக்குழுவிலும் அங்கம் வகித்தவர், தற்போது தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகத்தின் நிர்வாகக் குழு உறுப்பினர். புதிய அரசியலமைப்பு உருவாக்கம் குறித்து மீள்பார்வை பத்திரிகைக்கு அவர் வழங்கிய நேர்காணல் இங்கு தரப்படுகின்றது.

நேர்காணல்: ஹெட்டி ரம்ஸி

# ஒரு தனிமனிதனை நம்பி அரசாங்கத்தை நடாத்துவது மிகப் பயங்கரமானது

## சட்டத்தரணி ஜாவித் யூஸுப்

- **புதிய அரசியலமைப்பு உருவாக்கம் என்கின்ற விடயம் மீளவும் பேசுபொருளாக்கப்பட்டிருக்கிறது. அரசியலமைப்பு உருவாக்கப் பணிகள் தற்பொழுது எவ்வாறு இடம்பெற்று வருகின்றன?**

சுமார் ஒரு வருடத்திற்கு முன்னர் அரசியலமைப்பு தொடர்பில் கருத்தறியும் குழுவின் இடைக்கால அறிக்கையையும் அரசியலமைப்புக்கான உபகுழுக்களின் ஐந்து அறிக்கைகளையும் முன்வைத்து பாராளுமன்றத்தில் ஒரு விவாதம் நடத்தப்பட்டது. தொடர்ந்து மூன்று நாட்களாக இந்த விவாதம் நடத்தப்பட்டது உங்களுக்கு நினைவிருக்கும். இந்த விவாதத்தில் முன்வைக்கப்பட்ட கருத்துக்கள் தொகுக்கப்பட்டு அரசியலமைப்புச் சபையினால் நியமிக்கப்பட்ட குழு ஒரு அறிக்கையைத் தயார் செய்து தற்பொழுது பாராளுமன்றில் முன்வைத்துள்ளது.

இந்த அறிக்கையில் அரசியலமைப்பு விதிமுறைகள் (Constitutional Provisions) சில உள்ளடக்கப்பட்டுள்ளன. 'இது அரசியலமைப்பு வரைவொன்றல்ல என்றும் கலந்துரையாடலுக்கான முன்வைப்பே இதுவென்றும்' இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இன்னும் ஓரிரு வாரங்களில் இந்த விடயம் தொடர்பில் பாராளுமன்றில் விவாதம் நடைபெறும். அதற்குப் பின்னர் கலந்துரையாடி ஒரு முடிவுக்கு வந்ததன் பிறகே அடுத்த கட்ட நடவடிக்கைகள் எவ்வாறு அமையும் என்பது புலப்படும்.

ஆரம்பத்தில் அரசியலமைப்புச் சபையை (Constitutional Assembly) உருவாக்கும்போது எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி பாராளுமன்ற விவாதத்திற்குப் பிறகு மீண்டும் கருத்தறியும் குழுவுக்கு அனுப்பப்படும். அந்தக் குழு ஒரு வரைவைத் தயாரிக்கும். அந்த வரைவு அரசியலமைப்புச் சபைக்கு கொண்டுவரப்பட்டு அங்கு அனுமதிக்கப்பட்டால் மீண்டும் அது அமைச்சரவைக்கு விடப்படும். அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்ததும் உயர்நீதிமன்றத்திற்கு அனுப்பப்படும். அங்கு அரசியலமைப்பு வரைவு ஆராயப்பட்டு மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்படுவதா மக்கள் கருத்துக்கு விடுவதா என்பது தீர்மானிக்கப்படும்.

தற்பொழுது முன்வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் சில விடயங்கள் தொடர்பாக இரு கருத்துக்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. உதாரணமாக பௌத்த சமயத்தைப் பற்றி தற்பொழுதுள்ள 19 ஆவது திருத்தத்தில் ஒரு கண்ணோட்டமும் மாற்றுப் பார்வை (Alternate View) என்று மற்றொரு விடயமும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு விவாதங்களின் போது கட்சிகளும் பிரதிநிதிகளும் முன்வைத்த முன்மொழிவுகளை உள்ளடக்கிய மாற்றுக் கருத்துக்களும் இத்தோடு இணைக்கப்பட்டுள்ளன. மேலதிக கலந்துரையாடலுக்காகவே இது விடப்பட்டுள்ளது. இதுவொரு திட்டவட்டமானதொரு மசோதாவல்ல. சாதாரண மசோதா.

- **தற்போதைய சூழ்நிலையில் அரசியலமைப்பு உருவாக்கம் என்கின்ற விடயத்தைக் கொண்டு வருவது எவ்வளவு தூரம் பொருத்தம் என நீங்கள் கருதுகிறீர்கள்?**

இது திடீரென கொண்டுவரப்பட்ட விடயமொன்றல்ல. 2015 இல் தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பிறகு புதிய அரசியலமைப்பை உருவாக்கும் நோக்கில் பாராளுமன்றத்தை அரசியலமைப்பு சபையாக மாற்றும் பிரேரணையைக் கொண்டு வந்தது. அதன்படி பாராளுமன்றம் அரசியலமைப்புச் சபையாக மாற்றப்பட்டது. பிரமதர் தலைமையில் 7 உப குழுக்களையும் 21 உறுப்பினர்களையும் கொண்ட அரசியலமைப்பு வழிநடத்தல் குழு நியமிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து நாடு முழுவதிலும் மக்களிடம் கருத்தறிவதற்காக வேண்டி லால் விஜேநாயக்க தலைமையில் மக்கள் கருத்தறியும் குழு நியமிக்கப்பட்டது. எனவே அரசியலமைப்பு உருவாக்கச் செயற்பாடு இன்று நேற்று ஆரம்பிக்கப்படவில்லை.

2015 இற்கு பிறகு ஆரம்பிக்கப்பட்ட செயற்பாடே இடைக்கிடை தடங்கலுக்கு உள்ளாகி முன்னெடுக்கப்படுகிறது. தற்போது இந்தப் பணி மிகவும் தாமதமடைந்துள்ளது. இது 2015 இற்குப் பிறகு கிடைத்த நல்லாட்சிக் காலப் பகுதியில் நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டும். தற்போது இதை மீளக்கொண்டு வந்தாலும் இந்த அரசாங்கத்திற்கு இதை சமர்ப்பிக்க நேரம் போதாமல் உள்ளது. 1970 இல் ஆட்சிக்கு வந்த அரசாங்கம் 1 ஆம் குடியரசு யாப்பை இரண்டே வருடங்களில் நிறைவேற்றியது. 1977இல் ஆட்சிக்கு வந்த அரசாங்கம் ஓரிரு வருடங்களில் 2ஆம் குடியரசு யாப்பை நிறைவேற்றியது.

1994 இல் சந்திரிகா கொண்டுவந்த அரசியலமைப்புக்கு 1995 இல் யோசனைகள் முன்வைக்கப்பட்டு, பல தடவைகளில் கலந்தாலோசித்து, அது 1997 இல் மீள முன்வைக்கப்பட்டு, நீண்ட உரையாடலுக்குப் பின்னர் 2002 இல் பாராளுமன்றத்திற்கு கொண்டு வந்தார்கள். இதற்கு 5 வருடங்கள் எடுத்தது. இந்தக் காலப் பகுதியில் நாட்டின் சூழ்நிலையும் மாறி மக்கள் யாப்பு மீது கொண்ட ஆர்வமும் வேறு விடயங்களில் குவிய ஆரம்பித்தது. இதனால் இந்த யாப்பை நிறைவேற்ற முடியாமல் போனது.

எனவே ஆரம்ப இரண்டு வருடங்களில் யாப்புக்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு முடிக்கப்பட்டால் அதனை விரைவில் நிறைவேற்றிக் கொள்ளலாம் என்கின்ற கருத்தையே இந்த உதாரணங்கள் எமக்குச் சொல்கின்றன. தற்போதைய செயற்பாடும் அப்படித்தான் காலம் கடத்தப்பட்டு வருகின்றது. இந்த அரசாங்கத்திற்கு அரசியலமைப்பை நிறைவேற்றிக் கொள்வதற்கான காலம் போதாமல் உள்ளது.

எனது கருத்தின்படி, அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மிக முக்கியமான சில விடயங்களில் உடனடி மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும். நிறைவேற்று ஜனாதிபதி முறை ஒழிக்கப்பட்டு, பாராளுமன்ற ஜனநாயக முறை ஸ்தாபிக்கப்பட வேண்டும். தேர்தல் முறை மாற்றப்பட வேண்டும். இனப்பிரச்சினைக்கு சிறந்தொரு தீர்வு முன்வைக்கப்பட வேண்டும். இவை மிக முக்கியமான விடயங்கள்.

தற்போதைய சூழலில் இனவாத சக்திகள், நாட்டைத் துண்டாடப் பார்க்கிறார்கள் எனக் கூறி இந்த விடயங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். இந்த விடயத்தில் அரசாங்கத்திடமும் குறைபாடுள்ளது. அவர்களிடம் தொடர்பாடல் உத்திகள் (Communication Strategy) இல்லை. இனவாதச் சாயம் பூசப்பட்டிருக்கும் அரசியலமைப்பு தொடர்பான பிழையான வாதங்களை களைய வேண்டுமெனில் மக்களிடம் சென்று சரியான விளக்கத்தை அளிக்க வேண்டும்.

இதை எப்படிச் செய்வதென்ற நுணுக்கமோ அறிவோ இந்த அரசாங்கத்திடம் இல்லை. இனவாதக் கருத்துக்களால் அரசியலமைப்பு தோற்கடிக்கப்பட்டால் நாம் இன்னும் அநேக வருடங்கள் பின்னோக்கிச் செல்ல வேண்டியிருக்கும். அதனால் இந்தக் காலத்துக்கு பொருத்தமாக உள்ள 20 ஆம் திருத்தத்தை மாத்திரமாவது நிறைவேற்ற வேண்டும். அதில் குறிப்பிடப்பட்டுள்ள நிறைவேற்று அதிகார முறையை இல்லாதொழிக்க வேண்டும். இது பெரிய விடயமல்ல. அடுத்த கட்டமாக தேர்தலுக்குப் பிறகு இனப்பிரச்சினைக்கு நல்லதொரு தீர்வை முன்வைக்க முடியும். அவற்றை விட்டு விட்டு அரசியலமைப்பு உருவாக்கம் என்கின்ற விடயத்தை தற்போது கையில் எடுத்தால் ஒன்றையாவது செய்துகொள்ள முடியாமல் போகும்.

- **உங்கள் அவதானத்தின் படி புதிய அரசியலமைப்புக்குள் முன்வைக்கப்பட்டிருக்கும் விடயங்கள் எல்லா சமூகத்தையும் பிரதிபலிக்கும் வகையில் அமைந்திருக்கிறதா?**

இறுதி வரைவு வந்ததன் பிறகே இது குறித்துக் கருத்துச் சொல்ல முடியும். ஆனால் இது வரையில் நடந்த விடயங்களை அவதானிக்கும் போது எல்லா சமூகங்களுக்கும் நல்லதொரு தீர்வு கிடைக்க வேண்டும் என்பதற்காக முயற்சிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கருத்து இங்கு நோக்கத்தக்கது.


அவர்களது முதல் விருப்பம் பெடரல் முறை. ஆனால் பெரும்பான்மைக் கட்சிகள் இரண்டும் ஒன்றிணைந்து நல்ல முடிவுக்கு வந்தால் பெடரல் முறையை விட்டு விடத் தயார் என்று கூறுகின்றனர். அத்துடன் இரண்டு பிரதான கட்சிகளும் கொண்டு வரும் விடயங்கள் எல்லா சமூகத்தையும் திருப்திப்படுத்துவதாக இருக்க வேண்டும் என்றும் கூறியுள்ளது. ஒரு சமூகத்தை மட்டும் திருப்திப்படுத்தினால் அது வெகுகாலம் நீடிக்காது. இந்த வழியில் செல்ல எல்லோரும் தயாராக உள்ளனர். எல்லோருக்கும் கருத்துக்களை முன்வைக்கும் சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டது. இதற்காக வேண்டியே அதிக காலம் எடுத்தது.

- **முஸ்லிம் சமூகமும் இன்று இனவாதப் பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து வருகிறது. எனவே முஸ்லிம்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது தொடர்பாக உத்தேச அரசியலமைப்பில் ஏதும் மிக முக்கிய ஏற்பாடுகள் சொல்லப்பட்டுள்ளதா?**

பாதுகாப்பு என்பது எல்லா மக்களையும் திருப்திப்படுத்துவதாக இருக்க வேண்டும். ஐந்தாறு விடயங்களால் மாத்திரம் பாதுகாப்பு உருவாகாது. ஆங்கிலத்தில் Rule of Law என்பார்கள். அதை ஏற்படுத்தினால் பாதுகாப்பு கட்டாயம் உருவாகும். இதற்கு பல்வேறு அம்சங்கள் உள்ளன. இந்த அரசாங்கம் வந்தவுடன் சில விடயங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன. உதாரணத்திற்கு 19ஆவது திருத்தத்தில் அரசியலமைப்புச் சபை மூலமாக பொலிஸ் ஆணைக்குழு, மனித உரிமை ஆணைக்குழு, தகவல் அறியும் ஆணைக்குழு மற்றும் பொதுச் சேவை ஆணைக்குழுக்களின் செயற்பாடுகளை அரசியல் தலையீடின்றி முன்னெடுப்பதற்கான ஒரு சூழல் உருவாக்கப்பட்டிருக்கிறது.

பாதுகாப்பு என்கின்ற விடயத்தில் பொலிஸ் ஆணைக்குழுவின் செயற்பாடு மிக முக்கியமானது. இதில் கூட அரசியல்வாதிகளின் தலையீடு குறைந்துள்ளது. இவற்றை இன்னும் அதிகம் வலுப்படுத்தி சட்டம் ஒழுங்கை நிலை நாட்டினால் எல்லா மக்களுக்கும் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும்.

(பக்.14)




அபூ ஷாமில்

# சுதந்திரம் தொடர்பான அடிப்படை வாதம்

அடிப்படைவாதம் என்பது முஸ்லிம் சமூகம் புதிதாக எதிர்நோக்கியுள்ள சவால். ஒவ்வொருவரும் தமது மத அடிப்படையில் நின்று செயற்படுவது அடிப்படைவாதமாக முன்னர் நோக்கப்பட்டது. இப்பொழுது தமது மதத்துக்குள்ளாலேயே சில அடிப்படைகளில் மட்டும் நின்று செயற்படுபவர்கள் இந்தப் பதப் பிரயோகத்தின் மூலம் நாடப்படுகிறார்கள்.

முஸ்லிம் சமூகத்துக்குள்ளால் அவ்வாறானவர்கள் இருக்கிறார்கள் என்பது அரசல் புரசலாக அங்குமிங்கும் பேசப்படுகிறது. இந்த வகையான மத அடிப்படைவாதம் மதத்துக்கும் நல்லதல்ல. மதம் பிடித்தவர்களுக்கும் நல்லதல்ல. அதனால் மதத்திலிருந்து மதம் பிடித்தவர்களை வேறாக்கிக் காட்ட வேண்டிய தேவை சமூகங்களுக்கு இருக்கிறது. இந்த வகையில் இலங்கை முஸ்லிம்களும் இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் அடிப்படைவாதத்திலிருந்து வேறு பிரித்துக் காட்ட வேண்டிய நிலை தற்போது எழுந்திருக்கிறது.

அடிப்படைவாதிகளின் தொல்லை நாட்டுக்குப் பெரும் சவாலாக அமையப் போகிறது என்ற வகையில் இந்தப் பிரிகோடு தற்போதைய சூழமைவில் மிகவும் முக்கியமானது. இலங்கை முஸ்லிம்களுக்கு மத்தியில் அடிப்படைவாதிகளின் தோற்றம் பற்றிப் பேசப்படும் இந்த வேளையில், இலங்கை முஸ்லிம் சமூகம் நாட்டுக்கான தனது விசுவாசத்தை முன்னெப்போதுமில்லாத அளவுக்கு வெளிக்காட்ட வேண்டிய தேவை தற்பொழுது எழுந்திருக்கிறது. இது செயற்கையானதொரு செயற்பாடாக இல்லாமல் தாய் நாட்டைக் காப்பதற்கான ஒரு போராட்டமாக முஸ்லிம் சமூகத்தின் மத்தியில் இருந்து எழ வேண்டும். இப்படியான அடிப்படைவாதச் செயற்பாடுகளின் பின்னணியில் முஸ்லிம் சமூகத்தை விட இலாபமடையக் கூடிய சக்திகள் இருப்பதை நாட்டுக்கு வெளிச்சம் போட்டுக் காட்ட வேண்டும்.

அதற்கான சிறந்த சந்தர்ப்பமாக இம்முறைய சுதந்திர தின நிகழ்வுகளை முஸ்லிம் சமூகம் பயன்படுத்திக் கொள்ள முடியும். முஸ்லிம் சமூகத்தின் மத்தியில் தாய்நாட்டுப் பற்றை வளர்ப்பதில் அண்மைக் காலங்களில் பல்வேறு தரப்பினரும் முயற்சித்ததன் விளைவாக நாட்டுக்கு நல்ல பிரஜையாக நடத்தலில் முஸ்லிம் சமூகத்தின் பங்கு முன்னை விட ஓங்கியிருப்பது தெரிகிறது. இந்தத் தொடரில் முன்னரை விட அதிகமாக தாய் நாட்டுக்கான எமது விசுவாசத்தை முஸ்லிம் சமூகம் வெளிப்படுத்துவதற்கு இம்முறை சுதந்திர தினத்தின் போது முயற்சிக்க வேண்டும்.

தமக்கு ஏதும் நெருக்கடிகள் வரும்போது மட்டும்தான் முஸ்லிம்களுக்கு நாட்டைப் பற்றியும் நாட்டின் பெரும்பான்மை மக்களைப் பற்றியும் நினைவுக்கு வருகிறது என்று ஆங்காங்கே பேசப்படுகின்ற கருத்துக்களைப் பொய்ப்பிக்கும் வகையில் இந்த ஏற்பாடுகள் நடக்க வேண்டும். சுதந்திரப் போராட்டத்துக்கு முஸ்லிம்கள் வழங்கிய பங்களிப்புக்களைச் சொல்லிச் சொல்லி டிபி ஜாயாவின் பேரில் கத்தம் ஓதி முடிப்பதற்கு அப்பால் இந்த நாட்டைக் கட்டியெழுப்புவதில் ஆரம்பம் முதல் இன்று வரை முஸ்லிம்கள் செய்த பங்களிப்பைப் பறை சாற்றும் சந்தர்ப்பமாக இதனை அமைத்துக் கொள்ள முடியும்.

சாதியலுடனிருந்த மம்மலி மரிக்காருடைய பங்களிப்பு நாட்டுக்குச் செய்த அர்ப்பணிப்பாகச் சித்திரிக்கப்பட வேண்டும். வா வெல்லஸ்ஸவில் ஆங்கிலேயர்களுக்கு எதிராகப் போராடியதால் தூக்கிலிடப்பட்ட 07 முஸ்லிம்களையும் தேசிய வீரர்களாக இலங்கைச் சமூகத்துக்கு முன்வைப்பதற்கு முஸ்லிம் சமூகம் முயற்சியெடுக்க வேண்டும். இவ்வாறு தம்மை இழந்து நாட்டுக்கு உரமூட்டிய முஸ்லிம்களை ஞாபகப்படுத்துவதற்கு சுதந்திர தினத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

எனது தாத்தாவுக்கு ஒரு யானை இருந்தது என்று பழங்கதை சொல்வதனையும் தாண்டி சுதந்திரம் கிடைத்தது முதல் இன்று வரை நாட்டுக்குப் புகழ் தேடிக் கொடுத்தவர்களை நாட்டுக்கு அறிமுகப்படுத்தும் வகையிலான பாராட்டு நிகழ்வுகளை முஸ்லிம் சமூகம் வருடாந்தம் நடத்த முடியும். இப்படி முஸ்லிம்கள் இந்த நாட்டில் வாழ்வது நாட்டுக்குக் கிடைத்த வரம் என்பதை உணர்த்த முடியுமாக இருந்தால் அது இந்த நாட்டை வளப்படுத்துவதில் பெரும் பங்காற்ற முடியும்.

இப்படி முஸ்லிம் சமூகம் தன்னால் நாட்டுக்குப் பெருமை சேர்க்க முடிந்தால் அடிப்படைவாதிகளும் அதனை இறக்குமதி செய்து இலாபமடைவர்களும் தோற்றுப் போவது நிச்சயம். பண்பாட்டு ரீதியான அடிமைத் தனத்தில் நாடு மூழ்கிப் போயுள்ள நிலையில் பண்பாட்டுச் சுதந்திரத்தை மீளப் பெறுவதிலும் முஸ்லிம் சமூகம் நாட்டுக்கு வழிகாட்டிப் பெரும்பங்காற்ற முடியும்.

ஆனானப்பட்ட 'முஸ்லிம்' நாடுகளே தமது நாட்டின் சுதந்திர தினத்தைக் கோலாகலமாகக் கொண்டாடுகின்ற பொழுது, அந்தச் சில முஸ்லிம் நாடுகளை விடச் சிறந்த முறையில் முஸ்லிம்களை நடத்துகின்ற ஒரு நாட்டின் சுதந்திரத்தை முஸ்லிம் சமூகம் எப்படியெல்லாம் கொண்டாட வேண்டும்?

இனி சுதந்திரம் கொண்டாடலாமா என்ற அடிப்படை வாதத்தில் முஸ்லிம் சமூகம் இறங்கி விடாமல் இருந்தால் சரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அமெரிக்காவில் 45 பில்லியன் டொலர்களை முதலீடு செய்யும் கட்டார்

டச்சு வங்கி, கிரடிட் சுவிஸ், லண்டன் பங்குச் சந்தை, வோல்ட்ஸ் வெகன் ஆகிய கம்பனிகளில் ஏற்கனவே கட்டார் முதலீடு செய்திருந்தது. தற்போது அமெரிக்காவில் 30 பில்லியர்களை முதலீடு செய்திருப்பதாக முதலீட்டு அதிகார சபையின் தலைவர் மன்ஸூர் இப்றாஹீம் அல் மஹ்மூத் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

எதிர்வரும் இரு ஆண்டுகளில் இத்தொகையை 45 பில்லியனாக அதிகரிக்கப் போவதாக அவர் தெரிவித்தார். எகிப்து அறபு அமீரகம் சவூதி அரேபியா ஆகியன போக்குவரத்து மற்றும் ராஜதந்திர உறவுகளைத் துண்டித்ததன் பின்னர் அமெரிக்காவுடனான உறவை கட்டார் வலுப்படுத்தி வருவதோடு, பிற பொருளாதாரங்களோடு பாரியளவிலான இரு தரப்பு முதலீட்டுத் திட்டங்களையும் கட்டார் நடைமுறைப்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கட்டார் முதலீட்டு அதிகார சபை எதிர் வரும் இரு ஆண்டுகளில் 45 பில்லியன் அமெரிக்க டொலர்களை அமெரிக்காவில் முதலீடு செய்யவுள்ளதாகவும், ஐரோப்பாவிலிருந்து தனது முதலீட்டுத் தொகையை குறைத்துக் கொள்வதாகவும் தெரிவித்துள்ளது.

# சர்வதேசப் பார்வை



## குர்திஷ் போராளிகளுக்கு எதிராக தாக்குதல் நடாத்தினால் துருக்கியின் பொருளாதாரத்தை அழிப்போம்



சிரியாவில் இயங்கும் குர்திஷ் போராளிகள் மீது துருக்கி தாக்குதல் நடாத்தினால் துருக்கியின் பொருளாதாரத்தில் பெரும் இழப்பை ஏற்படுத்துவோம் என அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் அச்சுறுத்தியுள்ளார்.

துருக்கி-சிரிய எல்லையில் இயங்கும் YPG எனப்படும் குர்திஷ் ஆயுதக் குழுவை துருக்கி பயங்கரவாதிகள் என்று பட்டியல்படுத்தியுள்ளதோடு, அது துருக்கியின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் எனவும் கருதுகின்றது.

கடந்த காலங்களில் அவ்வியக்கத்தை இலக்கு வைத்து சிரியாவின் எல்லைப் புறத்தில் துருக்கிய இராணுவம் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றது. இந்நிலையில், இத்தாக்குதல்கள் நீடிக்குமாயின் துருக்கி-அமெரிக்க உறவுகள் பாதிக்கப்படும் என ட்ரம்ப் நிருவாகம் எச்சரித்துள்ளது.

YPG ஆயுதக் குழுவுக்கு வொஷிங்டன் ஆதரவளித்து வருவதாக அங்காரா குற்றம் சாட்டியுள்ளது. பயங்கரவாதத்திற்கு எதிரான போரில் அமெரிக்காவுடன் கைகோர்க்க வேண்டும் என்று பிற நாடுகளை அழுத்தி வரும் வொஷிங்டன் குர்திஷ் பயங்கரவாதிகளுக்கு ஆயுத மற்றும் பொருளாதார உதவிகளை வழங்கி வருவது முரண்பாடானது என துருக்கிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்க இராணுவம் சிரியாவிலிருந்து வெளியேறும் இத்தருணத்தில், இரு நாடுகளுக்கும் இடையிலான பதட்டம் அதிகரித்துள்ளது.

## இஸ்ரேல் சவூதிக்கு தொழில்நுட்பத்தைத் தர மறுத்திருந்தால் கஷூகி உயிருடன் இருந்திருப்பார்

இஸ்ரேலிலுள்ள NSO எனும் உளவுத் துறை தொழில்நுட்ப நிறுவனம் அதன் தொழில்நுட்ப சாதனங்களை சவூதி அரேபியாவுக்கு விற்பனை செய்யாமல் இருந்திருந்தால் படுகொலை செய்யப்பட்ட பத்திரிகையாளர் ஜனாமல் கஷூகி இன்னும் உயிர் வாழ்ந்திருப்பார் என எட்வர்ட் ஸ்னோடன் தெரிவித்துள்ளார்.

எடியோத் அஹ்ரனோத் எனும் இஸ்ரேலிய செய்திப் பத்திரிகைக்கு ஸ்னோடன் வழங்கிய பிரத்தியே நேர்காணலிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மனித உரிமைகளை தொடர்ச்சியாக மீறி வரும் சவூதி அரேபியாவிற்கு இஸ்ரேலினால் வழங்கப்பட்ட உளவுத் தொழில்நுட்பம் சார் கருவிகள் கஷூகியை படுகொலை செய்ய நன்கு பயன்படுத்தப்பட்டுள்ளதாக ஸ்னோடன் குறிப்பிட்டார். அமெரிக்க தேசிய பாதுகாப்பு முகவர் நிறுவனத்தின் முன்னாள் ஊழியரான எட்வோர்ட் ஸ்னோடன் அந்நிறுவனத்தின் நாசகரமான ஆவணங்களையும் தரவுகளையும் உலகின் பார்வைக்குக் கொண்டு வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.




## இஸ்ரேலிய விளையாட்டு வீரர்களுக்கு மலேசியாவில் இடமில்லை



**பிரதமர் மஹாதிர்**

இஸ்ரேலிய நீச்சல் வீரர்களுக்கு மலேசியாவில் எந்த இடமும் இல்லை. அவர்களுக்கு நாம் வீசா வழங்க மாட்டோம் என மலேசியாவின் பிரதமர் மஹாதிர் முஹம்மத் தெரிவித்துள்ளார்.

உலக நீச்சல் வீரர்களுக்கான 2019 சம்பியன்களைத் தெரிவுசெய்வதற்கான போட்டி இவ்வருடம் மலேசியாவில் நடைபெறவுள்ளது. இஸ்ரேலிய வீரர்களை நாம் அனுமதிக்க மாட்டோம். ஏற்பாட்டாளர்கள் அதற்காக போட்டியை ரத்துச் செய்வதானால் ரத்துச் செய்து கொள்ளலாம் என மஹாதிர் மேலும் கூறியுள்ளார்.

இஸ்ரேலின் ஒலிம்பிக் குழு தமது வீரர்களுக்கு வீசா வழங்குமாறு மலேசிய அதிகாரிகளை அழுத்தி வருகின்றது. எனினும், கடந்த 50 ஆண்டுகளாக இஸ்ரேலுடனான உறவை சுமூகமாக்குவதற்கு மலேசியா மறுப்புத் தெரிவித்து வருகின்றது. பலஸ்தீர்கள் மீதான இஸ்ரேலின் அடக்கு முறையே இதற்குக் காரணம் என மலேசியாவின் உதவி விளையாட்டு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## ஆழில்லாத விமானத் தாக்குதல்களைத் தொடரப் போவதாக ஹூதிகள் அச்சுறுத்தல்



ஐ.நா. வின் இடையீட்டிலான பேச்சுவார்த்தை முயற்சிகள் தோல்வி கண்டதை அடுத்து ஆழில்லாத விமானத் தாக்குதல்களைத் தொடரப் போவதாக ஹூதிகள் அச்சுறுத்தியுள்ளனர். யெமன் அரச இராணுவத்திற்கு எதிராகவும் சவூதி அரேபியாவுக்கு எதிராகவும் புதிய ரக ஆளில்லா விமானத் தாக்குதல்களை தீவிரப்படுத்தப் போவதாகவும் ஹூதி கிளர்ச்சியாளர்களின் பேச்சாளர் யஹ்யா தெரிவித்துள்ளார்.

பேச்சுவார்த்தை முறிவடைந்ததைத் தொடர்ந்து லஹஜ் மாகாணத்தில் ஹூதிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களில் பலர் கொல்லப்பட்டனர். இது ஆக்கிரமிப்புக்கு எதிரான தாக்குதல் என்று ஹூதிகள் நியாயப்படுத்தியுள்ளனர். பல முனைகளிலும் இவ்வாறான தாக்குதல்கள் மேற்கொள்ளப்படும் என தலைநகர் சன்ஆவைக் கட்டுப்படுத்தியுள்ள ஹூதி கிளர்ச்சியாளர்கள் அச்சுறுத்தல் விடுத்துள்ளனர்.

ஹுதைதா துறைமுக நகரத்தின் பாதுகாப்புக் குறித்து ஐ.நா. பேச்சுவார்த்தையில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. போர் நிறுத்தமொன்றை மேற்கொள்வதன் மூலம் நிவாரணப் பணிகளை முன்னெடுப்பதற்கு இரு தரப்பும் உடன்பட்டன. எனினும், பேச்சுவார்த்தை இடைநடுவில் தோல்வி கண்டதனால் மீளவும் வன்முறைகள் வெடித்துள்ளன.

## கனடாவினால் தேடப்படும் சவூதி இளைஞர்

பாலியல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ள முஹம்மத் ஸுரைபி எனப்படும் 28 வயதான சவூதி இளைஞர் ஒருவரை கெனடிய அதிகாரிகள் தேடி வருவதாக குரோனிகல் ஹெரால்ட் எனப்படும் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. ஸுரைபி கனடாவிலுள்ள சவூதி தூதரகத்தின் உதவியோடு நாட்டை விட்டு தப்பியோடியிருக்கலாம் என அப்பத்திரிகை தெரிவித்தள்ளது.

கேக் பிரிட்டன் பல்கலைக்கழகத்தில் மாணவனாக இருந்த ஸுரைபி, பாலியல் குற்றச்சாட்டு மற்றும் அபாயகரமாக வாகனம் ஓட்டிச் சென்றமை மற்றும் பல குற்றச் செயல்கள் புரிந்தவர் என குற்றம் சாட்டப்பட்வர். நீதிமன்ற விசாரணைகளை எதிர்கொண்டிருந்த ஸுரைபி திடீரெனத் தலைமறைவாகியுள்ளதாக இப்பத்திரிகை தெரிவிக்கின்றது. ஏற்கனவே அவரை தடுப்புப் காவலிலிருந்து விடுவிப்பதற்கு சவூதி தூதுரகம் 37500 டொலர்களை சரீரப் பிணையாக செலுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஈராக்கிலும் சிரியாவிலும் குழந்தைப் போராளிகளை இணைக்கும் ஆயுதக் குழுக்கள்

ஈராக், சிரியா ஆகிய நாடுகளில் செயல்படும் YPG, PKK ஆகிய குர்திஷ் ஆயுதக் இயக்கங்கள் 11 முதல் 16 வயதான சிறுவர்களை பலாத்காரமாக தமது ஆயுத இயக்கங்களில் இணைப்பதாக குற்றம் சுமத்தப்படுகின்றது. இக் குழந்தைப் போராளிகளில் ஆண்களும் பெண்களும் உள்ளடங்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

துருக்கியின் அனாதொலு செய்திச் சேவை இது குறித்த அறிக்கையொன்றை கடந்த வாரம் வெளியிட்டது, மேற்படி இயக்கங்கள் தாக்குதல்களில் பயன்படுத்துவதற்கு சிறுவர்களைக் கடத்திச் செல்வதாக இவ்வறிக்கை கூறுகின்றது.



வடக்கு சிரியாவிலும் ஈராக்கிலும் YPG இயக்கம் பள்ளிக் குழந்தைகளைக் கடத்திச் சென்று பயங்கரவாத செயற்பாடுகளில் ஈடுபடுத்துவதாக மேற்படி அறிக்கை தெரிவித்துள்ளது.

இச்சிறார்கள் போரில் கேடயங்களாகப் பயன் படுத்தப்படுகின்றனர் என 2015 ஜூலையில் சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் வெளியிட்டுள்ள அறிக்கையிலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறு சிறுவர்களைப் போரில் ஈடுபடுத்துவது சர்வதே மனித உரிமைப் பிரடகனங்களின்படி பெரும் குற்றமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• றவூப் ஸெய்ன்



# சூடானில் என்ன நடக்கின்றது?

கடந்த மூன்று வாரங்களாக சூடானில் உமர் அல் பஷீரின் அரசாங்கத்திற்கு எதிராக மக்கள் பேரணி வலுத்து வருகின்றது. எதிர்வரும் நாட்களில் இப்பேரணிகள் பெரும் வன்முறையாக வெடிக்கும் என அச்சம் தெரிவிக்கப்படுகின்றது. உமர் பஷீரின் அரசாங்கம் கவிழ்க்கப்படுவதோடு பஷீர் உடனடியாகப் பதவி விலக வேண்டும் என்று பேரணியில் கலந்துகொள்ளும் மக்கள் கோஷமிட்டு வருகின்றனர்.

பாணின் விலை உயர்ந்ததை அடுத்து பொருளாதார நெருக்கடிகள் குறித்த மக்களின் கவனம் அரசுக்கு எதிராகத் திரும்பியுள்ளது. 1989 ஆம் ஆண்டில் இடம்பெற்ற இரத்தம் சிந்தாப் புரட்சியின் மூலம் பஷீர் பதவிக்கு வந்தார். 30 ஆண்டு கால அவரது பதவிக் காலத்தில் பாரியளவிலான மக்கள் பேரணியை சந்திக்கும் முதல் தருணம் இதுவே.

தான் பதவி விலக மாட்டேன் என்று பஷீர் உறுதியாகத் தெரிவித்துள்ளார். ஆனால், அரசுக்கெதிரான மக்கள் வெள்ளத்தை கட்டுப்படுத்துவது இராணுவத்திற்கு பெரிய நெருக்கடியை உருவாக்கியுள்ளது. கிழக்கு நகரான அல் கதாரிபில் இடம்பெற்ற மக்கள் பேரணியை இராணுவம் கலைக்க முற்பட்டபோது குறைந்தது 19 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

டிசம்பர் 19 இல் ஆரம்பித்த மக்கள் எதிர்ப்புப் பேரணி வடகிழக்கு நகரான அத்பாராவிலும் இடம்பெற்றது. சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் வன்முறைகளில் கொல்லப்பட்டோர் தொகை 40 என அதன் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

''அரசாங்கம் மக்களுக்கு எவ்வித பொருளாதார சலுகையையும் வழங்கும் நிலையில் இல்லை. அதற்கு ஓரளவே மக்கள் பலம் உள்ளது. இதேவேளை, அரசுக்கு எதிரான மக்களின் உணர்வலைகள் கூர்மையடைந்து வருகின்றன'' என்கிறார் பட்டப்படிப்புக்கான தோஹா நிறுவனத்தின் அரசியல் துறை பேராசிரியர் அப்துல் வஹ்ஹாப் அல் எபந்தி.

தற்போது உமர் பஷீருக்கு எதிரான மக்கள் போராட்டம் அந்நாட்டிலுள்ள தொழிற்சங்கங்கள் மற்றும் தொழின்முறை அதிகாரிகளின் பெருத்த வலைப்பின்னலோடு முன்னெடுக்கப்பட்டு வருவதாக பேராசிரியர் வஹ்ஹாப் கருத்து வெளியிட்டுள்ளார்.

சூடான் தொழின்முறை அதிகாரிகளின் சபை (SPA) நாடு முழுவதும் பணிப் பகிஷ்கரிப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாக அவர் கூறியுள்ளார். உமர் பஷீரின் ஜனாதிபதி மாளிகையை நோக்கி வந்த பேரணி இரு முறை காவல் துறையினரால் தடுத்து நிறுத்தப்பட்டது. டிசம்பர் 25 இல் தலைநகர் காட்டூமில் இடம்பெற்ற பாரிய மக்கள் பேரணியை சூடான் தொழின்மைசார் அதிகாரிகள் வழிநடாத்தினர். உம்மு தர்மானிலும் ஆர்ப்பாட்டங்கள் வலுவடைந்து வருகின்றன.

பெயர் குறிப்பிட விரும்பாத அதிகாரி ஒருவர் கார்டூமிலுள்ள அல் ஜஸீரா செய்தியாளரிடம் ''அரசாங்கம் எத்தகைய அடக்குமுறையைப் பிரயோகித்தாலும் நாம் அஞ்சப் போவதில்லை. அமைதியடையப் போவதுமில்லை. குறிக்கோளை எட்டும்வரை எமது போராட்டம் தொடரும்'' எனத் தெரிவித்துள்ளார்.

அலைமோதும் மக்கள் வெள்ளத்தை பாதுகாப்புப் படையினர் கண்ணீர்ப் புகை மற்றும் நீர்த் தாரைகளைப் பயன்படுத்தி கலைக்க முற்படுகின்றனர். நேரடியான துப்பாக்கிக் குண்டுகளை இராணுவம் பயன்படுத்துவதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. சூடானின் அரச நிருவாகம் குறிப்பிடத்தக்க அளவு ஸ்தம்பிதம் அடைந்துள்ளது. அரச பாடசலைகள், பல்கலைக்கழகங்கள் அனைத்தும் மூடப்பட்டுள்ளதோடு, பெரும்பான்மையான மாகாணங்களில் அவசரகால நிலையை உமர் பஷீரின் அரசாங்கம் பிரகடனம் செய்துள்ளது.

22 அரசியல் கட்சிகளும் இணைந்து மாற்றத்திற்கான தேசிய முன்னணி (NFC - National Front for Change) என்ற ஓர் அமைப்பை நிறுவியுள்ளன. ஒட்டுமொத் தத்தில் களநிலவரங்களை நோக்கும் போது உமர் பஷீருக்கு எதிரான எதிர்ப்பலைகள் மேலும் கூர்மையடையக்கூடிய வாய்ப்பே உள்ளது.

நிலமையை கருத்திற் கொண்ட உமர் பஷீரின் அரசாங்கத்திற்கு ஆதரவளிக்கும் இஸ்லாமியக் கட்சிகள் மற்றும் பிரதான கட்சிகளிலிருந்து வெளியேறியவர்கள்



உமர் பஷீர் பதவி விலகுவதே நெருக்கடிக்குத் தீர்வு என அறிவித்துள்ளன. 'சூடானில் மாற்றம் இப்போதே' எனப்படும் கட்சியும் உம்மா கட்சியும் ஆளும் கூட்டணியிலிருந்து விலகியுள்ளன.

மாற்றத்திற்கான தேசிய முன்னணியில் ஒருவரான மஹ்மூத் அல் ஜமால் எதிர்ப்பு இயக்கத்திற்கு மேலும் அதிக மான ஆதரவை திரட்டும் நோக்கில் அரசியல் கட்சிகளோடு பேச்சுவார்த்தைகளை நடத்தி வருவதாகத் தெரிவித்துள்ளார். இடைக்கார அரசாங்கத்திடம் அதிகாரத்தை உமர் பஷீர் ஒப்படைக்கும் வகையிலான ஒப்பந்தமொன்றை எதிர்க்கட்சிகளும் அரசாங்கத்திலிருந்து பதவி விலகிய கட்சிகளும் கிட்டிய நாட்களில் கைச்சாத்திடும் என்று ஜமால் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

தற்போதைய சூடான் நெருக்கடிக்கான மூல காரணம் என்ன எனும் கேள்விக்கு, பெரும்பான்மையான கட்சிகள் இருக்கும் அரசாங்கமே பிரதான காரணம் என்கின்றன. எதிர்க்கட்சிகளும் பலமானதாக இல்லை. அரசியல் விவகாரங்களில் அவை பிரிந்து செயல்படுகின்றன. நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிகள் மக்களின் அன்றாட வாழ்வை கடுமையாகப் பாதித்துள்ளன.

2020 இல் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலுக்கு முன்னர் பொருளாதார அபிவிருத்தி குறித்து பஷீர் வழங்கிய வாக்குறுதிகள் எதுவும் நிறைவேறவில்லை. அத்தியவசியப் பொருட்களின் விலை வேகமாக உயர்ந்து செல்கின்றது. இந்நிலையில், தேர்தல் ஒன்றுக்குச் செல்வதே தீர்வு என எதிர்க்கட்சிகளும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவோரும் கூறுகின்றனர்.

சூடானின் இன்றைய நிலை மிகச் சிக்கலானது. தற்போதுள்ள அரசாங்கத்தின் கீழ் தேர்தல் நடைபெறுமானால் மோசடிகள் இடம்பெறலாம். அது மக்கள் எதிர்பார்க்கும் மாற்றத்திற்கு வழிவகுக்கப் போவதில்லை என்றே எதிர்க்கட்சிகள் கருதுகின்றன.

சூடானில் மக்கள் எழுச்சிக்கு நீண்ட வரலாற்றுப் பின்னணியி உள்ளது. 1964 ஒக்டோபரிலும், 1985 ஏப்ரலிலும் இது போன்ற மக்கள் பேரணியை நாடு சந்தித்தது. இத்தகைய சந்தர்ப்பங்களில் தொழிற்சங்கங்களும் தொழின்மைசார் அதிகாரிகளும் மேற்கொண்ட அரச எதிர்ப்புப் பேரணிகளில் அரசியல் கட்சிகள் இணைந்தன. இறுதியில் நாட்டில் ஆட்சி மாற்றம் வேண்டும் என்ற அழுத்தத்தை இராணுவத் தரப்பிலிருந்து அது உருவாக்கியது.

ஆனால், 2013 செப்டம்பரில் கார்டூமில் வெடித்த எதிர்ப்புப் பேரணிகளை அரசாங்கம் திட்டமிட்ட வகையில் அடக்கியது. சர்வதேச மன்னிப்புச் சபையின் அறிக்கையின்படி, அதில் 185 பேர் கொல்லப்பட்டனர். தற்போது நடைபெறும் ஆர்ப்பாட்டங்கள் எங்கு போய் முடியும் என்பதைத் தெளிவாகக் கூற முடியாதுள்ளது.

உமர் பஷீர் அரசாங்கம் ஏற்கனவே விழுந்து விட்டது.ஆனால் நாட்டின் இராணுவத்தை அது தொடர்ந்தும் கட்டுப்படுத்தி வருகின்றது என சூடானின் அரசியல் பகுப்பாய்வாளர் முஹம்மத் உஸ்மான் அல் ஜஸீராவுக்குத் தெரிவித்தார். ஆர்ப்பாட்டங்கள் நீடித்தால் இராணுவத் துறையிலுள்ள சில அதிகாரிகள் அரசுக்கு எதிராகத் திரும்பி பஷீரின் பிடியிலிருந்து நாட்டை மீட்டெடுப்பர் என முஹம்மத் உஸ்மான் மேலும் தெரிவித்துள்ளார்.

இன்னொரு புறம் அரசு கையாளும் கடுமையான அடக்குமுறைகளை கருத்திற் கொண்டு ஆர்ப்பாட்டக்காரர்கள் களத்திலிருந்து ஒதுங்கிக் கொள்ளவும் முடியும். இவ்வாறு இரண்டு வாய்ப்புக்களும் உள்ளன.

சிரியாவிலும் லிபியாவிலும் இடம்பெற்றது போல் இந்தக் கிளர்ச்சி நாட்டை முற்றாக முடமாக்கும் நிலைக்கு இட்டுச் சென்றுவிடக் கூடாது. அது சூடானின் ஸ்திரப்பாட்டையும் பொருளாதார வீழ்ச்சியையும் உருவாக்குவதோடு, வெளிநாடுகளின் தலையீட்டையும் ஊக்குவிக்கும். நாட்டை விட்டு அகதிகள் வெளியேறும் நிலையையும் தோற்றுவிக்கும் என்கிறார் தோஹா நிறுவனத்தின் அரசியல் துறை பேராசிரியர் அப்துல் வஹ்ஹாப் எபந்தி.



# பங்களாதேஷ்: மீண்டும் ஹஸீனா

**அவாமி லீக் ஆதரவாளர்களுக்கு ஷேக் ஹஸீனா 'மனிதாபிமானத்தின் தாய். பல பத்தாயிரம் ரோஹிங்ய அகதிகளுக்கு அடைக்கலம் வழங்கியவர். ஆனால் எதிர்க்கட்சிகளுக்கோ அவர் ஒரு ஊழல் பேர்வழி மிக்க சர்வதிகாரி. அரசியல் இலாபத்திற்காக காலிதாஸியாவையும் அவரது ஆதரவாளர்களையும் சிறையில் அடைத்த கோடுங்கோலர்.**

டிசம்பர் தேர்தலை அடுத்து கடந்த வாரம் ஷேக் ஹஸீனா நான்காவது முறையாக பங்களாதேஷின் பிரதமராக சத்தியப் பிரமாணம் செய்துகொண்டுள்ளார். எதிர்க்கட்சிகள் இந்தத் தேர்தலை ஊழலும் மோசடியும் நிறைந்தது என்று குற்றம் சுமத்தியுள்ள நிலையிலேயே 71 வயதான ஹஸீனா தெற்காசியாவிலுள்ள 165 மில்லியன் மக்களின் தலைவியாக சத்தியப் பிரமாணம் செய்துள்ளார்.

ஹஸீனா பொருளாதார வளர்ச்சியை சாத்தியப்படுத்தியவர் என்று அவாமி லீக் கட்சியின் ஆதரவாளர்கள் எக்களிக்கின்றபோது, அவர் ஒரு சர்வதிகாரி என்று எதிர்க்கட்சிகளும் இஸ்லாமியவாதிகளும் அவரைச் சாடுகின்றனர்.

டிசம்பர் 30 இல் நடந்த தேர்தலில், 300 பேர் கொண்ட பாராளுமன்றத்தில் அவாமி லீக் கட்சியும் அதனோடு இணைந்த ஏனைய கூட்டுக் கட்சிகளும் சேர்ந்து 288 ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளன. எதிர்க்கட்சிகள் அனைத்துக்கும் கிடைத்த மொத்த ஆசனங்கள் வெறும் 07 ஆகும். இந்த சமநிலை இன்மை ஹஸீனாவின் ஊழலையும் தேர்தல் மோசடியையும் புரிந்து கொள்ளப் போதுமானது என்கின்றன எதிர்க்கட்சிகள்.

தேர்தலுக்கு முன்பாக நடுநிலையான பல அரசியல் செயற்பாட்டாளர்கள், எதிர்க்கட்சி வேட்பாளர்கள் பலர் கைதுசெய்யப்பட்டனர். பங்களாதேஷ் தேசிய கட்சி (BNP) தலைவியும் முன்னாள் பிரதமருமான பேகம் காலிதாஸியா தேர்தலில் குதிக்க முடியாது என்று தேர்தலுக்கு முன்பாகவே உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இது மிகப் பெரிய ஜனநாயக விரோதத் தீர்ப்பு மட்டுமன்றி, நீதித் துறையின் சுயாதீனத்தையும் கேள்விக்குள்ளாக்குகின்ற ஒன்றாகும்.

டிசம்பர் 30 தேர்தல் அன்று இடம்பெற்ற வன்முறைகளில் 17 பேர் கொல்லப்பட்டனர். ஐரோப்பிய ஒன்றியம் தேர்தல் ஒழுங்கீனங்கள் குறித்து விசாரணை செய்யுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளது. தேர்தல் காலங்களின் போது இடம்பெற்ற வன்முறைகள், ஆள் மாறாட்டம், வாக்கு மோசடி குறித்து நம்பகமான அறிக்கை வெளியிடப்பட வேண்டும் என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

ஐ.நா. சபை தேர்தல் காலங்களில் இடம்பெற்ற அரச தரப்பு வன்முறைகளை கடுமையாகச் சாடியுள்ளது. தேர்தல் அறிவிக்கப்பட்டதிலிருந்து இடம்பெற்ற தனிநபர்கள் மீதான தாக்குதல்கள், தான்தோன்றித்தனமான கைதுகள், பலர் காணாமல் போனமை, முக்கிய நபர்களுக்கு எதிரான குற்றவியல் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டமை என்பன தேர்தல் வெற்றியை இலக்கு வைத்து ஹஸீனாவின் அவாமி லீக் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட தந்திரோபாயங்கள் என ஐ.நா. சபை தெரிவித்துள்ளது.

வெற்றி பெற்ற 7 எதிர்க்கட்சி உறுப்பினர்களும் சத்தியப் பிரமாணம் செய்ய மறுத்துள்ளதோடு, தேர்தல் மீளவும் நடாத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர். அவாமி லீக் ஆதரவாளர்களுக்கு ஷேக் ஹஸீனா 'மனிதாபிமானத்தின் தாய். பல பத்தாயிரம் ரோஹிங்ய அகதிகளுக்கு அடைக்கலம் வழங்கியவர். ஆனால் எதிர்க்கட்சிகளுக்கோ அவர் ஒரு ஊழல் பேர்வழி மிக்க சர்வதிகாரி. அரசியல் இலாபத்திற்காக காலிதாஸியாவையும் அவரது ஆதரவாளர்களையும் சிறையில் அடைத்த கொடுங்கோலர். பத்திரிகை சுதந்திரத்திற்கு எதிராக அவர் கொண்டு வந்த சட்டம் ஜனநாயக விரோதமானது.

1975 ஆகஸ்டில் சில இராணுவ அதிகாரிகள் அவரது தந்தையும் பங்களாதேஷின் முதல் ஜனாதிபதியுமான ஷேக் முஜீபுர் ரஹ்மான் அவரது மனைவி மற்றும் 3 மகன்மார்களைக் கொலை செய்ததை அடுத்து ஹஸீனா வெளிநாட்டில் தங்கியிருந்தார். 1981 இல் பங்களாதேஷ் திரும்பிய ஹஸீனா அவாமி லீக் கட்சியின் தலைமைத் துவத்தை ஏற்றதோடு, பங்களாதேஷ் மக்களின் அபிமானத் தலைவியாகவும் தன்னை நிலைநிறுத்திக் கொண்டார்.

இராணுவச் சர்வதிகாரியான ஹுஸைன் முஹம்மத் இர்ஷாதை 1990 இல் பதவி கவிழ்ப்பதற்கு பேகம் காலிதாஸியாவுடன் ஹஸீனா ஒன்றிணைந்தார். ஆனால், ஹுஸைன் பதவி கவிழ்க்கப்பட்ட பின்னர் இருவருக்கும் இடையிலான அரசியல் பகைமை வெடிக்கத் தொடங்கியது.

நடைபெற்ற தேர்தலில் ஷேய் ஹஸீனா தலைமையிலான மாபெரும் கூட்டணியில் அவாமி லீக், ஜாதிய கட்சி (இர்ஷாத்), பங்களாதேஷ் தொழிலாளர் கட்சி, ஜாதிய சமைத்தன்திக் தால் கட்சி, விகல்ப தாரா பங்களாதேஷ், ஜாதிய கட்சி (மனியூ), பங்களாதேஷ் தரீக்கத் பெடரேஷன், பங்களாதேஷ் தேசிய முன்னணி என்பன இடம்பெற்றன.

பங்களாதேஷ் தேசிய கட்சியின் தலைவர் கமால் ஹுஸைனின் தலைமையிலான தேசிய ஐக்கிய முன்னணியில் 16 கட்சிகள் அங்கத்துவம் வகித்திருந்தன. இவற்றுள் பங்களாதேஷ் ஜமாஅத்தே இஸ்லாமியும் ஒன்றாகும்.

மூன்றாவது கூட்டணியான இடதுசாரி ஜனநாயகக் கூட்டணியில் ஐந்து இடதுசாரிக் கட்சிகள் ஒன்றிணைந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டில் குழப்பநிலையொன்றைத் தோற்றுவிப்பதற்கான கருமேகங்கள் கருக்கட்டியிருந்த மாவனல்லைப் பிரதேசத்துக்கான விஜயத்தின் முதல் அம்சமாக ஹிங்குலவில் சேதமாக்கப்பட்ட தெருவோர புத்தர் சிலையைத் தரிசித்தோம். மஞ்சள் புடவையினால் போர்த்தப்பட்டிருந்த சிலையை பெருப்பித்திக் கட்டும் வேலையில் இருவர் ஈடுபட்டிருந்தனர். இப்படித்தான் மாவனல்லைப் பிரதேசங்களில் சிலைகள் சேதமாக்கப்படுவதும் பின்னர் அவை பெருப்பித்துக் கட்டப்படுவதும் நடக்கின்றது என்பதை மாவனல்லை பஸ் தரிப்பிடத்தில் முன்னைய காலங்களில் சேதமாக்கப்பட்ட ஒரு சிலை பிரமாண்டமாய் வளர்ந்திருப்பதை வைத்து நாங்கள் அறிந்து கொண்டோம்.

நாங்கள் ஊடகவியலாளர்கள் என்று சிலை நிர்மாணப் பணியில் ஈடுபட்டிருந்தவர்களிடம் அறிமுகப்படுத்திக் கொண்டோம். நாங்கள் தொல்பொருள் திணைக்களத்தைச் சேர்ந்தவர்கள் என்று அவர்கள் பதிலுக்குச் சொன்னார்கள். இது ஒரு தொல்பொருள் இல்லையல்லவா என்று கேட்டோம். இல்லை, எங்களுக்கு இந்த வேலையைச் செய்யச் சொன்னார்கள் என்று சொல்லி விட்டு நழுவ, நாங்களும் நழுவினோம். அரசாங்கம் முன்னெடுக்கும் ஏனைய நடவடிக்கைகளையும் பார்ப்பதற்காக.

மாவனல்லை சிலை உடைப்பு தொடர்பில் கைதுசெய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள ஏழு இளைஞர்களையும் பற்றி ஊரில் விசாரித்தவர்கள் எல்லோருமே அவர்கள் நல்லவர்கள் என்ற பொதுவான வார்த்தையைத்தான் சொன்னார்கள். குகைவாசிகள் போலன்றி இவர்கள் பொது விடயங்களில் ஈடுபட்டு மக்களோடு மக்களாகத்தான் வாழ்ந்திருக்கிறார்கள்.

இப்ராஹிம் மௌலவியின் பக்கத்து வீட்டுக் காரர் ஸபீர் இவர்கள் பற்றிச் சொல்லும் போது, உடைந்து பழுதாகியிருந்த எமது தெருவுக்கு கொங்கிரீட் போடுவதில் இவர்கள் தான் முன்னின்று உழைத்தார்கள். கொஞ்சம் கொஞ்சமாக பணம் சேகரித்து இந்த வேலையைச் செய்தார்கள். மௌலவி உடைய மகன்கள் நடத்திய அகீதா வகுப்புக்கு யாரையும் அவர்கள் பலவந்தப்படுத்தி அழைக்கவில்லை. அவர்களுடைய பாட்டில் அவர்கள் இருந்தார்கள் என்றார்.

எங்களை அழைத்துச் சென்ற முச்சக்கர வண்டிச் சாரதி நிஹால் அஹமட் சொன்ன தகவல்களின் படி இந்தக் கைதுக்கு முன்னர் இவர்கள் பொதுவில் அறியப்படாதவர்களாகத்தான் இருந்தார்கள். இவர்கள் பற்றி வித்தியாசமாக அடையாளங் காட்டிச் சொல்வதற்கு எதுவுமே இருக்கவில்லை என்று சான்றளித்தார்.

இதே ஊரைச் சேர்ந்த ஒய்வு பெற்ற பொலிஸ் அதிகாரி ஸித்தீக்கிடம் விசாரித்த போதும் அவரும் இதே கருத்தையே முன்வைத்தார். அவர்கள் க்லாஸ் நடத்திக் கொண்டிருந்தார்கள். இடைக்கிடை ஹைக்கிங் செய்வார்கள். மற்றும்படி தீவிரமான எந்தச் செயற்பாடுகளையும் இவர்களிடம் காண முடியவில்லை என கைது செய்யப்பட்டுள்ள ஒருவரின் பெரியப்பா சொன்னார். இப்படி யாரிடம் விசாரித்தாலும் அந்த இளைஞர்கள் சம்பந்தமாக நற்சான்றுகளே வெளிவந்தன.

சிலை உடைப்புடன் சம்பந்தப்படுத்திப் பேசப்படுபவர்கள் அனைவருமே தெல்கஹகொட ஜும்ஆப் பள்ளிவாசலின் அங்கத்தவர்கள் என்ற வகையில் பள்ளிவாசலின் செயலாளர் இமாமுத்தீன் ஆசிரியரிடம் இவர்கள் பற்றி வினவினோம். பண்பாடுகளில் மோசமான பகுதிகள் எதுவும் இவர்களிடம் இல்லை. தீவிர சிந்தனை உடையவர்கள் என்பதை ஜமாஅதே இஸ்லாமி இவர்களைத் தமது ஜமாஅத்திலிருந்து விலக்கிய பின்பே தெரிந்து கொண்டோம்.

ஆனால் எந்த வகையான தீவிரத்தை அவதானித்து விலக்கப்பட்டார்கள் என்பதை யாரும் எங்களுக்கு அறியத் தரவில்லை. யாப்புக்கு முரணாக நடந்ததால் விலக்கப்பட்டதாகவே எமக்குச் சொல்லப்பட்டது. எமக்குத் தெரிந்த வகையில் அவர்கள் தமது வீடுகளில் வகுப்புக்கள் நடத்தி வந்தார்கள். வெளியிடங்களில் இருந்தும் இதில் யாரும் வந்து கலந்து கொண்டார்களா என்று எமக்குத் தெரியாது.

ஒரு முறை பள்ளிவாசலில் நான்கு நாள் நிகழ்ச்சியொன்றை தமது அங்கத்தவர்களுக்கு நடத்துவதற்கு இடம் கேட்டார்கள். நிகழ்ச்சிகளின் உள்ளடக்கம், தலைப்புக்கள் சம்பந்தமாக நாங்கள் விபரம் கேட்டோம். பின்னர் அவர்கள் அந்த நிகழ்ச்சியை நடத்தவில்லை. பள்ளிவாசலின் எந்த நடவடிக்கைகள் தொடர்பிலும் அவர்கள் கொள்கை ரீதியாகவோ ஏனைய வழிகளிலோ முரண்பட்டதும் கிடையாது. ஆனால் சக வாழ்வு தொடர்பில் பள்ளிவாசலின் செயற்பாடுகளில் அவர்களுக்குக் கடுமையான விமர்சனம் இருந்தது. இவ்வளவு தூரம் இறங்கிச் செல்ல வேண்டுமா என்று அவர்கள் கேள்வி கேட்டார்கள்.

இது தவிர சிலைகளை உடைக்

கடுகண்ணாவப் பிரதேசத்தில்தான் இவர்களில் ஒருவர் பொது மக்களால் பிடிக்கப்பட்டிருக்கிறார். தெல்கஹகொடயில் இருந்து சுமார் 07 கி.மீ. தொலைவிலுள்ள முஸ்லிம்களே இல்லாத பகுதிக்கு அந்த அதிகாலை மூன்று மணி வேளையில் இவர்கள் செல்வதற்கான தேவை என்ன?


நாவலப்பிட்டி செல்வதற்காக இப்ராஹீம் மௌலவியின் மகன் தனது மகனை இரவில் அழைத்துச் சென்றதாகக் கூறும் பிடிக்கப்பட்ட அஷ்பாக்கின் தந்தை, எனது மகன் வேறொருவரின்

தெல்கஹகொட பள்ளிவாசல் செயலாளர் சொன்னதை வைத்தும் மக்களுடையதும் கைதுசெய்யப்பட்டவர்களின் உறவினர்களதும் தகவல்களை வைத்தும் பார்க்கின்ற பொழுது ஜமாஅத்தே இஸ்லாமியுடனான உறவும் பிரச்சினைக்குரியதொன்றாக இருந்ததில்லை என்பது தெளிவாகிறது.

அப்படியானால் இது ஒரு லோன்லி வொல்ப் தாக்குதல் முறையா? அப்படி இருக்க முடியாது என்கிறார் ஏஎஸ்பி கமல் பெரேரா. நிச்சயமாக இதற்கு ஒரு நெட்வேர்க் இருக்கிறது. இங்கு

# சிலைகள் வடிக்கும் விம்பங்கள்

## மாவனல்லை சிலை உடைப்பு பற்றியதொரு அகலப் பார்வை





மட்டுமன்றி பொதுஹர, கம்பளை, மன்னார் எனப் பல பிரதேசங்களிலும் பௌத்த, இந்து, கிறிஸ்தவ சின்னங்கள் உடைக்கப்பட்டிருக்கின்றன. மன்னார், திருகோணமலை, காத்தான்குடி என நாட்டின் பல பிரதேசங்களிலும் இவர்களுடன் தொடர்புடையவர்கள் இருக்கிறார்கள் என அவர் தெரிவித்தார்.

இவர்கள் தாமாக இங்கு இயங்கவில்லை. சர்வதேச அளவில் யாரோ இவர்களை இயக்குகிறார்கள். அவர்கள் ஐஎஸ் ஆகவும் இருக்கலாம். வேறு சர்வதேச சக்திகளாகவும் இருக்கலாம். அந்தச் சக்திகளைத் தான் (High hands) நாங்கள் தேடத் தொடங்கியிருக்கிறோம் என அவர் கூறினார்.

தலைமறைவாக இருப்பவர்களைத் தேடிக் கண்டுபிடிக்க முடியாதா எனக் கேட்டதற்கு, நாட்டிலிருந்து வெளியேற முடியாதபடி விமான நிலையத்துக்கு அறிவித்தல் கொடுத்திருக்கிறோம். கடல் மார்க்கமாகத் தப்பிச் செல்வதற்கான அவகாசம் இல்லாமலில்லை என்று அவர் தெரிவித்ததைப் பார்த்தால், அவர்கள் வெளிநாடுகளில் கண்டு பிடிக்கப்படலாம் என்ற எதிர்பார்ப்பும் எழுகிறது. இப்ராஹிம் மௌலவியின் மகன் ஏற்கனவே துருக்கி சென்று வந்திருப்பதும் இந்த வாய்ப்புக்கு உரமூட்டுகிறது.

வெளியாகின. லாஇலாஹ இல்லல்லாஹ், அல்லாஹ்வைத் தவிர வேறு கடவுளர்கள் இல்லை என்பதனால் புத்தர் சிலைகளைத் தாம் உடைத்ததாக இவர்கள் வாக்கு மூலம் வழங்கியதாகவும் செய்திகள் வெளியாகி இருந்தன. ஆனால் கைதுசெய்யப்பட்டுள்ள ஏழு பேரும் சிலை உடைப்புடன் சம்பந்தப்பட்டவர்கள் அல்ல. சிலை உடைத்ததாகச் சொல்லப்படுபவர்களுடன் சம்பந்தப்பட்டவர்கள். ஆகவே இவர்கள் இப்படியான வாக்கு மூலம் வழங்கியிருப்பார்களா என்ற சந்தேகத்தை ஏஎஸ்பி கமல் பெரேராவிடம் கேட்ட போது, இல்லை. அப்படியான வாக்கு மூலம் எதுவும் வழங்கப்படவில்லை. இந்தச் சம்பவத்துக்கு மத ரீதியான தொடர்புகள் எதுவும் கிடையாது என அவர் கூறினார்.

ஊரில் சந்தேகப்படும் படியாகவும் இவர்கள் இல்லை. தீவிரவாதச் செயற்பாடுகளில் ஈடுபட்டதாகவும் எந்தத் தகவல்களும் இல்லை. இஸ்லாமிய இயக்கங்களுடனும் இவர்கள் இல்லை. தாக்குதல்கள் மத உணர்வு சம்பந்தப்பட்டவையாகவும் இல்லை. அப்படியானால் இந்தத் தாக்குதல்களின் பின்னணி என்ன? இந்தத் தாக்குதல்களால் இஸ்லாத்துக்கோ முஸ்லிம்களுக்கோ எந்த நன்மையும் விளையப் போவதில்லை. தற்போதைய நிலையை விடவும் மோசமான நிலையில் முஸ்லிம்கள் பாதிக்கப்பட்ட போது கூட இவ்வாறானதொரு நிலைக்கு முஸ்லிம் இளைஞர்கள் தூண்டப்பட்டதில்லை. அப்படியானால் இப்போது இந்தத் தாக்குதல்கள் ஏன்? முஸ்லிம் சமூகத்தைப் பகடைக்காயாக வைத்து வேறு யாரும் காய் நகர்த்த முயற்சிக்கிறார்களா?

இவர்கள் தனியான குழுவாக இயங்கினார்களா என்ற கேள்வி இப்போது பல தரப்பினாலும் எழுப்பப்படுகிறது. இந்த இளைஞர்களுடைய நெட்வேர்க் தொடர்பில் விசாரித்த போது Professional Development Group (PDG) என்ற பெயரில் இவர்கள் இயங்கியதாகத் தெரிய வந்தது. இது இவர்கள் ஊரில் ஒரு குழுவாக இயங்குவதற்காக வைத்துக் கொண்ட பெயர் என்றும் இதற்குத் தேசிய அளவிலான நெட்வேர்க் இருப்பதற்கு வாய்ப்பில்லை என்றும் தெரிய வந்தது.

இதற்கப்பால் தெல்கஹகொடயின் பிரபலமான கார்ல்டன் விளையாட்டுக் கழகத்தில் இப்ராஹிம் மௌலவியுடைய மகன் தான் செயலாளராக இருக்கிறார். இப்படிப் பல தொடர்புகள் இவர்களுக்கிடையில் இருந்த பொழுதிலும் சமய வகுப்புக்களில் சம்பந்தப்பட்டவர்கள் மட்டுமே கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். இதனால் ஒரு மத ரீதியான பிரச்சினையை நாட்டிலே தூண்டுவதற்கான முயற்சி நடப்பதான சந்தேகத்தையும் பலரும் கிளப்புகின்றனர்.

முஸ்லிம்கள் மீதான திகன தாக்குதல்கள் கட்டுமீறிச் சென்றது போல புத்தர் சிலையை உடைத்ததால் ஏதும் பிரதி விளைவுகள் ஏற்படவில்லை என்பது மக்களுக்குப் பெரிதும் ஆறுதலாக இருந்தது. சம்பந்தப்பட்டவர்கள் உடனே கைதுசெய்யப்பட்டதனால் மக்கள் கொந்தளித்து எழுவதைத் தவிர்க்க முடிந்தது. திகனயில் இது தவறவிடப்பட்டது என உதவிப் பிரதேச செயலாளர் ரங்கன அத்தநாயக்க இது தொடர்பில் விபரித்தார்.

11 ஆம் திகதி வரை கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் நடத்துவதற்கான நீதிமன்றத் தடையுத்தரவு விதிக்கப்பட்டமையும் நிலைமையைக் கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்கு உதவியது என ஏஎஸ்பி கமல் பெரேராவும் தெரிவித்தார். இந்த வகையில் திகன சம்பவத்தின் போது பிரதமரின் கையிலிருந்த சட்டம் ஒழுங்கை விடவும். மாவனல்லைச் சம்பவத்தில் ஜனாதிபதியின் கையிலிருந்த சட்டம் ஒழுங்கு சிறப்பாகச் செயல்பட்டிருக்கிறது. ஆச்சரியப்படத்தக்க வகையில் ஊடகங்களும் எதிர்பாராத விதமாக பொறுப்புடன் நடந்து கொண்டன. கடுகண்ணாவ பிரதேசத்தில் முஸ்லிம் இளைஞர் ஒருவர் பிடிபட்ட சிலை உடைப்புச் சம்பவம் தான் சிலை உடைப்புத் தொடரில் இறுதியானது. அதற்கு முன்னர் நடந்த சிலை உடைப்புக்கள் தொடர்பிலும் ஊடகங்கள் மெத்தனமாகவே நடந்து கொண்டமை வியந்துரைக்கத்தக்கது.

சிலையை தாக்கியதாகச் சந்தேகிக்கப்படுபவர் தப்பியோடிய பின்னர்,

கின்ற அளவுக்கெல்லாம் அவர்களிடம் தீவிரமான போக்கு எதனையும் நாங்கள் அவதானிக்கவில்லை என்றார். தெல்கஹகொட பிரதேசத்தை உள்ளடக்குகின்ற இடம்பிட்டிய கிராம சேவகர் பிரிவின் கிராம சேவையாளர் தீபிகா ஜயவர்தன கடந்த நான்கு மாதங்களுக்கு முன்னர் தான் இந்தப் பகுதியில் கடமையேற்றிருந்தார். தனது அறிவுக்கெட்டியவரையில் தமது பிரதேசத்தில் எந்தத் தீவிரவாதக் குழுக்களும் இருப்பதான தகவல்கள் இருக்கவில்லை என அவர் கூறுகிறார்.

மாவனல்லை முஸ்லிம்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையிலான வரலாறு மிகவும் தொன்மையானது என்று கூறும் மாவனல்லை உதவிப் பிரதேச செயலாளர் ரங்கன அத்தநாயக்க, சிங்கள மன்னர்களுக்கு மருத்துவம் செய்வதற்காக வெளிநாடுகளில் இருந்து வந்த முஸ்லிம் மருத்துவர்களுக்கு மன்னர்கள் இங்கு காணிகளை அன்பளிப்பாக வழங்கி வைத்தார்கள். அவர்கள் இங்கு சிங்கள மக்களுடன் இரண்டறக் கலந்து வாழ்ந்தார்கள். இன்றும் கூட முஸ்லிம்களுடைய பெயர்களுடன் சிங்களப் பெயர்கள் இணைந்திருக்கின்றன. அந்தளவு தூரம் சிங்கள முஸ்லிம் உறவு இங்கு பலமானது.

அந்த வகையில் முஸ்லிம் சமூகத்திலிருந்து யாரும் புத்தரின் சிலையை உடைக்க வேண்டிய தேவை எதுவும் இங்கில்லை. யாராவது அப்படிச் செய்திருப்பார்களானால் அவர்கள் வெளிச் சக்திகளின் தூண்டுதலாலேயே அவ்வாறு செய்ய முடியும். உலகில் அமைதியை நிலைநாட்டுவதற்கு உழைக்கின்ற சில என்ஜீஓக்களுக்கு அமைதியை நிலைநாட்டும் தமது வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவற்காக நாடுகளில் குழப்பநிலையைத் தோற்றுவிக்கும் தேவையும் இருக்கிறது என்கிறார். இந்த வகையில் பார்த்தால் அவர்களுக்குத் தீவிரவாதத் தொடர்பு இருப்பதனை யாருமே உறுதிப்படுத்தவுமில்லை.

இப்படி யாரைக் கேட்டாலும் இந்த இளைஞர்கள் இதனைச் செய்திருப்பதற்கான வாய்ப்பில்லை என்று உறுதிப்படுத்துகிறார்கள் என்றால், [illegible] லையில் என்ன தான் நடந்திருக்கும்?

பைக்கை எடுத்துக் கொண்டு அவருடன் சென்றுள் ளார். கடுகண்ணாவ பிரதேசத்தில் வைத்து பைக்கை நிறுத்தச் சொல்லி சிறிது தூரம் முன்னோக்கிச் செல்லுமாறு இப்ராஹிம் மௌலவியின் மகன் கூறியுள்ளார். விளக்குகளை அணைத்து பைக்கை ஸ்டார்ட்டில் வைத்திருக்குமாறும் அவர் கூறியுள்ளார். சில நேரங்களின் பின்னர் மக்கள் கூச்சலிட்டுக் கொண்டு ஓடி வந்து எனது மகனைத் தாக்கியுள்ளனர். இப்ராஹிம் மௌலவியின் மகன் ஓடிவிட்டார் என்று கூறுகிறார்.



இப்றாஹீம் மௌலவியின் வீடு

இப்ராஹிம் மௌலவி ஜமாஅதே இஸ்லாமியைச் சேர்ந்தவர் என்ற நம்பிக்கையிலேயே எனது மகனை அவர்களுடைய வகுப்புக்களுக்கு அனுப்பி வைத்தோம். அவர் (இப்ராஹிம் மௌலவி) விலக்கப்பட்ட செய்தி எங்களுக்குத் தெரியாது என விளக்கமறியலில் இருக்கும் மற்றுமொருவரின் தந்தை கூறினார்.

ஜமாஅதே இஸ்லாமி பதிவு செய்யப்பட்டதொரு இயக்கம். அந்த இயக்கம் தொடர்பில் பிரச்சினைகள் கிடையாது. ஆனால் அதிலிருந்து விலக்கப்பட்டவர்களின் தீவிரவாதச் செயற்பாடுகள் பற்றியே நாம் பார்க்க வேண்டியுள்ளது என கேகாலை மாவட்ட உதவிப் [illegible]

சிரியாவில் கண்டுபிடிக்கப்பட்ட ஐஎஸ் தொடர்பிருப்பதாகக் கூறப்பட்ட அபூ சுரையா சைலானி குடும்பத்துடன் மாயமாய் மறைந்தது போலவே இப்ராஹிம் மௌலவியின் மகன், தனது மனைவி மற்றும் இரண்டு வயதுக் குழந்தையுடன் தலைமறைவாகியுள்ளார். அவரது இளைய மகனும் தற்பொழுது தலைமறைவாகியுள்ளதோடு, இப்ராஹிம் மௌலவியும் தனது நாவலப்பிட்டி இல்லத்திலேயே தங்கியிருக்கிறார்.

இப்ராஹிம் நபி தனது தந்தை வணங்கிய சிலைகளைத் தகர்த்தது போலவே இப்ராஹிம் மௌலவியின் புதல்வர்கள் [illegible] சிலைகளைச் சேதப்படுத்தியிருக்கலாம் என்று ஆரம்பத்தில் தகவல்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• அனஸ் அப்பாஸ்

# தன்னார்வக் கண்டுபிடிப்பாளர் காத்தான்குடி சிராஜ்

M.N. முஹம்மது சிராஜ் அவர்கள் காத்தான்குடி முதலாம் குறிச்சியைச் சேர்ந்தவர். ஸைத்தூன் பீபி - முஹம்மத் நுஹ்மான் தம்பதிகளின் மூத்த புதல்வரான இவர், காத்தான்குடி அல்-நாசர் வித்தியாலயத்தில் கல்வி கற்றவர். 2007 ஆம் ஆண்டு க.பொ.த சாதாரண தர பரீட்சையுடன் தனது பாடசாலைக் கல்வியை இடைநிறுத்திவிட்டு, தந்தையைப் போன்றே தானும் தேர்ந்த ஒரு தையல் இயந்திர பழுதுபார்ப்பவராக சில வருடங்கள் தொழில் புரிந்தார். பின்னர் (தொழிற்துறை கற்கை மேற்கொண்ட) பத்திர எழுதுனர் (Draftsman) ஆக தொழில் நிமித்தம் கத்தார் நாட்டிற்குச் சென்று அங்கு (மேலதிகமாக வரையுனராகவும்) மூன்றரை வருடங்கள் பணி புரிந்தார்.



தற்போது 26 வயதைக் கடக்கும் சிராஜ், ஒரு மணித்தியாலயத்தில் 1,200 முதல் 1,500 வரையான இடியப்பங்களைத் தயாரித்து வழங்கும் இயந்திரம் ஒன்றைக் கண்டுபிடித்துள்ளார். இவ்வியந்திரம் மின்சாரத்தில் இயங்குகின்றது. இடியப்பம் மட்டுமன்றி முறுக்கு வகைகள், பிஸ்கட் வகைகள் உள்ளிட்ட பல தின் பண்டங்களை இதன் மூலம் தயாரிக்க முடியும். இயந்திரம் மட்டுமன்றி அதனுடன் ஸ்டீமர் (நீராவியில் அவிக்கும் பகுதி) உம் இணைக்கப்பட்டுள்ளது.

சிறு வயது முதலே தையல் இயந்திரம் மற்றும் இதர இயந்திர பழுது பார்த்தல்களை மேற்கொண்டதாலும், பாடசாலைப் பருவ செயற்றிட்ட அனுபவங்களுமே இந்தக் கண்டுபிடிப் பின் தோற்றுவாய் எனக் குறிப்பிடும் சிராஜ், இதுவே முதல் கண்டுபிடிப்பு. இக்கண்டு பிடிப்புக்கான காப்புரிமை (Patent Right) பெற்றுக்கொள்வதற்கான முயற்சிகளில் தற்சமயம் ஈடுபட்டுள்ளேன் என்றார். இதுவரை எவ்வித அங்கீகாரமும் (விருதுகளோ, சான்றிதழ்களோ) இவருக்குக் கிடைக்கவில்லை.


இக்கண்டுபிடிப்பை வெளிக்கொணர பொருளாதார ரீதியில் பாரிய சிரமங்களை எதிர்கொண்டதாகவும், தந்தையும் சுகவீனமுற்றிருக்கும் நிலையில் அன்றாட ஜீவனோபாய வருமானத்திலேயே இதனை மேற்கொண்டதாகவும் அவர் கூறினார்.

இது தனது கண்டுபிடிப்பு என்று சொல்வதை விட தன்னிடமுள்ள ஆக்கத் திறனுக்கான ஒரு மாதிரி (Sample) என்றே குறிப்பிடுகின்றார். உத்தேச கண்டுபிடிப்புகள் தொடர்பாக தன்னிடம் நிறைய செயற்றிட்டங்கள் இருப்பதாகவும், இலங்கையில் மின்சாரத்துறையில் பாரிய பற்றாக்குறைகள் காணப்படுவதாகவும், இதற்கான தீர்வாக மின்வலு உற்பத்தி செய்ய தான் எதிர்பார்த்திருப்பதாகவும் தெரிவிக்கின்றார்.

இனிவரும் காலங்களில் பல புதிய இயந்திரங்களை கண்டுபிடிப்பதுடன், பாடசாலைகளில் இத்துறையில் ஆர்வத்துடன் காணப்படும் மாணவர்களை இனங்கண்டு அவர்களை ஒன்றிணைத்து, வழிகாட்டும் ஆர்வமும் தன்னிடம் இருப்பதாக குறிப்பிடுகின்றார்.

துரித இடியப்ப தயாரிப்பு இயந்திரத்தை கண்டுபிடித்து 6 மாதங்கள் எவ்வித அங்கீகாரங்களும் இன்றியே இருந்தது. 6 மாதங்களின்பின் சகோதரர் நூர்தீன் அவர்கள் முகநூலில் அதனை பதிந்ததன் பின்னர்தான் வெளியுலகம் கண்டு கொண்டது. பின்னர் ஒரு வாரத்தில் இக்கண்டுபிடிப்பு குறித்து தேசிய நாளிதழ் ஒன்றும் செய்தி வெளியிட்டது.

குறித்த முகநூல் காணொளியில் அடுத்து தான் தனது ஊரான காத்தான்குடி முழுவதற்கும் மின்சாரத்தை வழங்கக்கூடிய கருவியொன்றை (Generator) கண்டுபிடிக்க உத்தேசித்து இருப்பதாகவும் குறிப்பிட்டிருந்தார். ஒரு மாதம் கடந்தும் யாரும் அதற்கு எவ்வித துலங்கலும் காட்டாததால் தனக்கு விரக்தி ஏற்பட்டதாகவும், அவ்வாறான ஒரு இயந்திரத்தின் தேவையை சமூகமோ முதலீட்டாளர்களோ உணரவில்லை என்பது தனக்குப் பெரும் கவலை என்பதாகவும் தெரிவிக்கின்றார்.



"அரச மட்டத்தில் உள்ளவர்களை அணுகி இலவச மின்வலு உற்பத்தியைப் பற்றி தெரிவித்திருக்கலாமே! அல்லது தனவந்தர்களை அணுகினால் அவர்கள் உதவுவார்களே" என்று நான் கேட்டதற்கு, இதுவரை அவ்வாறான Proposal ஒன்றைத் தயாரிக்கவில்லை என்றும், சமூகத்துக்கான / நாட்டுக்கான தேவையை சமூகமே உணராமல், அன்றாட ஜீவனோபாய திண்டாட்டத்துடன் தொடர் முயற்சியை தான் மட்டும் மேற்கொள்வது சலிப்பைத் தருவதாகக் கூறினார்.

அண்மையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களால் கிழக்கு மாகாணத்துக்கான புதிய ஆளுநராக இவரது ஊரைச் சேர்ந்த M.L.A.M ஹிஸ்புல்லாஹ் அவர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றார். அவரது கவனத்திற்கு குறித்த விடயம் கொண்டு செல்லப்பட்டதா என்று கேட்டதற்கு, அவரை சந்திப்பதற்கான முயற்சிகளில் தற்சமயம் ஈடுபட்டு வருவதாகவும் குறிப்பிடுகின்றார்.

"சிறு வயது முதலே "உன்னால் முடியாது... உன்னால் முடியாது" என்று பலரும் சொல்வதைக் கேட்டே வளர்ந்தேன். வாழ்வில் நாம் ஒரு அடைவைப் பூர்த்திசெய்யும் வரை யாரும் கவனிக்க மாட்டார்கள். எமக்குள்ளிருக்கும் திறமையை நாம் வெளிக்காட்டாதவரை எம்மால் முன்னேற முடியாது, யாரும் அங்கீகரிக்கவும் மாட்டார்கள். பலநாள் தனிமையில் யோசித்திருக்கிறேன். இதன் விளைவாகவே எனது கண்டுபிடிப்பு மலர்ந்தது. முதலில் சிறியதொரு Power Supply கருவியை 2006 ஆம் ஆண்டு எனது தங்கையின் உதவியுடன் கண்டு பிடித்தேன், அதுவே எனக்கான முதல் உந்துசக்தி. அந்த Power Supply வெற்றிகரமாக வேலை செய்தது. தற்போது எமதூரில் பெரிய நிறுவனம் ஒன்றை நடாத்திவரும் இயந்திர வல்லுனரான எனது மாமா, அப்போது கொரியாவில் இருந்து வந்ததும் என்னைப் பாராட்டினார்" என மாணவர்களுக்கான தனது உற்சாக வார்த்தைகளைக் குறிப்பிடுகின்றார்.

"முதற்கண் இறைவனுக்கே நன்றி அல்ஹம்துலில்லாஹ்!
அடுத்து பெற்றோர், தங்கைமார், உறவினர்கள், நண்பர்கள், நலன்விரும்பிகள் அனைவருக்கும் நன்றி" பகர்கின்றார்.

"மின்சார உற்பத்தி என்பது ஒரு அதிசய விடயமாகப் பேசப்படுகின்றது. ஆனால், அது பூதாகரமாக பேசப்படும் அளவு கடினமானதொன்றல்ல. சிறிய அளவு மின்வலுவை பெருப்பித்தே பாரியளவான மின்வலு உற்பத்தி இடம்பெறுகின்றது. நான் தயாரிக்க உத்தேசித்திருக்கும் Power Supply மூலம் முற்றிலும் இலவசமான மின்சாரத்தை ஊர் முழுவதிற்குமான வீதி விளக்குகளுக்கும் கொடுக்க முடியும், இதன் மூலம் ஒரு மாத காலத்திற்கு மின்சாரத்தை வழங்க ஒரு மாநகர சபை செலவு செய்யும் பல இலட்சங்களை சேமிக்க முடியும். இதற்குப் பங்களிக்க நான் என்றும் தயார்.


மேலும், வீடுகளுக்கான Power Supply யை தயாரித்து வழங்கவும் என்னால் முடியும். இதனால் ஆயுள் முழுதும் இலவச மின்சாரம் உங்களுக்குக் கிடைக்கும்" என்றும் குறிப்பிடுகின்றார். இயந்திர வல்லுனர் (Mechanic) ஒருவராக உருவாக வேண்டும் என ஆசை வைத்துள்ள சிராஜுக்கு போதிய வழிகாட்டலை வழங்க துறை சார்ந்தவர்கள் முயற்சித்தால் எட்டாக் கனியாகவுள்ள பயனுள்ள பல வெளியீடுகள் விரைவில் சாத்தியமாக முடியும் இன்ஷா அல்லாஹ்!

விரைவில் திருமண பந்தத்தில் இணையவுள்ள சிராஜுக்கு வாழ்த்துக்கள்!

---

• உஸ்தாத் ஆஸாத் அப்துல் முஈத்

கூட்டு இஜ்திஹாத்: அறிமுகமும் பிரயோகமும் (13)



# இஸ்லாமிய அறிஞர்களுக்கான சர்வதேச ஒன்றியத்தின்

## ஐந்தாவது மாநாடு

2018 நவம்பர் மாதம் 3ம் திகதி இஸ்லாமிய அறிஞர்களுக்கான சர்வதேச ஒன்றியத்தின் ஐந்தாவது மாநாடு நடைபெற்றது. துருக்கியின் இஸ்தான்புல் நகரில் இடம்பெற்ற இம்மாநாட்டில் 80ற்கும் அதிகமான நாடுகளைச் சேர்ந்த சுமார் 1300 அறிஞர்கள் கலந்து கொண்டனர். மற்றும் 50ற்கும் மேற்பட்ட நாடுகளின் உலமா சபைகளின் பிரதிநிதிகளும் பங்குபற்றினர்.

கலாநிதி யூசுப் அல் கர்ளாவியின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் துருக்கியின் மத விவகாரங்களுக்கான தலைவர் கலாநிதி அலி அர்பாஷ், அதன் முன்னாள் தலைவர் கலாநிதி முஹம்மத் கோர்மாஸ் கலந்து சிறப்பித்தனர். அத்துடன் இஸ்தான்புல் நகரத்தின் மேயர் மவ்லூத் ஒவ்ஸால், மஸ்ஜிதுல் அக்ஸாவின் பிரதம கதீப் ஷெய்க் இக்ரிமா ஸப்ரி அவர்களும் மாநாட்டின் மேடையை அலங்கரித்தனர்.

இஸ்லாமிய சமூகம் என்றுமில்லாதவாறு பல்வகையான சவால்களை எதிர்நோக்கி வரும் இக்காலகட்டத்தில் இம்மாநாடு நடைபெற்றது. தலைவர், உபதலைவர்கள், பொதுச் செயலாளர் மற்றும் ஏனைய நிர்வாக உறுப்பினர்கள் இதன்போது தெரிவு செய்யப்பட இருந்தனர். இதற்கான பிரத்தியேக ஏற்பாடுகள் செய்யப்பட்டும் இருந்தன.

இங்கு உரை நிகழ்த்திய பேரறிஞர் யூசுப் அல்கர்ளாவி அடுத்த தலைமுறைக்குப் பொறுப்பைக் கையளிப்பதில் முன்மாதிரியாக விளங்கினார். அவர் ஆற்றிய உரை அங்கு வருகை தந்த ஆயிரக்கணக்கான உள்ளங்களை அழவைத்தது.

இவ்வகையில் இஸ்லாமிய அறிஞர்களுக்கான சர்வதேச ஒன்றியத்தின் தலைவராக கலாநிதி அஹ்மத் அர்ரைஸூனி அவர்கள் தெரிவு செய்யப்பட்டார். 1953 ஆம் ஆண்டு மொரோக்கோவில் பிறந்த கலாநிதி அஹ்மத் அர்ரைஸூனி இஸ்லாமிய அறிஞர்களுக்கான சர்வதேச ஒன்றியத்தின் ஸ்தாபக அங்கத்தவர்களில் ஒருவராவார். மகாஸிதுஷ் ஷரீஆ துறையில் ஆழ்ந்த அறிவும், தேர்ச்சியும் உள்ள இவர், இத்துறையில் நவீன காலத்தின் முன்னோடியாகக் கருதப்படுகின்றார். மகாஸித் மற்றும் ஷரீஆவின் ஏனைய கலைகளில் முப்பதுக்கும் மேற்பட்ட நூல்களையும் எழுதியுள்ளார்.

மொரோக்கோவின் இஸ்லாமிய இயக்கமான ஹரகதுத் தவ்ஹீத் வல் இஸ்லாஹ்வின் தலைவராக 1996 முதல் 2003 ஆம் ஆண்டு வரை செயற்பட்ட இவர், இஸ்லாமிய சிந்தனைக்கான சர்வதேச நிறுவனத்தின் ஆலோசகராகவும் காணப்படுகின்றார்.

உள்நாட்டு மற்றும் சர்வதேச நிறுவனங்களை உருவாக்குவதிலும் அவற்றை வழிநடாத்துவதிலும் பங்காற்றி வருகின்ற கலாநிதி அஹ்மத் அர்ரைஸூனி, மொரோக்கோவின் ராபிதது உலமா அஹ்லிஸ் ஸுன்னாவின் முதலாவது தலைவராகவும் செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தலைவர் தெரிவு நடைபெற்ற பின்னர் நான்கு உப தலைவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். ஓமான் நாட்டின் முப்தி ஷெய்க் அஹ்மத் அல் கலீலி, இந்துனேசியாவைச் சேர்ந்த ஷெய்க் ஹபீப் ஸாலிம் அல் ஜிப்ரி, சூடானைச் சேர்ந்த கலாநிதி இஸாம் அல் பஷீர், துருக்கியைச் சேர்ந்த ஷெய்க் கைருத்தீன் கஹ்ருமான் ஆகியோரே இவர்களாவர். இஸ்லாமிய உலகின் கிழக்குப் பகுதியான இந்துனேசியா, அதன் மேற்குப் பகுதியான மொரோக்கோ, வடபகுதியான துருக்கி, தென்பகுதியான சூடான் என அனைத்து இஸ்லாமிய நாடுகளையும் இணைக்கும் பாலமாக இந்தத் தெரிவு இருப்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வொன்றியத்தின் பொதுச் செயலாளராகப் பணிபுரிந்த கலாநிதி அலி முஹியத்தீன் அல் கரதாஈ மீண்டும் அதன் பொதுச் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டார். ஈராக்கின் வட பகுதியான குர்திஸ்தானின் சுலைமானியா நகரில் 1949ம் ஆண்டு இவர் பிறந்தார்.

சிறு வயதில் புனித அல்குர்ஆனை மனனமிட்ட கரதாஈ இஸ்லாமிய வங்கி மற்றும் வியாபார முறைமைகள் தொடர்பில் ஆழ்ந்த புலமையும் அறிவும் கொண்டவராவார். இது தொடர்பில் அவர் எழுதிய நூல்கள் இஸ்லாமிய கொடுக்கல் வாங்கல் பரப்பில் இன்று காணப்படும் பல்வேறு பிரச்சினைகளுக்கான தீர்வினை எவ்வாறு பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்கான வழிகாட்டல்களைத் தருகின்றது.

இதனைத் தொடர்ந்து இரு நாட்களாக 'சமாதான சகவாழ்வு' என்ற தொனிப் பொருளில் இம்மாநாடு நடைபெற்றது. அவுஸ்திரேலியாவின் முப்தி கலாநிதி இப்ராஹிம் அபு முஹம்மத், தூனீஸியாவின் முன்னைய அவ்காப் அமைச்சர் கலாநிதி நூருத்தீன் காதிமி, ஜேர்மனியைச் சேர்ந்த பிரபலமான அறிஞர் கலாநிதி காலித் ஹனபி, மகாஸித் துறை முன்னோடிகளில் ஒருவரான கலாநிதி வஸ்பி ஆஷூர் அபு ஸைத் போன்ற முக்கியமான அறிஞர்களின் கலந்துரையாடல்கள் இதில் இடம்பெற்றன.

தொடர்ந்து 'முஸ்லிம் உம்மா ஒற்றுமைப்பட வேண்டியதன் அவசியம்' பற்றிய செயலமர்வு அவுஸ்திரேலியாவின் முப்தி கலாநிதி இப்ராஹிம் அபு முஹம்மத் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இம்மாநாட்டில் சுன்னிகளுடன் ஷீஆக்களும் கலந்து கொண்டமை ஒரு சிறப்பம்சமாகும். சுன்னி ஷீஆ என நாம் பிளவுபட்டிருப்பது எதிரிகளுக்கே வாய்ப்பாக அமைந்துவிடும் என்ற கருத்தை கலாநிதி இப்ராஹிம் அபு முஹம்மத் இங்கு சுட்டிக் காட்டினார்.

இம்மாநாட்டின் முடிவில் பல்வேறு சந்திப்புக்கள் நடைபெற்றன. இலங்கையைச் சேர்ந்த பல ஆளுமைகளும் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர். இதன் போது இத்திஹாதின் பொதுச் செயலாளர் கலாநிதி அலி முஹியத்தீன் அல் கரதாஈ அவர்களின் அழைப்பின் பேரில் இலங்கை, இந்திய, பங்களாதேஷில் இருந்து மாநாட்டில் கலந்து கொண்ட அறிஞர்களுடனான பிரத்தியேகமான ஒரு சந்திப்பும் நடைபெற்றது.

---

## ஆசிரியர் போட்டிப் பரீட்சைக்கான இலவசக் கருத்தரங்கு

வடமேல் மாகாணத்தில் பட்டதாரி ஆசிரியர் நியமனத்துக்கான அரசாங்கப் போட்டிப் பரீட்சையை முன்னிட்டு குருநாகல் மாவட்ட முஸ்லிம் சமூகநல கல்வி அபிவிருத்தி ஒன்றியம் (ASMED) கருத்தரங்கு மற்றும் இலவச வழிகாட்டல் வகுப்புகளை இலவசமாக நடாத்துவதற்கு ஏற்பாடு செய்துள்ளது. நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான இலவச வழிகாட்டல் வகுப்புகளும் நடைபெறும்.


தகுதியும் அனுபவமும் வாய்ந்த சிறந்த வளவாளர்களைக் கொண்டு மேற்படி வகுப்புகளும் கருத்தரங்குகளும் நடாத்த ஏற்பாடாகியுள்ளது. முதல் வகுப்பு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 02 ஆம் திகதி சனிக்கிழமை காலை 08.30 மணியளவில் குருநாகல் ஸாஹிறாக் கல்லூரியில் ஆரம்பமாகும் என்று ஒன்றியத்தின் உப தலைவரும் கல்விக் குழுத்தலைவருமான கலாநிதி பீ.எம். பாரூக் தெரிவித்துள்ளார்.

இவ்வகுப்புகளில் பங்குபற்றிப் பயனடைய விரும்புவோர் ஒன்றியத்தின் தலைவர் அல்ஹாஜ் எம்.ஏ. ஹாஷிம் (0718 169 009) உப தலைவரும் வழிகாட்டல் வகுப்புகளுக்குப் பொறுப்பாளரான இளைப்பாறிய கல்விப் பணிப்பாளர் எம்.யூ.எம். சனூஸ் (0715 674 071) ஆகியோரிடம் தமது பெயர்களைப் பதிவுசெய்து கொள்ளுமாறு வேண்டப்படுகிறார்கள். மேலதிக விபரங்கள் தேவைப்படின் அவர்களிடம் பெற்றுக் கொள்ளலாம் என்று ஒன்றியத்தின் செயலாளர் அஷ்ஷெய்க் எம்.எஸ்.எம். மஸாஹிம் (அதிபர்) தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் அலகிலிருந்து கிழக்கு ஆளுநர் வரை

• ஜுனைட் நளீமி







'எமது உரிமையைப் பறிக்காதே' 'கோயிலை உடைத்தவனுக்கு ஆளுநர் பதவியா' என்ற கோஷங்களுடன் ஏற்பாடு செய்யப்பட்டு இலவச ஊடக அனுசரணை வழங்கப்பட்ட கிழக்கிற்கான பூரண ஹர்த்தால் கடையடைப்பு பூரண மக்கள் ஆதரவின்றி முடிந்த நிலையில், கிழக்கில் அண்மைக் காலமாக வேகம் பெற்றுவரும் இனத்துவ முறுகல் நிலை குறித்து சிறுபான்மை இனங்கள் சிந்திக்க வேண்டிய காலப் பகுதிக்குள் தள்ளப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் பெரும்பான்மை அரசுகள் திட்டமிட்டு முஸ்லிம் தமிழ் உறவுகளை சீர்குலைத்து ஒன்றித்து போராடிய சமூகத்தின் மீதே தமிழ்த் தரப்பு தமது துப்பாக்கிகளை நீட்டி நிற்கவும், முஸ்லிம் சமூகம் பெரும்பான்மையுடன் விரும்பியோ விரும்பாமலோ ஒன்றித்துப் போக வேண்டிய சூழலை ஏற்படுத்தி இருந்தன. தமிழினத்தின் ஆயுதப் போராட்டம் முடிவுறும் வரை பகடைக் காயாக்கப்பட்ட முஸ் லிம்கள் மீது யுத்தத்திற்குப் பின்னரான இனச்சுத்திகரிப்பு அடக்குமுறை அவ்வப்போது வலிமைபெற்றுச் செல்வதனை அவதானிக்க முடியும்.

கடந்த காலங்களில் இரு பெரும்பான்மைக் கட்சிகளும் தமது வாக்கு வங்கியினையும் ஆட்சிக் கதிரையினையும் தமிழ் சகோதர இனத்தின் மீதான அச்சநிலையினையும் போராட்டக் குழுக்களின் தாக்குதல் விளைவுகளையும் மூலதனமாக வைத்து தெற்கில் அரசியல் செய்ய முற்பட்டனர். யுத்தத்திற்குப் பின்னரான முள்ளிவாய்க்கால் துன்பியல் நிகழ்வின் பின் தமக்கான தேர்தல் பிரச்சாரங்களுக்கான பேசுபொருளாக முஸ்லிம்கள் மீதான இனவெறியினையும் போலியான பிரச்சாரங்களையும் முன்னெடுத்துச் செல்கின்றனர்.

இத்தகைய உள்ளக ஆட்சி அதிகாரப் போட்டியினை சாதகமாகப் பயன்படுத்தி பிராந்திய வல்லாதிக்க சக்திகள் தமது காலூன்றலுக்குத் தேவையான மறைமுக நிகழ்ச்சித் திட்டங்களையும் அரங்கேற்றி வருகின்றன.

### சிங்களத் தேசியவாத எண்ணக்கருவும் சிறுபான்மையும்

யுத்தத்திற்குப் பின்னரான இலங்கையில் தமிழ் சமூகம் முற்றிலும் தோல்வி மனப்பான்மையில் சரணாகதி மனோநிலையில் வாழ்ந்து வருகிறது. தமிழீழ தாயகப் பகுதிகளில் பெரும்பான்மை சமூகங்களின் திட்டமிட்ட செயற்கையான சனத்தொகைப் பரம்பல் அதிகரிப்பு, தொடரும் அதியுயர்ப் பாதுகாப்பு வலய காணிப் பிரச்சினை, முப்படையினருக்குமான இராணுவ முகாம்களின் பேரில் மேற்கொள்ளப்பட்ட காணி அபகரிப்புக்கள், புதிதாக முளைவிட்ட பௌத்த வழிபாட்டுத் தலங்கள் என்பன தமிழ் மக்களின் மனதில் நீறுபூத்த நெருப்பாக எரிந்து கொண்டிருந்தாலும் புலிகளுக்குப் பின்னரான தாயகப் பகுதிகளில் இவற்றினை எதிர்த்துக் குரல் கொடுக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாத்திரமே காணப்பட்டது.

சர்வதேச அரங்கில் புலிகளுக்குப் பின்னரான தமிழர்கள் மீதான அனுதாப அலைகளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஜனநாயக அரசியல் நீரோட்டமும் இலங்கை அரசு மீது தீர்வு முயற்சிக்கான அழுத்தங்களைப் பிரயோகித்ததுடன் பேரினவாத சிந்தனை கொண்ட அரசுகளுக்கு தலையிடியாகவும் அமைந்தது. எனவே இவற்றினை வெற்றிகொள்ள இரண்டு வழிமுறைகள் பிரயோகிக்கப்பட்டன.

01. ஆயுத ரீதியாக தமிழர் போராட்டத்தினை பலவீனப்படுத்தியது போன்று அரசியல் ரீதியாகவும் பலவீனப்படுத்தல்.

02. சர்தேசப் பார்வையில் தொடர்ந்தும் இலங்கையை அமைதியற்ற ஒரு நாடாகக் காண்பித்தல்.

முதலாவது வழிமுறையைப் பொறுத்தவரை மிகுந்த சவால்களுக்கப்பால் நிறைவேற்ற நிகழ்ச்சி நிரல்கள் நகர்த்தப்பட்டன. இந்திய உதவியோடு கருணா அம்மான் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி உருவாக்கப்பட்டது. கிழக்கில் அக்கட்சி பலம் பெறும் என அஞ்சி கருணா பிள்ளையானுக்கிடையிலான பிளவுகள் ஏற்படுத்தப்பட்டு கிழக்கு மக்களின் பலம் குறைக்கப்பட்டது. இதன் விளைவாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் கிழக்கு அரசியலில் வீழ்ச்சி காணப்பட்டது.

மறுபுறம் பெரும்பான்மைக் கட்சிகள் தமது உறங்குகளன்களான (சிலிப்பிங் செல்ஸ்) தமது ஆதரவாளர்களை இயங்கு நிலைக்குத் தயார்படுத்தலை மேற்கொண்டன. வடக்கில் ஈபிடிபி, ஆனந்த சங்கரி போன்றவர்களுக்கு பெரும்பான்மை அரசுகள் வழங்கிய அந்தஸ்தும் சலுகைகளும் அபிவிருத்தி அரசியல் குறித்து தமிழ் மக்களின் எண்ணங்களைத் திசை திருப்பியது. உரிமை, தீர்வு என்ற கோஷங்களுக்கப்பால் நினைவேந்தல் நிகழ்வுகளை யாவது செய்யமுடியவில்லை என்ற ஆதங்கம், திட்டமிட்ட குடியேற்ற நிகழ்வுகள் மீதான எரிச்சல் என்பன தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் கையாலாகாத் தனமாக பிரஸ்தாபிக்கப்பட்டது.

மாற்றீடு அரசியல் என்ற கோஷம் வலுப்பெற்று மீண்டும் இந்திய டயஸ் போராவின் கண்காணிப்பில் விக்கி தலைமையிலான அரசியல் கட்சியாகப் பரிணாமம் பெறுகின்றது. மாமனிதர் அஷ்ரபுக்குப் பின்னரான முஸ்லிம் கட்சிகள் கட்சியைப் பாதுகாப்பதா உரிமைக்காகக் குரல் கொடுப்பதா என்ற தேர்வு நிலைப் போராட்டத்தில் சிக்கிச் சீரழிந்தது போல், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் புதிய பிரச்சினைக்கு முகம்கொடுக்க வேண்டி ஏற்பட்டது.

நிரல்களை மேற்கொண்டன.

அதில் வெற்றியும் கண்டு முஸ்லிம் கட்சிகள் தமது அடையாளம் மறந்து பேரினவாத கட்சிகளின் தரகர்களாக அவ்வக்கட்சிகளின் பிரதிநிதிகளாகவே பாராளுமன்றம் நுழைய வேண்டி ஏற்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட வகையில் சிறுபான்மையினை பலவீனப்படுத்தியது போன்று சர்வதேசத்தின் பார்வையினை உள்ளக அவசர கால நிலையில் வைத்துக்கொள்வதான நாடகத்தை அரங்கேற்ற வேண்டிய தேவை காணப்பட்டது. கிரீஸ் மனிதன் தொடக்கம் திகன கலவரம் வரை ஆட்சி மாற்றத்திற்கான துரும்பாக பயன்படுத்தியது போன்று சர்வதேசத்தின் பார்வையை வேறு ஒரு பக்கம் திருப்பிவிடுவதற்கான திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலாக அமைந்துள்ளது.

அதேபோன்று யுத்தத்திற்குப் பின்னரான தாயகப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள், ஹர்த்தால்கள், இனவாத செயற்பாடுகள் அனைத்துக்கும் ஏற்பாட்டாளர்களாக இயங்குநர்களாக தமிழ் மக்களின் போராட்டங்களுக்குச் சவாலாக அமைந்தவர்கள், போராட்டங்களை காட்டிக் கொடுத்தவர்கள், தமிழ் மக்களால் துரோகிகள் என முத்திரை குத்தப்பட்டவர்கள் முன்னாள் போராளிகள் என்ற பெயரில் மீட்பர்களாக வலம் வருவது தாயக பூமியில் சிறுபான்மை இனங்கள் விட்டுக் கொடுப்புக்களுக்கு மத்தியில் தீர்வினைப் பெரும்பான்மை சமூகத்திடம் இருந்து பெற்றுக்கொள்வதற்கு தொடர்ந்தும் தடையாக அமையும்.

### அண்மைக்கால முஸ்லிம் தமிழ் இனமுறுகல்

எனவேதான் தமது வல்லாதிக்கத்தினை நிறுவ நல்லாட்சி என்ற அரசியல் மறைகரமாகச் செயற்பட வேண்டி ஏற்பட்டது. இதன் விளைவு தமிழ் மக்கள் மத்தியில் கூட்டமைப்பின் வாக்கு வங்கியில் சரிவினை ஏற்படுத்தி, இருப்பதனை நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுகள் காட்டி நிற்கின்றன.

இந்தவகையில் தமிழர் போராட்டத்தை மழுங்கடிப்புச் செய்து பெரும்பான்மை அதில் வெற்றி கண்டுள்ளது. குறைந்தது இணைந்த வடகிழக்கில் சமஷ்டி ஆட்சி முறைமை என்ற கோஷம் கிழக்கு கிழக்காவே இருக்கட்டும் என்ற கிழக்கு பெரும்பான்மை தமிழர் கோஷமாக மேலெழ ஆரம்பித்துள்ளது.

வடக்கு வெள்ளை வேஷ்டிகளுக்கு நாம் அடிமை இல்லை என்ற கோஷம் கொண்டே பிள்ளையான் தலைமையிலான கட்சி மாகாணத்தில் முதலமைச்சர் கதிரையினைப் பெற்றுக்கொண்டது. இன்று வரை கருணா அம்மான் தலைமையிலான ஸ்ரீ லங்கா தமிழ் மக்கள் சுதந்திரக் கட்சி கூட பிரிந்த கிழக்கில் தமிழர் அதிகாரம் என்ற கோஷத்தில் பயணிப்பதனைக் காண முடியும்.

தமிழீழ தாயக பூமியில் தமிழ் சகோதர இனத்துடன் பேச்சுவார்த்தை மூலம் ஒன்றித்து வாழ வேண்டும் என்ற அரசியல் சிந்தனையே முஸ்லிம் அரசியலில் தந்தை செல்வா காலப்பகுதி தொடக்கம் காணப்பட்டு வருகின்றது. மர்ஹூம் அஷ்ரப் அவர்கள் இணைந்த வடகிழக்கில் முஸ்லிம்களுக்கான அதிகார அலகு குறித்தே




### விடுதலைப் புலிகளின் மீளுருவாக்கம்

நாட்டினை அவசர கால சூழ்நிலையில் வைத்துக் கொள்ளவும் முன்னாள் போராளிகளை அரசியல் கைதிகளாகத் தொடர்ந்தும் தடுத்து வைத்துக்கொள்ளவும் இராணுவ நோக்கில் அவசியம் என்பது போல் தேசிய அரசியலில் சர்வதேச அழுத்தங்களை தவிர்ந்து கொள்வதற்கும் புலிகளின் மீளுருவாக்கம் இன்றியமையாத ஒன்றாக அமைகின்றது. தென்னிலங்கை அரசியலில் புலிகள் மீளுருவாக்கச் செய்தியானது பாரிய அதிர்வலைகளை ஏற்படுத்தும் ஒன்றாக அமைந்துள்ளது. கடந்தவருடம் முல்லைத் தீவில் இராணுவ வாகனம் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோ

தேசிய அரசியலில் சிறுபான்மை இனங்களின் போராட்ட ஒழுங்கு தோல்வி கண்டு வருகின்ற நிலையில் வட கிழக்கிற்கு வெளியே முஸ்லிம்களுக்கெதிரான இனவாதம் சிறுபான்மை இனங்களின் பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை குறைப்பதற்கு வழிசெய்வதோடு திட்டமிட்ட அடிப்படையில் தேர்தல் முறை மாற்றமும் சிறுபான்மை பிரதிநிதித்துவத்தை குறைப்பதாக அமையும். இந்நிலையானது பாராளுமன்ற சட்டவாக்கத்தில் இலகுவில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையினை பேரினவாத அரசு பெற்றுக்கொள்ள வாய்ப்பாக அமையும். மறுமுனையில் சிறுபான்மை சமூகங்கள் இரண்டும் தனக்கு ஒரு கண் போனாலும் எதிரிக்கு இரண்டு







பேசி வந்துள்ளார். அரசு - புலிகள் பேச்சுவார்த்தைகளின் போது புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனோடு மேற்கொள்ளப்பட்ட முஸ்லிம் தரப்பின் ஒப்பந்த முயற்சி மத்திய பெரும்பான்மை அரசின் அச்சத்திற்கு ஆட்பட்டது. எதிர்காலத்தில் மீண்டும் இரு சமூகங்களும் பழையன மறந்து கைகோர்ப்பதன் விளைவு தனிநாட்டு கோரிக்கைக்கு வழிசமைக்கும் என்று எண்ணியதன் விளைவாக முஸ்லிம் கட்சிகளை பிரித்து பலவீனப்படுத்தி பேரினவாத கட்சிகளில் கரைந்துபோக [illegible]

கம், மாவீரர் தினமன்று மட்டக்களப்பு வவுணதீவு பிரதேசத்தில் பொலிஸார் மீது மேற்கொள்ளப்பட்ட மிலேச்சத் தனமான தாக்குதல் என்பன சோர்விழந்த தமிழ் சமூகத்திற்குப் புத்துயிர் அளிப்பதாக எண்ணத் தோன்றினாலும் இலங்கை இனப் பிரச்சினை தீர்வினைப் பின்தள்ளுவதற்கான மறைகரம் என்பதனை தமிழ் மக்கள் எண்ணத் தவறியுள்ளனர் என மூத்த தமிழ் அரசியல் [illegible] துத் தெரிவிக்கின்றார்.

கண்கள் போக வேண்டும் என்ற மன நிலையில் செயற்படுவதனையும் அவதானிக்க முடிகின்றது.

தேசிய அரசியல் நோக்கில் பெரும்பான்மை கட்சிகள் தமது அரசுகளை அமைத்துக் கொள்வதற்காக முஸ்லிம்கள் மீதான தாக்குதல்களையும் பௌத்த பேரினவாத அலைகளையும் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள முற்படுவது போன்று வடகிழக்கில் பன்னாட்டுத் தரகர்களாகவும் பேரினவாத கட்சிகளின் முகவர்களாகவும் செயற்படுபவர்கள் தமது குறுகிய இலாபங்களுக்காக சிறுபான்மை மக்களின் உரிமைகளை நசுக்கிவிட முனைவதனை அவதானிக்க முடிகின்றது.

மரவன்புலவு சச்சிதானந்தன் எவ்வாறு இந்திய உளவாளியாக செயற்பட்டாரோ இன்று ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் தீவிர செயற்பாட்டாளராகத் தன்னை அடையாளப்படுத்த முனைகின்றார். முள்ளிவாய்க்கால் வரை இடம்பெற்ற மனிதப் பேரவலங்களின்போது ஈழத் தமிழர்களைக் கண்டு கொள்ளாத ஆர்.எஸ்.எஸ். வட மாகாண முதல் அமைச்சரின் புதிய அரசியல் கட்சியோடு களமிறங்கியிருப்பது சிறுபான்மைக்கான வேட்டாகவே கருத வேண்டும் என பிரபல இந்திய அரசியல் ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இதேபோன்று கிழக்கில் துளிர்விட்டுள்ள முஸ்லிம்களுக்கெதிரான இனவாத செயற்பாடுகளுக்குப் பின்னால் தமிழ் மக்களால் புறக்கணிக்கப்பட்ட அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்களே செயற்படுகின்றார்கள் என்பது தெளிவாக மறைக்கப்பட்ட உண்மையாகும். கிழக்கில் அண்மையில் முஸ்லிம்கள் மீதான தாக்குதலுக்கும், ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு அப்பாவி தமிழ் மக்களை நிர்ப்பந்தித்தவர்களும் இவர்களே என்பது ஊடக செய்திகள் மூலம் தெரியவந்துள்ளது. கருணா அம்மானின் நெருங்கிய செயற்பாட்டாளரான அரவிந்தன் என்பவர் சமூக வலைத்தளத்தில் இனமுறுகலைத் தூண்டும் வகையில் கருத்தினைப் பதிவிட்டிருந்தார்.

பின்னர் இவர் பொதுபல சேனாவின் ஞானசார தேரர் மற்றும் கருணா அம்மானுடன் நெருங்கிய புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் வெளியிடப்பட்டிருந்தது. செங்கலடியில் இருக்கும் நீர்ப்பாசன திணைக்களத்தினை அமைச்சர் அமீர் அலி ஓட்டமாவடிக்குக் கொண்டு செல்ல முனைகிறார் என்ற உண்மைக்குப் புறம்பான ஆர்ப்பாட்டத்தை அம்மானே தலைமை தாங்கி நடாத்தியதும் இங்கு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

### முஸ்லிம் மாகாணத்திலிருந்து முஸ்லிம் முதல் அமைச்சர் வரை

சிறுபான்மைக் கட்சிகளின் ஜீவ மரணப் போராட்டங்கள் தொடரும் நிலையில் ஆட்சி அதிகாரத்திற்கான அடுத்த கட்ட நிலைக்கு பெரும்பான்மைக் கட்சிகள் தயாராகிக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக எதிர்வரும் ஓரிரு மாதங்களில் தேர்தல் ஒன்று எதிர்பார்க்கப்படுகின்றது. தேர்தல் ஒன்றுக்குத் தயாராகும்படி ஜனாதிபதி அவர்கள் தமது கட்சி முக்கியஸ்தர்கள் சந்திப்பில் அண்மையில் கருத்து தெரிவித்திருந்தார். ஆனால் ஐக்கிய தேசியக் கட்சி அனைத்து அமைச்சு அதிகாரங்களையும் வைத்துள்ள நிலையில் தேர்தல் ஒன்றை எதிர்கொள்வது ஜனாதிபதி தலைமையிலான கட்சிக்குச் சவாலாகவே அமையும்.

எனவே மாகாணங்களின் அதிகாரங்களை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்கு ஆளுநர் என்ற துருப்புச் சீட்டு பயன்படுத்தப்பட்டுள்ளது. அண்மைய முஸ்லிம்கள் மீதான திட்டமிட்ட கலவரங்களினால் ஜனாதிபதி மீதான நல்லபிப்பிராயங்களும் முஸ்லிம் சமூகத்தில் நலிவடைந்துள்ளது. எனவே இவற்றினை நிமிர்த்திக் கொள்வதற்காக கண்டியில் முஸ்லிம் ஆளுநரும் முஸ்லிம்கள் செறிவாக வாழும் கிழக்கில் முஸ்லிம் ஆளுநரும் தமிழர்கள் செறிவாக வாழும் வடக்கில் தமிழ் ஒருவர் ஆளுநராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தற்போதைய இலங்கை அரசியல் சூழ்நிலையில் இந்தியமனங்கள் கிழக்கில் முஸ்லிம் கட்சிகளின் வாக்கு வங்கிகளில் பாரிய மாற்றம் எதனையும் ஏற்படுத்தாவிடினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீது எதிரலைகளைத் தோற்றுவிப்பதன் மூலம் கருணா பிள்ளையான் அணியினர் மீதான சார்பு நிலையினை தோற்றுவிக்கும். இதனால் இவர்கள் சார்ந்த ஜனாதிபதி கூட்டணிக்கே சாதகமாக அமையும்.

வட கிழக்கிற்கு வெளியே குறிப்பாக மத்திய மாகாணத்தில் முஸ்லிம் ஆளுநர் நியமனம் சிறுபான்மைக்கு எதிரான கோஷங்களை வலுப்பெறச் செய்ய வாய்ப்புள்ளது. எதிர்வரும் நாட்களில் மத்திய மாகாண ஆளுநருக்கெதிராக நம்பிக்கை இல்லாப் பிரேரணை கொண்டுவரப்படவுள்ளதாக வெளியாகி வரும் செய்திகள் இதனையே புலப்படுத்துகின்றது.

கடந்த காலத்தில் கண்டி நகர அபிவிருத்தி முஸ்லிம் அமைச்சருக்கு வழங்கப்பட்டதன் பின்னர் சகோதர பெரும்பான்மை இன ஊடகங்கள் மேற்கொண்ட முஸ்லிம் வெறுப்புப் பிரச்சாரங்கள் இங்கு கவனத்திற் கொள்ளத்தக்கது.

கிழக்கின் தற்போதைய ஆளுநர் வட கிழக்கு இணைப்பிற்கு எதிரானவர் என்றும் தமிழ் சகோதர இனத்திற்கும்

(பக்.15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாடசாலை அதிபரின் முகாமைத்துவ வகிபாகம்

அதிபர்களின் வகிபாகம் மூன்று தளங்களில் அமைய வேண்டும் என முன்பு குறிப்பிட்டோம். முகாமையாளர், தலைவர் கல்வியியலாளர் என்ற வகையில் ஓர் அதிபரின் வகிபாகம் குறித்து விரிவாக ஆராய்வ தற்கு முன்பாக பாடசாலை முகாமை சார்ந்த கல்வியியலாளரின் கருத்துக்களை தொகுத்தளித்தோம். இங்கு பாடசா லையை முகாமை செய்வதில் அதிபர் எவ்வகையான நடிபங்கினை ஏற்க வேண்டும் என்பது குறித்து சற்று விலாவாரியாக நோக்கலாம்.

நிறுவனத்தின் இனங்காணப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு அந்நிறுவனத்திற்கு கிடைக்கத் தக்க வளங்களை உச்சகட்டம் பயன்படுத்தி திட்டமிட்டு ஒழுங்கமைத்து கட்டுப்படுத்தும் நடவடிக்கையே முகாமை என ஜேம்ஸ் எட்டோவர் குறிப்பிடுவது போல், பாடசாலைக்குக் கிடைக்கும் வளங்களை சிறப்பாக முகாமை செய்வதே அதிபரின் முதற் தரப் பணியாகும்.

பாடசாலை வளங்களில் பௌதிக வளங்கள், மனித வளம், நிதி வளம், தரவு வளம், நேர வளம் என ஐந்து வகை வளங்கள் உள்ளன. பாடசாலை அமைந்துள்ள நிலம், அதன் கட்டடங்கள், சுற்றுச் சூழல், பாடசாலைக்குக் கிடைக்கும் கற்றல் கற்பித்தல் சாதனங்கள், ஆய்வுகூட வசதிகள், விளையாட்டு மைதானம் இவை அனைத்தும் பௌதிக வளங்களில் உள்ளடங்குகின்றன.

கிடைக்கப்பெற்ற வளங்களை முறையாகப் பராமரிப்பதும் பாதுகாப்பதும் அவற்றிலிருந்து உச்ச பயனைப் பெறுவதும் அதிபரின் முகாமைத் திறன்களோடு தொடர்புபட்டுள்ளது. கதிரை, மேசைகள் சேதமடையும்போது, அல்லது கணினிகள் பழுதடையும்போது உரிய நேரத்தில் அவற்றைப் பழுது பார்ப்பதும் முறையாகப் பயன்படுத்துவதும் அதிபரின் முகாமைத்துவத் திறனோடு சம்பந்தப்பட்டுள்ளது.

இதேவேளை, அதிகரித்து வரும் மாணவர் தொகைக்கு ஏற்ப பாடசாலையின் பெதிக வளங்களைப் பெருக்குவது தொடர்பான ஒரு தூர தரிசனமும் அதிபருக்கு இருக்க வேண்டும். பாடசாலையின் இயலளவைக் கட்டியெழுப்பல் (Capacity Building) கவனம் குவிக்க வேண்டிய ஒரு பக்கமாகும். பாடசாலையின் குறுங்கால, நீண்டகாலத் திட்டமிடலில் இவ்விடயம் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். கல்வி அடைவு மட்டத்திற்குச் சமாந்திரமாகவே இயலளவைக் கட்டியெழுப்புதல் இடம்பெற வேண்டும். உயர் அடைவு மட்டம் இல்லாத, சராசரி அடைவு மட்டத்திற்குக் குறைவான பாடசாலைகளில் அதிபர்கள் அடைவுமட்டத்தை முற்றாகக் கைவிட்டு வெறும் பௌதிக வளங்களைக் கட்டியெழுப்புவதிலும் எந்தப் பயனும் ஏற்படப் போதில்லை.

அதிபரின் முகாமைத்துவ நடவடிக்கைகளில் பாடசாலையின் மனித வளங்களை சிறப்பாக முகாமை செய்வதும் அடங்குகின்றது. இது பௌதிக வளங்களை முகாமை செய்வதை விட மிகக் கடினமான ஒரு பணியாகும். பாடசாலை மனித வளம் எனும்போது கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபடும் மாணவர்கள், கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபடும் ஆசிரியர்கள், பெற்றோர், பாடசாலை அபிவிருத்தி சங்கத்தில் இணைந்துள்ளவர்கள், பழைய மாணவர்கள் ஆகிய ஐந்து தரப்பும் அதில் உள்ளடங்கும்.

நிறுவனங்களின் வினைத்திறனுள்ள தொழிற்பாட்டில் மனித வள முகாமை இன்றியமையாத ஒரு கூறாகும். மனித நடத்தைகள் மிகவும் சிக்கலானது என்பதனால் மனித வளங்களைப் பயிற்றுவித்து அவற்றின் திறன்களை முழுயாகப் பயன்படுத்துதல் மிகச் சிக்கலான ஒரு நடவடிக்கையாகும். இதற்காகவே இன்று மனித வள முகாமை தொடர்பான கோட்பாடுகளும் கற்கைநெறிகளும் அறிமுகப்படுத்தப்படுகின்றன.

பாடசாலை உள்ளக மட்டத்தில் மனித வள முகாமையில் அதிபரின் முழுக் கவனமும் ஆசிரியர்களை முகாமை செய்வதில் செலுத்தப்பட வேண்டும். ஆசிரியர்களின் மனப்பாங்கு, திறன்களை அறிந்து அதற்கேற்ப பொருத்தமானவர்களிடம் பொருத்தமான பொறுப்புக்களைப் பகிர்ந்தளிப்பது அதிபரின் கடமையாகும். அனைத்து ஆசிரியர்களையும் சமத்துவமாக நடத்தல், சுவாரஸ்யமான முறையில் ஆசிரியருடனான தொடர்பாடல்களைப் பேணல், பாகுபாடுகளை முற்றாகத் தவிர்த்தல், ஆசிரியர்-அதிபர் முரண்பாடுகள் வளர்வதை தொடக்கத்திலேயே கட்டுப்படுத்தல், ஆசிரியர்களை அவ்வப்போது ஊக்குவித்தல் என்பன ஆசிரியர் தொடர்பான அதிபரின் நடவடிக்கைகளில் முன்னுரிமை பெற வேண்டும்.

சில பாடசாலைகளில் ஆசிரியர் குழாத்திற்கும் அதிபருக்கும் இடையில் நேரடியானதும் மறைமுகமானதுமான உள்ளக முரண்பாடுகள் நீடிக்கின்றன. ஆசிரியர் குழாத்திலுள்ள சிலர் அதிபருக்கு ஆதரவாகவும் மற்றும் சிலர் அதிபருக்கு எதிரானவர்களாகவும் இயங்குகின்றனர். அதிபரின் முகாமைத்துவத் திறனிலுள்ள பலயீனங்களே இதற்கான பொதுக் காரணமாகும்.

இம்முரண்பாடுகள் பாடசாலைக் கலைத் திட்டத்தைப் பூரணப்படுத்துவதிலும் இணைப்பாடவிதான செயற்பாடுகளை முறையாக முன்னெடுப்பதிலும் பாரிய சவால்களை உருவாக்குகின்றன. இறுதியில் அதிபர்- ஆசிரியர் முரண்பாடுகளுக்கு விலை கொடுப்பவர்களாக மாற்றப்படுபவர்கள் மாணவர்களே.

பாடசாலை அதிபர்கள், பழைய மாணவர்கள் மற்றும் அபிவிருத்தி சங்கத்தோடும் நேர் நிலையான உறவுகளைப் பேண வேண்டியுள்ளது. இவ்விரு தரப்பினரில் யாரேனும் ஒருவருடன் மோதும் செயற்பாடுளை அதிபர் முன்னெடுக்கும்போது அவர் பாடசாலையை விட்டு தூக்கி வீசப்படும் சந்தர்ப்பங்களுக்கு பல உதாரணங்கள் உள்ளன. எனவே மனித வளத்தை மிகக் கவனமாகவும் நுணுக்கமாகவும் மதிநுட்பத்துடனும் கையாள வேண்டியது நிறுவனத்தின் தலைவர் என்ற வகையில் அதிபரின் முகாமைத்துவ ஆற்றலோடு தொடர்புறுகின்றது.




# மனோநிலைக் கோளாறுகள்

உள நோய்கள் அல்லது கோளாறுகளின் வகைப்பாட்டிலுள்ள மனோநிலைக் கோளாறில் மூன்று பிரதான பகுதிகள் உள்ளன. அதில் தீவிர மனச்சோர்வு அதன் அடையாளங்கள், காரணங்கள், சிகிச்சை முறைகள் குறித்து கடந்த அத்தியாயங்களில் விரிவாக நோக்கினோம். மனோ நிலைக் கோளாறுகளின் இன்னொரு பிரிவான இரு துருவக் கோளாறு (Bipolar Disorder) குறித்து இப்பத்தியில் நோக்குவோம்.

தொடக்க காலத்தில் இதனை பித்த நிலை மனச்சோர்வு (Manic Depression) என்றே உளவியலாளர்கள் அழைத்து வந்தனர். இதுவும் ஒருவகை உளச்சோர்வு தான். எனினும், தீவிர உளச்சோர்விலிருந்து இது சற்று வேறுபட்டது. உலகிலுள்ள மக்களில் 100 பேரில் 4 பேருக்கு இரு துருவ உளக்கோளாறு ஏற்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது குறிப்பிட்ட காலம் ஒருவருக்கு ஏற்பட்டு சிறிது காலத்தின் பின்னர் மறைந்து மீளவும் அதற்குரிய அடையாளங்கள் அவரில் தோன்ற முடியும். இரு துருவக் கோளாறின் தீவிர தன்மையைப் பொறுத்து அதன் தாக்கம் அமைகின்றது. பெரும்பாலானவர்களில் இதன் நோய்க் குறிகள் வெளியே தெளிவாகத் தெரிவதில்லை.



இக்கோளாறுக்கு உட்பட்டவர்களின் மனோநிலை அதீத உளச்சோர்வு உடையோரின் மிகத் தாழ்ந்த மனோநிலை மட்டத்திலிருந்து திடீரென வீறுகொண்டு உயர்மட்ட மனோநிலைக்கு மாறுகின்றது. இவ்வாறு மாறுவது அடிக்கடி நிகழலாம். மனோ நிலை உயர் மட்டத்தில் இருக்கும் போது அத்தகையோரில் திடீர் கிளர்ச்சி ஏற்படும். தாம் விரும்பியபடி புதுப் புதுச் செயல்களில் இத்தகையோர் ஈடுபடுவர். இடைவேளை யின்றி வேகமாகவும் தொடர்ச்சியாகவும் பேசிக் கொண்டிருப்பர்.

தன்னைக் குறித்தும் தனது சூழ்நிலை குறித்தும் யதார்த்தத்திற்கு ஒவ்வாத முறையில் மகிழ்ச்சியடைதல், கோபப்படுதல் போன்ற பண்புகள் இரு துருவக் கோளாறினால் பாதிக்கப்பட்டோரிடம் காணப்படலாம்.

அசாதாரண மகிழ்ச்சி அல்லது அசாதாரணக் கோபம் அல்லது உடலில் அசாதாரண சக்தி போன்றன அவ்வப்போது இவர்களிடம் வெளிப்படும். இக்கோளாறின் கடும் தாக்கத்திற்கு உட்படுவோரில் அநேகர் தூக்கமின்றி அவதிப்படுவர். மனச்சோர்வு ஏற்படும் காலங்களில் இரு துருவக் கோளாறின் பாதிப்பு அதிகமாக இருக்கும். அத்தகைய சந்தர்ப்பத்தில் இவர்கள் சிறு குழந்தைகள் போல் கண்ணீர் விட்டு அழுவர். தமது வாழ்க்கை குறித்து ஒரு எதிர்மறையான மனப்பாங்கு இவர்களிடம் இருக்கும். பிறருடனான கண் அசைவுத் தொடர்பு பலயீனமாக இருக்கும். தற்கொலை உணர்வு இருபது வயதானவர்களில் ஆறு மடங்கு அதிகமாக இருக்கும். 30-40 வயதானவர்களில் தம்மை சுயமாகக் காயப்படுத்திக் கொள்ளும் அல்லது வருத்திக் கொள்ளும் பண்புகள் காணப்படும்.

இரு துருவக் கோளாறுக்கு உட்பட்டவர்களிடம் பதகளிப்பு (Anxiety Disorder) போதைவஸ்து பாவனைக் கோளாறு என்பனவும் இணைந்திருக்கும். உளவியலாளர்கள் மத்தியில் இரு துருவக் கோளாறைக் குறிப்பதற்கு பல்வேறு விதமான சொற்கள் கையாளப்படுகின்றன. இது இரு துருவ நோய் (Bipolar illness) , இரு துருவ பாதிப்புக் கோளாறு (Bipolar Effective Disorder) , பித்து நிலை மனச்சோர்வு (Manic Disorder), மனச்சோர்வு சார் உளவியாதி (Depressive Psychosis) என பல்வேறு பெயர்களால் இது அழைக்கப்படுகின்றது.

மனச்சோர்வு (Depression) , பித்து நிலை (Mania) இரண்டின் தாக்கத்திற்கும் ஒருவர் உட்படுவதே இரு துருவக் கோளாறு எனப்படுகின்றது. இவர்களிடம் குறிப்பிட்ட காலங்களில் மனச்சோர்வும் (Period of Depression) சிலபோது வீறு கொண்டெழும் மனோநிலையும் (Elevated Mood) ஏற்படுகின்றன. ஒரு நபர் 25 வயதுக்குப் பின்னரே இக்கோளாறுக்கு உட்படுவதாக உளவியலாளர்கள் கருதுகின்றனர்.

இரு துருவக் கோளாறுக்கான காரணங்கள் இதுவரை தெட்டத் தெளிவாக இனங் காணப்படவில்லை. சூழல் காரணிகளும் பரம்பரைக் காரணிகளும் இதில் பங்களிப்பதாக இதுவரையான ஆய்வுகள் எடுத்துக் காட்டியுள்ளன.

சூழல் காரணிகளில் குழந்தைப் பருவ அனுபவங்கள் மற்றும் நீண்டகால மன அழுத்தம் என்பன உள்ளடங்குகின்றன. பரம்பரைக் காரணிகள் இரு துருவக் கோளாறுகளில் 85 வீதம் செல்வாக்குள்ளவை என்று சமீபத்திய ஆய்வொன்று எடுத்துக் காட்டுகின்றது.

# அன்னை ஆயிஷா (றழி)யின் சிறப்புப் பெயர்

அறேபியர் சிறப்புப் பெயர் சூட்டுவதனை கண்ணியத்திற்கும் சிறப்பிற்கும் பெருமைக்குமுரிய அடையாளமாகக் கருதுகின்றனர். ஆயிஷா (றழி) அவர்களுக்கு பிள்ளைப் பாக்கியம் கிடைக்கவில்லை. ஆனாலும் அதற்காக அவர்களுக்கு கவலையோ சோகமோ ஏற்படவில்லை. இதற்காக அவர்கள் தனது வாழ்நாள் முழுவதும் நோவினைப்பட்டுக் கொண்டிருக்கவில்லை.

அறேபியரில் கண்ணியமிக்கோர் தமது பிள்ளைகளின் பெயர்களை தமக்குரிய சிறப்புப் பெயர்களாக வைத்துக் கொள்வார்கள். அவர்களின் உண்மையான பெயர்களைக் கொண்டு அவர்களை ஒருவரும் அழைக்க மாட்டார்கள். மாறாக அவர்களின் சிறப்புப் பெயர்களை விளித்தே அழைப்பார்கள்.

ஒரு தடவை ஆயிஷா (றழி) ரஸூல் (ஸல்) அவர்களைப் பார்த்து, 'தனது அனைத்து தோழியருக்கும் சிறப்புப் பெயர்கள் உள்ளனவே!' எனக் கூற, நபி (ஸல்) அவர்கள், 'அப்படியாயின் உமது மகனான அப்துல்லாஹ்வின் (அதாவது ஆயிஷா (றழி)யின் சகோதரியின் மகனின் பெயர் அப்துல்லாஹ்) பெயரை சிறப்புப் பெயராக சூட்டிக் கொள்ளுங்களே!' எனப் பதிலளித்தார்கள். அன்று முதல் ஆயிஷா (றழி)யின் சிறப்புப் பெயர் 'உம்மு அப்தில்லாஹ்' என அமைந்தது.

ஆனால், இந்த சிறப்புப் பெயர் ஒரு நாட்டுப்புற அறபியின் மகன் விடயத்தில் சிக்கலை ஏற்படுத்தியது. ஒரு நாட்டுப்புற அறபியின் மனைவிக்கு ஒரு ஆண் பிள்ளை கிடைத்தது. நபி (ஸல்) அவர்கள் அக்குழந்தைக்கு அப்துல்லாஹ் என பெயர் சூட்டினார்கள். இதனால் அந்தத் தாயின் சிறப்புப் பெயர் 'உம்மு அப்தில்லாஹ்' என அமைந்தது.

எனினும், இந்த அறிவிப்பு 'பலவீனமானதாகும். இதன் அறிவிப்பாளர் வரிசை உச்ச பலவீன நிலையிலுள்ளது. 'ஆயிஷா (றழி) பிள்ளை பெற்றெடுக்கவில்லை' எனக் குறிப்பிடுகின்ற அறிவிப்புகளே ஸஹீஹான உறுதியானவையாகும்.

'அப்துல்லாஹ்' என்பதன் மூலம் நாடப்படுவது: ஆயிஷா (றழி)யின் சகோதரியின் மகன் 'அப்துல்லாஹ் இப்னு ஸுபைரைக்' குறிக்கும். இவர்தான் ஹிஜ்ரத்தின் பின் பிறந்த முதல் குழந்தையாகும்.

யூதர்கள் பின்வருமாறு கூறுபவர்களாக இருந்தனர்: நாம் முஸ்லிம்களுக்கு சூனியம் செய்துவிட்டோம். அவர்களுக்கு இனிமேல் ஆண் வாரிசே கிடைக்காது.

ஆனால், அப்துல்லாஹ் இப்னு ஸுபைர் (றழி) பிறந்ததும் ஸஹாபாக்கள் தக்பீர் முழக்கம் எழுப்பினர். அவரை ரஸூல் (ஸல்) அவர்கள் தனது மடியில் வைத்து, பேரீச்சம் பழத்தை மென்று, இனிப்பூட்டினார்கள். அப்துல்லாஹ் (றழி)யின் வயிற்றில் நுழைந்த முதல் எச்சில் ரஸூல் (ஸல்) அவர்களினுடையதாகவே அமைந்தது.

அவர் ஆயிஷா (றழி)யின் பராமரிப்பிலே வளர்ந்தார். ஆயிஷா (றழி) அவரின் மீது அதிக அன்பு வைத்திருந்தார். அவரும் தனது தாயை விட ஆயிஷா (றழி) யின் மீது அன்பு செலுத்துபவராகக் காணப்பட்டார். அது மட்டுமன்றி, ஆயிஷா (றழி) வேறு அநாதைக் குழந்தைகளையும் பராமரித்து, வளர்ப்பவராக இருந்தார்கள்.

அப்துர் ரஹ்மான் இப்னுல் காஸிம் தனது தந்தையிடமிருந்து பின்வருமாறு அறிவிக்கிறார்: ஆயிஷா (றழி) அநாதையான என்னையும் எனது சகோதரனையும் பொறுப்பெடுத்து வளர்ப்பவராக இருந்தார்கள். மட்டுமன்றி, எமது சொத்துக்குரிய ஸகாத்தையும் செலுத்தி வந்தார்கள்.

ஆயிஷா (றழி) அவர்கள் ஒரு அன்ஸாரி யுவதியை வளர்த்து, திருமணம் முடித்துக் கொடுத்த சம்பவம் ஹதீஸ் கிரந்தங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆயிஷா (றழி) இதனைப் பற்றி பின்வருமாறு குறிப்பிடுகிறார்கள்:

எனது பராமரிப்பில் ஒரு அன்ஸாரிய அடிமைப் பெண் இருந் தாள். அவளுக்கு நான் திருமணம் முடித்துக் கொடுத்தேன். அந்தத் திருமண வைபவத்திற்கு ரஸூல் (ஸல்) அவர்களும் வந்தார்கள். நபி (ஸல்) அவர்கள் அன்ஸாரிகளின் விளையாட்டுப் பொருட்களின் சத்தத்தை செவிமடுக்காது, 'ஆயிஷாவே! இப்பிரதேச அன்ஸாரிகள் இவ்வாறான விளையாட்டுகளை எல்லாம் விரும்புகிறார்கள்' எனக் குறிப்பிட்டார்கள்.

முஃமின்களின் தாயான ஆயிஷா (றழி)யின் பாசறையிலிருந்து பயிற்சி பெறுவதற்கான பாக்கியத்தை தன்னிகரற்ற ஒரு கூட்டத் தாருக்கே பெற முடியுமாக இருந்தது. ஆயிஷா (றழி) அக்கூட்டத் தாருக்கு அல்லாஹ்வும் ரஸூலும் கற்றுக் கொடுத்தவற்றை கற்பித்து, வளர்த்தெடுத்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது சிந்தனையும்... (03 ஆம் பக்கத் தொடர்)

பின்னணியையும் அதன் பாதிப்புகளையும் ஒரு அறிக்கையாக தைரியமாக வெளிக் கொணர்ந்தது இன நல்லுறவின் ஒரு ஒளிக்கீற்றாகவே நோக்கப்பட வேண்டும்.

3. கடந்த காலத்தில் தனித்தனியாக செயல்பட்ட சிவில் அமைப்புகள் தற்போது ஒன்றிணைந்த செயற்பாடாக நாட்டின் அரசியல் அமைப்பில் மாற்றம் வேண்டும், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை நீக்கப்பட வேண்டும், நாட்டின் அபிவிருத்திக்கான பொதுவான ஒரு கொள்கை திட்டம் உருவாக்கப்பட வேண்டும், நாட்டை நேசிக்கும் மக்கள் கூட்டம் உருவாக்கப்பட வேண்டும் என்ற வேலைத்திட்டத்துடன் செயலாற்றுவது இன்னுமொரு நம்பிக்கை ஒளிக்கீற்று ஆகும்.

இந்த நிகழ்வுகள் தற்கால அரசியல் தலைமைகளிடம் ஒரு அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. நாம் சரியாகச் செயல்படாவிட்டால் எதிர்காலத்தில் நீதிமன்றத்துக்குப் பதில் சொல்வதோடு, தேர்தல் காலங்களில் மக்களின் கோபத்திற்கு உள்ளாக வேண்டியிருக்கும் என்ற பீதி உருவாகியுள்ளது. இதன் மூலம் எதிர்கால அரசியல் செயற்பாடுகள் ஓரளவு நேர்மையாக இருப்பதற்கான சாத்தியப்பாடுகள் தென்படுகின்றன.

இந்த அரசியல், சமூக மாற்றங்களைப் புரிந்துகொண்டுதான் முஸ்லிம் தனி மனிதர்களும் சரி, சிவில் அமைப்புகளும் சரி, அரசியல் கட்சிகளும் சரி தமது எதிர்காலப் பயணத்தை ஆரம்பிக்க வேண்டும். இந்த வகையில் கடந்த அரசியல் குழப்பநிலைகளின்போது முஸ்லிம் அரசியல் தலைமைகளும் சிவில் அமைப்புகளும் மிகவும் முதிர்ச்சியோடு நிதானமாக நடந்து கொண்டதும் ஒரு நம்பிக்கை ஒளிக்கீற்றுதான்.

எனவே தற்போது முஸ்லிம் சமூகத்தை நோக்கிய இனவாத செயற்பாடுகளை மிகவும் புத்திசாதுரியத்தோடு நாம் எதிர்கொள்ள வேண்டும். அடிப்படையில் நாம் புரிந்து கொள்ள வேண்டிய ஒரு விடயம் பெரும்பான்மை சமூகத்திலும் சரி, தமிழ் சமூகத்திலும் சரி, நீதியையும் நேசிக்கும் அதற்காக உழைக்கும் ஒரு பிரிவினர் இல்லாமல் இல்லை.

எனவே இந்த சக்திகளோடு முஸ்லிம் சமூகத்தின் சிவில் அமைப்புகள் கலந்துரையாடல்களை ஆரம்பிக்க வேண்டும். அரசியல் தலைமைகள் அடுத்த சமூகத்தின் அரசியல் தலைமைகளோடு பேச வேண்டும். இதன் அடிப்படையிலான வேலைத்திட்டங்களை உருவாக்க வேண்டும். முரண்பாடான சமூகத்திற்கு மத்தியில் நேரடி சந்திப்புகள் பெரும்பாலான முரண்பாடுகளை தீர்த்துவிடும்.

மேலும் நாட்டின் முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்டு செயற்படும் பெரும்பான்மை சமூகத்தின் சிவில் அமைப்புகளோடும் அரசியல் கட்சிகளோடும் எமது பங்குபற்றல் அதிகரிக்கப்பட வேண்டும். இது வெறுமனே எமது சமூகத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல் என்ற இலக்கையும் தாண்டி உண்மையாகவே நாட்டை நேசித்தல் என்ற நோக்கத்தை நிறைவேற்றுவதாக அமைதல் வேண்டும்.

இதற்கான முயற்சியில் பெருமளவு மனித வளங்களை பயன்படுத்த வேண்டும். ஏனென்றால் நேரடியாகவே பெரும்பான்மை சமூகத்துடன் உறவாடி, எமது பிரச்சினைகளை முன்வைத்து, அவர்களின் ஒத்துழைப்போடுதான் எமக்கான பாதுகாப்பையும் உறுதிப்படுத்திக் கொள்ள முடியும். முஸ்லிம் சமூகம் பற்றிய கணிசமான கேள்விகளும் சந்தேகங்களும் பெரும்பான்மை சமூகத்திடம் காணப்படுகிறது. இதற்கு பதில் அளிக்காமல் நாம் இந்த பாதையை கடந்து செல்ல முடியாது.

மேலும் குறிப்பாக கிழக்கில் ஏற்பட்டுள்ள இனமுறுகல் நிலைமை ஒட்டுமொத்த தமிழ் சமூகத்தின் பிரதிபலிப்பு அல்ல. இதற்குப் பின்னால் அரசியல் சக்திகளும் வெளிநாட்டு சக்திகளும் சில தனிப்பட்ட நபர்களின் நலனும் தங்கியுள்ளது. இவற்றைச் சரியாக இனங்கண்டு எமக்கான ஒரு வேலைத்திட்டத்தை கிழக்கு முஸ்லிம்கள் வரைந்து கொள்ள வேண்டும். அதேபோன்று எந்தவொரு அடாவடித்தனத்துக்கு எம்மீதான உரிமை மீறல்களுக்கும் எதிராகக் குரல் கொடுக்கும் அதற்காக நீதிமன்றத்தை நாடும் கலாச்சாரமும் உருவாக்கப்பட வேண்டும்.

எவ்வளவுதான் நாம் தாக்கப்பட்டாலும் கோபமூட்டப்பட்டாலும் சட்டத்தை நாம் எமது கையில் எடுக்கக்கூடாது. இது பற்றிய விழிப்புணர்வுகளை எமது இளைஞர்களுக்கும் சமூகத்துக்கும் நாம் வழிகாட்ட வேண்டும். அது முஸ்லிம் சமூகத்தில் உள்ள அனைத்து தலைமைகளின் தார்மீக பொறுப்பும் கடமையும் ஆகும்.

இவ்வாறான ஒரு விரிந்த பார்வையும், நீண்டகால வேலைத்திட்டமும் முஸ்லிம் சமூகம் அவசரமாக ஒழுங்குபடுத்த வேண்டிய வரலாற்று காலகட்டத்தில் இருக்கின்றது என்பதைப் புரிந்து செயற்பட வேண்டும்.

## வடகிழக்கு ஆளுனர்களே... (03 ஆம் பக்கத் தொடர்)

இப்பிரதேசங்களில் சுகாதாரம் பாரிய பிரச்சினையாக உள்ளது. அதிகமான பகுதிகள் காடுகளாக காணப்படுகின்றன. அப்பகுதியில் பல விசப் பாம்புகள் இருக்கின்றன. அவ்வாறு பாம்புக் கடிக்கு ஒருவர் உட்பட்டார் அவருக்கான உடனடி சிகிச்சை செய்வதற்கு போதிய சுகாதார வசதிகள் இல்லை. அதேநேரம், கிராமப் புரங்களில் போதிய போக்குவரத்துகளும் இல்லை. எனவே, பிராந்திய ஆஸ்பத்திரிகளை முடியுமான வழிகளில் அபிவிருத்தி செய்வது ஏழை மக்களுக்கு மிகவும் சிறந்த சேவையாகும்.

இவைகளுக்கு அப்பால், வடகிழக்கு அபிவிருத்தி மற்றும் தொழில்களான மீன்பிடி, விவசாயம் என்பன பாரிய பிரச்சினைக்கு உட்பட்டது. இந்திய மீனவர்களின் வருகை மற்றும் தற்போதும் நடைமுறையிலுள்ள கடற்படையினரின் அனுமதி பத்திரம் பெறும் நடைமுறை. இவைகளுக்கு சிறந்த தீர்வொன்றை வழங்குவது இம்மக்களின் வாழ்வதாரத்திற்கு பாரிய பங்களிப்புச் செய்யும்.

அத்தோடு, வட கிழக்கு மாகாணம் விவசாயத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றது. அவர்களின் வரிப்பணமும் இம்மாகாண அபிவிருத்திற்கு ஒத்துழைக்கின்றது. எனவே, நீர்ப்பாசன வழிமுறைகள் என்பவற்றை முடியுமான வழிகளில் சிறப்பாக மேற்கொள்ளலாம். மேலும், கால்நடை வேளாண்மை செய்யும் பெரும்பாலான தொழிலாளிகள் இருக்கிறார்கள். அவர்களுக்காக சில பிரதேசங்களை ஒதுக்கிக் கொடுப்பது விவசாயத்தையும் கால்நடையையும் சிறந்த முறையில் முன்னெடுப்பதற்கு ஒத்துழைக்கும்.

இவைகளுக்கு முக்கிய தடையாக இருப்பது ஜனாதிபதியால் வெளியிடப்பட்ட விஷேட வர்த்தமானியாகும். அவ்வர்த்தமானி மூலம் வட கிழக்கில் பல இலட்சம் ஏக்கர் காணிகளை காடுகளுக்கு சொந்தமாக்கியுள்ளார். அதேபோல், பல ஆயிரம் ஏக்கர் காணிகள் பாதுகாப்புப் படையினரிடம் இருக்கின்றது. இவைகள் மக்களின் தொழில் மற்றும் வாழ்வாதாரத்திற்கு பாரிய பிரச்சினையாக இருக்கின்றது. இதனை விடுவிப்பதற்கு உங்களின் நெருங்கியவராக ஜனாதிபதி இருப்பதால் இதற்கான தீர்வினை முன்னெடுப்பதற்கு முயற்சிக்கலாம். இது வட கிழக்கு மக்களின் காட்டுத் தொழிலையும் பாதிக்கின்றது. இம்மக்கள் விறகுகள், தேன் மற்றும் பல தேவைகளுக்காக காடுகளுக்குச் செல்கிறார்கள். இவைகள் அனைத்தையும் இவ்வர்த்தமானி அறிவித்தல் தடுத்துள்ளது.

இறுதியாக, அனைத்துக்கும் தீர்வாக வட கிழக்கிலுள்ள நிர்வாக சீர்கேடுகள் பாரிய பிரச்சினையாக இருக்கின்றது. இங்கு எங்கு பார்த்தாலும் இனத்துவம் மற்றும் அரசியல் தலைவிரித்தாடுகிறது. இதற்கு ஏதாவது ஒரு சிறந்த வழிமுறையை ஏற்படுத்தினால் பெரும்பாலான பிரச்சினைகள் தீர்ந்துவிடும். அதன் மூலம் பல்லினத்தன்மை மிக்க ஓர் அழகிய வட கிழக்கை அடையலாம். மக்களுக்கு சுபீட்சமான வாழ்வை ஏற்படுத்தலாம். இவைகளில் முன்னெடுப்பீர்கள் என நம்புகிறேன்.

## யாப்பு... (06 ஆம் பக்கத் தொடர்)

யாப்பு மற்றும் யாப்பு உருவாக்கம் தொடர்பில் கொண்டுள்ள அறிவைத் தெளிவாகப் புலப்படுத்துகின்றன.

புதியதொரு யாப்பு நாட்டின் அடுத்த கட்ட நகர்வுக்கு முக்கியமான நிபந்தனையாக மாறி யுள்ளது. அது ரணில் விக்கிரமசிங்க தயாரித்து வருகின்ற யாப்பாக ஒருபோதும் இருக்க முடியாது. சிறந்ததொரு யாப்பைத் தயாரிப்பதற்கான பரிச்சயமும் தெளிவும் ரணில் விக்கிரமசிங்கவிடமோ ஜயம்பதி விக்ரமரத்னவிடமோ இல்லை என்பது 19 ஆவது திருத்தம் மூலம் தெரிந்து விட்டது. ஜனாதிபதிக்கு இருக்கும் அதிகாரத்தைக் குறைத்து பாராளுமன்றத்துக்கு அதிகாரம் வழங்குவது மட்டுமே அவர்களது தேவையாகவிருந்தது. ஒட்டு மொத்த அரசியலமைப்பிலும் களையப்பட வேண்டிய பல விடயங்கள் அவர்களது கண்களுக்குத் தெரியவில்லை.

மொத்த அரசாங்கத்திலும் பரவிப் போயிருக்கின்ற ஊழல் தடுக்கப்பட வேண்டும், வேறெந்த ஜனநாயக நாட்டிலும் இல்லாத வகையில் எமது பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அரசாங்கத்துடனான கொடுக்கல் வாங்கல்களுக்கான சந்தர்ப்பங்கள் இல்லாதொழிக்கப்பட வேண்டும். சட்டத்தை மீறும் மந்திரிகள் யாராக இருந்தாலும் அவர்களைத் தண்டிக்கின்ற, அவர்களுடைய பாராளுமன்ற உறுப்புரிமையைப் பறிக்கின்ற முறைமை ஒன்று வேண்டும்.

துஷ்பிரயோகங்களைக்களையும் வகையில் புதியதொரு நிறுவனமுறை உருவாக்கப்பட வேண்டும். இவை எதையுமே ரணில்-ஜயம்பதி உருவாக்கிய யாப்பில் காணக் கிடைப்பதில்லை. அரசாங்கத்தின் அழுகிய நிலையையும் வீழ்ச்சியையும், மொத்த நிறுவன முறையிலும் மக்களின் சமூக ஒழுங்கு முறையிலும் மாற்றத்தைக் கொண்டு வருவதன் ஊடாகத் தான் மாற்ற முடியுமேயன்றி மேலோட்டமான மாற்றங்களினாலல்ல.

இதனால் அரசியல்வாதிகளின் சுயநலத்தைப் பூர்த்தி செய்து கொள்வதற்கான அரசியல் யாப்பன்றி, மக்களின் நலனுக்கான மக்கள் யாப்பொன்றே தற்பொழுது அவசியப்படுகிறது. அது மோசடி, துஷ்பிரயோகம், முயலாமை போன்றவற்றுக்கு இடமளிக்காத, சட்டமும் நீதியும் கோலோச்சுகின்ற, அரச நிர்வாகத்தில் மக்களின் பங்களிப்பை அதிகரிக்கச் செய்கின்ற, புதியதொரு மக்கள் அரசைக் கட்டியெழுப்புகின்ற யாப்பாக அமைய வேண்டும்.

முன்னைய தவறுகளைத் திருத்திக் கொள்ளும் வகையில் அது அமைய வேண்டும். இன, குல, மத பேதங்களை நீக்கி சகலரையும் சமமாக மதித்து ஒவ்வொரு தனி மனிதனுக்கும் உள்ள அந்தஸ்தையும் சுயமரியாதையையும் உறுதிப்படுத்துவதாக அமைய வேண்டும். ஊடகம், கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, தொழிற்துறை, விவசாயம், வியாபாரம், சக்திவளம், சூழல் என்பவற்றோடு ஏழைக் கிராம மக்களின் மத்தியிலும் ஆழமான, பலன்தரக்கூடிய மாற்றத்தைக் கொண்டு வருவதாக அது அமைய வேண்டும்.

## 2015-2019 ... (06 ஆம் பக்கத் தொடர்)

ராஜபக்ஷாக்களின் ஒருவரே களமிறங்கும் சாத்தியம் உள்ளது. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அல்லது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு சார்பில் மைத்திரிபால வேட்பாளராக களமிறங்குவாராயின் அவர் மூன்றாவது இடத்திற்கே தள்ளப்படுவார். அடுத்த ஜனாதிபதியாக யார் தெரிவுசெய்யப்பட்டாலும் அவருக்கும் ஜனாதிபதிப் பதவிக் காய்ச்சல் அதிகமாக பீடிக்கும். அதன் பிறகு சிறிசேனவைப் போல் சட்டம், யாப்பு போன்றவற்றை அளவுகடப்பின்றி மீறுவார் என்பது உறுதி.

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுபவர் யாராக இருப்பினும் அவர் கூடிய சீக்கிரம் பாராளுமன்றத்தைக் களைப்பதற்கு நடவடிக்கை எடுப்பார். இதனால் 2020 மார்ச்சில் அல்லது ஏப்ரல் மாத ஆரம்பத்தில் பாராளுமன்றத் தேர்தல் நடைபெறும் சாத்தியம் உள்ளது. இப்பொதுத் தேர்தலில் வெற்றி பெறுபவர் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்ற நபரின் கட்சியாகும் என்பதை தேர்தல் வரலாற்றை ஆராய்ந்தால் ஊகித்துக் கொள்ள முடியும்.

அப்போது பிரதமராக ஜனாதிபதியின் சகோதரர் ஒருவர் அல்லது ஆதரவாளர் ஒருவரே நியமிக்கப்படுவார். நிறைவேற்றுத் துறையினதும் சட்டவாக்கத் துறையினதும் முழு அதிகாரமும் ஒரு கட்சியை சூழ குவிந்துவிடும். இப்படியான நிலையில் 19ஆவது திருத்தம் எந்தளவுக்கு வெற்றியளிக்கும் என்பது சந்தேகமானது. ஜனாதிபதி முறையை நீக்கும் 2014/2015 தீர்மானம் 2019இல் மீளவும் இதனால் தேவைப்படுகிறது.

## ஒரு தனிமனிதனை... (07 ஆம் பக்கத் தொடர்)

உதாரணமாக ஏதேனும் ஒரு இடத்தில் இனப்பிரச்சினையொன்று ஏற்பட்டது என வைத்துக்கொள்வோம். அரசியல்வாதிகளை தேடிச் செல்லாமல் பொலிஸார் தங்களால் செய்யப்பட வேண்டிய வேலையைச் செய்ய வேண்டும். இது முதலாவது விடயம். அடுத்தது பொலிஸார் எல்லோருக்கும் சமமாக வேலை செய்கிறார்கள் என்கின்ற நம்பிக்கை மக்கள் மத்தியில் உருவாக வேண்டும். இது தற்பொழுது உருப்பெற்று வருகிறது.

கடந்த ஒக்டோபர் 26 இற்கு பிறகு மஹிந்த ராஜபக்ஷ பிரதமராக நியமிக்கப்பட்டவுடன், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் இருந்த பொலிஸ் அதிகாரியொருவரை மாற்றுவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ரவீ விஜேகுணவர்தன என்பவரின் கைதை இடைநிறுத்துவதற்கு ஐபி நிஷாந்த என்கின்ற சிறந்த பொலிஸ் அதிகாரியை இடமாற்றம் செய்தார்கள். ஆனால் பொலிஸ் ஆணைக்குழு அதனை இடைநிறுத்தியது.

நீதித்துறையும் இன்று சுயாதீனமாக இயங்குகிறது. அமைச்சர்களின் பின்னால் சென்று தீர்வு காணும் முறை இல்லாமல் செய்யப்பட வேண்டும். புதிய அரசியலமைப்பிலும் மாகாண பொலிஸ் ஆணைக்குழுக்களுக்கு அதிகாரம் வழங்கப்படவுள்ளது. அவர்கள் சுயாதீனமாக இயங்கும் போது பாதுகாப்பு இயல்பாகவே உருவாகும்.

- **தற்போதைய பிரச்சினைகளுக்கு நடைமுறையிலுள்ள அரசியலமைப்புக் கூடாக தீர்வுகளை காண முடியாதா? புதிய அரசியலமைப்பு ஒன்றை உருவாக்குவதன் மூலமா அவற்றுக்கு தீர்வுகாணப்பட வேண்டியிருக்கிறது?**

தற்போதைய யாப்பு ஜனநாயகத்திற்கு எதிரானது. அதிகாரங்கள் தனிமனிதனொருவரிடம் குவிக்கப்பட்டுள்ளன. 19ஆவது திருத்தத்தின் மூலம் சில குறைக்கப்பட்டாலும் ஒன்று குவிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் மீதான அச்சம் இன்னும் நிலவிக் கொண்டுள்ளது.

அமெரிக்கப் பாராளுமன்றத்தில் நிதி நடவடிக்கை நிறைவேற்றப்படாமையினால் சில அரசாங்கத் திணைக்களங்கள் 100 நாட்களுக்கும் அதிக காலம் சேவையில் ஈடுபடவில்லை. ஏனெனில் ஜனாதிபதிக்கும் பாராளுமன்றத்திற்கும் இடையில் மோதல் காணப்பட்டு வருகிறது. இந்த விடயத்தை கொல்வினும் என். எம். பெரேராவும் 1978 இல் கூறினார்கள். அமெரிக்காவில் இப்படி நடந்தால் அவர்களால் அதனை தாங்கிக்கொள்ள முடியும். எமது நாட்டில் நடந்தால் அதைத் தாங்க முடியாது.

கடந்த டிசம்பரில் இந்தப் பிரச்சினை முடிந்திருக்காவிட்டால் சம்பளம், ஓய்வூதியம் போன்றவற்றை செலுத்த பணமில்லாமல் போயிருக்கும். மற்றையது, இந்த யாப்பு கொண்டுவரப்பட்ட 41 வருட காலத்திலேயே சிறுபான்மை மக்கள் அதிகம் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர். யுத்தம் உள்ளிட்ட எத்தனையோ பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க வேண்டியிருந்தது.

புதிய யாப்புக்கூடாக பாராளுமன்ற முறை ஏற்படுத்தப்பட்டால் சிறுபான்மையினரின் பிரச்சினைகள் தொடர்பில் அழுத்தங்களைப் பிரயோகிக்க எத்தனையோ வழிகள் உள்ளன. புதிய தேர்தல் முறையில் அநுராதபுரம் தொகுதியில் ஐந்தாயிரம் முஸ்லிம்கள் இருக்கிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். ஐயாயிரம் மக்களின் வாக்குகளுக்காக ஒரு சிங்களப் பிரதிநிதி அதிகமாக முயற்சிப்பார். அந்த வாக்குகளில் தான் அவர்களின் வெற்றி தோல்வி உள்ளடங்கியுள்ளது. அவர்கள் இம்மக்களின் பிரச்சினைகளைப் பேசுவார்கள். எம்.பிக்களைத் தெரிவுசெய்யும் தற்போதைய தேர்தல் முறை மாற்றப்பட வேண்டும். நன்கு படித்தவர்கள் பாராளுமன்றம் அனுப்பப்பட வேண்டும். அப்போது தான் அராஜகம் ஒழிந்து நாட்டில் ஜனநாயகம் ஸ்திரமடையும்.

நிறைவேற்று அதிகார முறையை ஒழிப்பதாகக் கூறியே மைத்திரிபால ஆட்சிக்கு வந்தார். உண்மையில் அதைச் செய்ய வேண்டும் என்ற நோக்கம் அவரிடம் இருந்தது. அவர் ஆட்சிக்கு வந்ததும் தனது 6 வருட பதவிக் காலத்தை 4 வருடங்களாகக் குறைக்க வேண்டும் என்றார். 4 வருடமாகக் குறைக்க வேண்டாம் ஐந்து வருடமாக்க் குறையுங்கள் என்று ஏனையவர்கள் ஆலோசனை சொன்னதற்கு அமைய 5 வருடமாக மாற்றப்பட்டிருக்கிறது. ஆனால் கடந்த வருடம் அவர் தனக்கு 6 வருடங்கள் பதவியில் இருக்க முடியுமா என்று உயர் நீதிமன்றத்திடம் கேள்வி கேட்டிருந்தார்.

தற்போது அவரது மனது மாறியுள்ளது. எந்த மனிதனும் நிறைவேற்று அதிகாரம் என்ற இந்த ஆசனத்தில் அமர்ந்தால் அவரது மனம் இயல்பாகவே மாற்றப்படும். மீளவும் அவர் ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கும் சாத்தியமுள்ளது. ஆரம்பத்தில் முதலாவது பதவிக் காலம் முடிந்ததும் பொலன்னறுவைக்கு சென்றுவிடுவேன் என்று கூறினார். ஒரு தனி மனிதனை நம்பி அரசாங்கத்தை நடாத்துவது மிகப் பயங்கரமானது.

- **கடந்த ஒக்டோபர் 26ஆம் திகதிக்குப் பிந்திய நாட்டு நிலைமைகளை நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள்?**

19 ஆவது திருத்தத்தின் படி பிரதமரை பதவி நீக்கம் செய்யும் அதிகாரம் ஜனாதிபதிக்குக் கிடையாது. தனக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரத்தின் மூலம் எல்லாவற்றையும் செய்துவிட முடியும் என்ற உணர்வே இதற்குக் காரணம். அதாவது நிறைவேற்று அதிகாரம். இது முற்றாக ஒழிக்கப்பட வேண்டும். கடந்த இரண்டு மாதத்தில் நாட்டின் பொருளாதாரம் வெகுவாகப் பாதிப்படைந்தது. எத்தனையோ முதலீட்டு வாய்ப்புகள் நாட்டிற்கு இல்லாமல் போனது. ரூபாவின் வீழ்ச்சி அதிகரிப்பை காட்டியது. அதன் விளைவால் அரசாங்கத்திற்கு இந்த மாதம் மிகப்பெரும் கடனொன்றை நஷ்ட ஈடாகச் செலுத்த வேண்டியிருக்கிறது. உண்மையில் இந்த நாட்டில் மிகப்பெரும் பாதிப்பு ஏற்பட்டது.

டிசம்பரில் இந்தப் பிரச்சினையை முடிவுக்கு கொண்டுவந்ததன் மூலம் நாடு அழிவிலிருந்து மீட்டெக்கப்பட்டுள்ளது.


மீள்பார்வை **உள்நாட்டு - வெளிநாட்டு புதிய சந்தா விபரம்**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மீள்பார்வை தனிப் பிரதி | - ரூபா 40.00 | இந்தியா | | மத்திய கிழக்கு நாடுகள் | - 4000.00 | ஐக்கிய இராச்சியம் | - 5500.00 |
| 12 இதழ்கள் | - ரூபா 600.00 | தனிப் பிரதி | - ரூபா 100.00 | மலேசியா | - 4000.00 | அமெரிக்கா | - 6500.00 |
| 24 இதழ்கள் | - ரூபா 1200.00 | ஒரு வருடம் | - ரூபா 3500.00 | ஐக்கிய அறபு இராச்சியம் | - 4000.00 | அவுஸ்திரேலியா | - 4700.00 |
| | | | | | | சீனா | - 4600.00 |

வங்கியில் பணம் செலுத்திவிட்டு, அதன் பிரதியையும் உங்களது பெயர், முகவரியையும் எமக்கு அனுப்பி வையுங்கள்:

MMC 49, Sri Mahinda Darma Mw, Dematagoda, Colombo 09. Hotline: 0777 581 661, People's Bank A/c: 056100153078164 (Branch: Sri Sangaraja Mawatha)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் மதிப்பீடு

• இன்ஸாப் ஸலாஹுதீன்




# என் வானம் என் சிறகு

## வடகிழக்கிந்திய பயணக் கட்டுரை

பயணங்கள் நம் அகக் கண்களைத் திறக்கின்றன. தனிமையிலும் சோர்விலும் சிக்கித் தவிக்கும் வாழ்விற்கு வாசிப்பு மற்றும் பயணத்தின் வழியேதான் விடுதலை கிடைக்கின்றது. ஒவ்வொரு பயணமும் புத்தகமும் பூட்டப்பட்டிருக்கும் ஒரு சாளரத்தைத் திறக்கிறது. புதிய வெளிச்சத்தை பாய்ச்சுகிறது.

இந்தியா எப்போதும் என் நினைவுகளுக்கும் உணர்வுகளுக்கும் நெருக்கமாய் இருக்கும் நாடு. அதன் ஊர்களும் மனிதர்களும் இலக்கியங்கள் ஊடாகவும் திரைப்படங்கள் மூலமாகவும் மனதுக்கு நெருக்கமாய் இருக்கின்றன.

மூன்றாண்டுகளுக்கு முன்பு இந்தியாவின் சில பிரதேசங்களுக்குச் செல்லும் சந்தர்ப்பம் கிடைத்தது. இந்தியப் பெரு நிலப்பரப்பில் ஒரு ரயில் பயணத்தில் தூங்கி எழுந்ததும் பண்பாடு, கலாசாரம், மொழி என எல்லாமே மாறிவிடுகிறது. புத்தம் புது அனுபவங்கள் தண்டவாளங்கள் போல நீண்டு கொண்டே கொண்டு செல்கிறது.

பஷீர் கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேலாக இந்தியாவின் குறுக்காகவும் நெடுக்காகவும் பயணப்படுபவர். பல்வேறு சந்தர்ப்பங்களில் தனது பயண அனுபவங்களை பதிவு செய்திருக்கிறார்.

ஆனால் அவரது வடகிழக்கிந்தியப் பயணமானது ஏனைய எல்லாப் பயணங்களிலிருந்தும் வேறுபட்டதாக இருக்கிறது. இருண்ட குகைக்குள் பயணிக்கும் ஒளிக் கீற்றைப் போல நம்மைப் பின்தொடர்கிறது, புதியதொரு உலகிற்குள் அழைத்துச் செல்கிறது.

ஒவ்வொரு நிலப்பரப்பிலும் விடியலும் அஸ்தமணமும் ஒன்று போல இருந்தாலும் வாழ்க்கை முறையில்தான் எத்தனை மாறுதல்கள்!

வடகிழக்கிந்தியாவின் நிலத்தோற்றத்தை, வாழ்க்கை முறையை, மனிதர்களை, பண்பாட்டை காட்சி மொழியில் எழுதும் எழுத்துக்களே இக் கட்டுரைகள்.

பஷீரின் பயணக் கட்டுரைகள் தனிச் சிறப்பு வாய்ந்தவை. பஷீர் தனது பயணங்களை காட்சி மொழியில் அற்புதமாக விபரிப்பவர். அவரது பயண எழுத்துக்கள் ஒளிப்பதிவு போல இருக்கும். எதையும் விட்டு வைக்கவில்லை எனும் அளவுக்கு முழுப் பயணத்தையும் எழுதக் கூடியவர்.

பயண அனுபவத்தை யார் வேண்டுமானாலும் எழுதலாம். ஆனால் பயணத்தின் வழியே வரலாற்றையும், நிகழ்காலத்தையும், பண்பாட்டு மானுடவியலையும் கூர்மையான அவதானிப்புக்களின் வழியே வெளிக் கொணர்வது அத்தனை இலகுவானதல்ல.

இக்கட்டுரைகளைப் படிக்கும்போது நாம் அறிந்து வைத்திருந்த இந்தியா பின்நோக்கிப் போய் ஒரு புது இந்தியாவிற்குள் நாம் நுழைகிறோம். இதுதான் இந்தப் பயணத்தினதும் எழுத்தினதும் வெற்றி. இல்லையென்றால் அபாயங்களும் நிச்சயமின்மைகளும் நிறைந்த ஒரு தொலைதூரப் பயணத்திற்கு என்ன தேவை இருக்கிறது? புதிய வாழ்க்கை முறையை, நிலப்பரப்பை பார்த்துவிடத் துடிக்கும் பஷீரின் அகம் சார்ந்த தவிப்பே இப்பயணத்தின் அடிநாதம்.

எதிர்படும் மனிதரின் உரையாடல் வழியே அல்லது அவரது ஒரு செயலின் வழியே பஷீர் ஒரு பண்பாட்டை, வரலாற்றை வெளிக்கொண்டு வருகிறார். வடகிழக்கிந்திய பயணத்தில் ரயிலில் அவருக்கு எதிர்படும் முதல் மனிதர் முதல் இறுதியாக சந்திக்கும் ராஜூ என்கிற ராணுவ ஓட்டுனர் வரை அனைவரிடமிருந்தும் நமக்கு ஒரு கூடுதல் தகவலை கொண்டு வந்து சேர்க்கிறார்.

பயண இடங்களை அதனோடு சம்பந்தப்பட்ட வரலாற்றை சமகாலத்தில் அவற்றின் இருப்பை அறம் சார்ந்த விமர்சனப் பார்வையின் வழியே அவர் வெளிப்படுத்துகிறார்.

கிறிஸ்தவப் பரப்புரையாளர்கள் மூலம் அங்கு ஏற்பட்டுள்ள மாற்றங்களை நேர்மையாகப் பதிவு செய்கிறார்.

''வளர்ந்து வரும் இந்தியாவில் தங்களுக்குரிய பங்கை பெறுவதற்கான விழிப்புணர்வும் முனைப்பும் உழைப்பும் அதன் விளைவாக ஈட்டிய ஓரளவு வெற்றியும் வடகிழக்கிந்தியர்களிடம் இருக்கிறது. சட்டியின் அடியில் ஒட்டி வரும் கரிப்பிசுக்கு போல வளர்ச்சியினடியில் ஒளித்து வைக்கப்பட்டிருக்கும் இந்திய மேலாதிக்கத்தை அடையாளங் கண்டு கொள்கின்றனர். இவையனைத்தும் அவர்களிடம் இருக்கும் பழங்குடி தன்னுணர்வு, கிறிஸ்தவம், நவீன கல்வி என்ற மூன்று காரணிகளின் விளைவாகத்தான் சாத்தியமாகியுள்ளது.''

மியன்மார் எல்லைக்குள் அவர் நுழைந்த அனுபவத்தை அற்புதமாகப் பதிவு செய்திருக்கிறார். ஒரு மிகப் பெரிய வன்செயல் அங்கு நடந்து முடிந்திருக் கிறது. அதன் உளவியலை பஷீர் தத்ரூப மாகப் பதிவுசெய்கிறார்.

''தேரவாத பௌத்தத்தை பின்பற்றும் சிறீலங்காவும் மியான்மரும் இந்திய எல்லையை ஒட்டியே அமைந்திருப்பதாலும் சனாதன தெய்வங்களையும் சடங்குகளையும் நம்பிக்கைகளையும் பிரிவினைகளையும் இந்த தேரவாத பௌத்தம் பெருமளவில் உள்வாங்கியிருக்கின்றது. அதனால்தான் சக மனிதன் மீதான வெறுப்பை பௌத்த ஆன்மீகத்தின் பெயரால் நிகழ்த்த முடிகின்றது. இத்தனைக்கும் சனாதனத்தின் முக்கிய குறியீடுகளை தொன்மங்களை நிராகரிப்பதுதான் தேரவாத பௌத்தத்தின் அடிப்படை. மதங்கள் ஆதிக்க வெறிக்கான ஊர்தியாக மாற்றப்படும்போது மதத்தின் ஆன்மா இறந்துதான் போகின்றது. ஆதிக்க வாதிகளின் கையில் அது உயிரற்ற கூடாகத்தான் மிஞ்சுகின்றது.''

பழங்குடி வாழ்க்கை குறித்து இப் பயணத்தின் வழியே நிறைய அறிந்து கொள்ள முடிகிறது. அவர்களைப் பற்றிய பார்வையை இப்படிப் பதிவு செய்கிறார்.

''இயற்கையுடன் இணைந்து வாழுதல், தாவரங்கள், விலங்குகளுடனான ஒத்திசைவும் நல்லிணக்கமும் என பழங்குடி வாழ்வில் சமவெளி மனிதர்கள் கற்றுக் கொள்ளவும் பின்பற்றவும் நிறையவே இருக்கின்றன. ஆனால், பிற இன பழங்குடிகளிடம் குருதியைப் பெருக்கும் அவர்களின் பூசலிடும் தன்மையை முடிவுக்கு கொண்டு வரவேண்டுமெனில், நீதியும் சனநாயகத் தன்மையும் நிறைந்த வலுவான நிலையான அரசானது பழங் குடியினரை ஆள வேண்டும். ஆனால் இன்றைய இந்திய அரசு இதில் எவ்வளவு தொலைவிற்கு தகுதி பெற்றுள்ளது?''

எடுத்துக்காட்டுக்கு இந்த மேற்கோள்களை இங்கு குறிப்பிட்டுள்ளேன். இது போன்ற நுண்மையான பார்வைகளாலும் வரலாற்றுத் தகவல்களாலும்,நிகழ்கால நடப்புகளின் உண்மை அவதானங்களாலும் பஷீர் தன் பயணத்தை அர்த்தம் நிறைந்ததாக மாற்றியிருக்கிறார்.

ஒரு பயணக் கட்டுரையாக சுவாரஸ்யமாக படிக்கவும் வரலாற்றை நம் கண் முன் நிறுத்தும் ஆவணம் என்ற அளவில் கனதியாகப் படிப்பதற்கும் இக் கட்டுரைகள் பயன்படுகின்றன.

பஷீர் நட்பின் அர்த்தத்தை அடர்த்தியாக்குபவர். கடந்த பத்தாண்டுகளில் நாம் எவ்வளவோ பேசியிருக்கிறோம். பரிமாரி யிருக்கிறோம்.இந்தப் பயணத்திற்கான ஏக்கத்தை ஒரு தாயைப் போல அவர் மனதில் சுமந்திருந்தார். அவரது கனவுகள் மெய்ப்படுவது மட்டற்ற மகிழ்ச்சியைப் பொழியச் செய்கிறது.

தொழில் வாழ்க்கையைப் பார்த்துக் கொண்டு இலக்கியத்துறையில் பயணிப்பதென்பது சிக்கலும் சிரமமும் வாய்ந்தது. நுகர்வே எல்லாம் என்றாகிப் போன உலகில் எழுத்தும் வாசிப்பும் படைப்பும் பொதுப் புத்தியில் கடைசி வரிசையில் வைத்துப் பார்க்கப்படுகிறது.

இருந்தாலும் மனதின் விடுதலைக்கு அதுதான் காரணமாக இருக்கிறது என்பதை உணர்ந்தவர்கள் தம் பயணத்தை தொடர்கிறார்கள். உங்கள் பயணம் தொடரட்டும். புதிய திசைகளில் புதிய பாதைகள் நிச்சயம் இருக்கும். வாழ்த்துக்கள் நண்பரே!

---

## மாவனல்லை... (10 ஆம் பக்கத் தொடர்)

சுத்தியல்கள் இரண்டும் மட்டும் அவருடைய வீட்டிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டது எப்படி? தனது பைக் காணாமல் போனதாக முறையிட்டவரிடம் அதனுடைய லைசன்ஸ், இன்சூரன்ஸ் மட்டும் எப்படி இருக்க முடியும் எனப் பல கேள்விகளை ஊரார் எழுப்புகின்றனர்.

மாவனல்லைச் சம்பவம் தொடர்பான உண்மை நிலவரங்கள் தலைமறைவாகியுள்ள இப்ராஹிம் மௌலவியின் புதல்வர்கள் கண்டுபிடிக்கப்பட்டாலேயே துலாம்பரமாகும். ஆனால் அவர்கள் ஏன் தலைமறைவாகியிருக்கிறார்கள் என்பது தான் எல்லோர் முன்னிலையிலும் உள்ள கேள்வி.

கடைசியாக இப்ராஹிம் மௌலவியுடைய வீட்டுக்குச் சென்றோம். பொலிஸ் அதிகாரிகள் இருவர் அங்கு பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். இந்த வீட்டுக்கு ஏன் பாதுகாப்பு வழங்கப்பட்டிருக்கிறது என்று கேட்டோம். அவர்களுடைய உடைமைகளைப் பாதுகாக்கவே நாங்கள் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருக்கிறோம் என்றார் கடமையிலிருந்த அதிகாரி. திரும்பினோம், சிலைகளுக்கும் சிலைகளை உடைத்தவர்களுக்கும் வழங்கப்படும் பாதுகாப்பினை மீட்டிப் பார்த்தவர்களாக.

களத்தில் உதவிய ரிகாஸ்
ஸுபைருக்கு நன்றிகள்

---

## அழிந்தது தென்னந் தோப்பு

அழிந்தது தென்னந் தோப்பு
நேற்று தென்னந் தோப்பு
இருந்த இடத்தில்
ஒரு நிழலற்ற பொட்டல் இருக்கிறது
முறிந்த மரங்களின் குப்பைக் கூளமிருக்கிறது
தேங்காய் நெற்றுகள்
போர்க் களத்தில் தலைகள்போல
சிதறிக் கிடக்கின்றன
மறைவிடமிழந்த
பாம்புகளும் அணில்களும்
குழப்பமாய் ஊர்கின்றன
பறவைகள் நிராதரவாய்
வெய்யிலில் பறக்கின்றன
யாரோ ஒரு மனிதன்
துண்டால் வாயைப் பொத்திக் கொண்டு
அழுகிறான்
ஒரு சீட்டுக் கட்டு போல சரிந்த காலத்தை
எப்படி திரும்ப அடுக்குவது என
யாருக்கும் தெரியவில்லை
நாளை
மரங்கள் இருந்த இடத்தில்
புற்கள் அரும்பும்
மறதியின் வெட்டுக் கிளிகள்
அதன் மேல் வந்தமரும்



மனுஷ்ய புத்திரன்

---

## முஸ்லிம் அலிகிலிருந்து... (12 ஆம் பக்கத் தொடர்)

எதிரானவர் என்ற பிரச்சாரம் அப்பாவி தமிழ் மக்களை உசுப்பிவிடுவதாகவே உள்ளது. கௌரவ ஆளுநர் ஹிஸ்புல்லாஹ்வைப் பொறுத்தமட்டில் வட கிழக்கு இணைப்புக்கு எதிரானவராகக் கொள்ள முடியாதுள்ளது.

ஆரம்ப காலங்களில் இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சியில் இணைந்த வடகிழக்கில் முஸ்லிம்களுக்கான நிலத்தொடர்பற்ற அதிகார அலகு குறித்த நிலைப்பாட்டினை கொண்டிருந்தவர். பிற்பட்ட காலங்களில் தொடர்ந்தும் முஸ்லிம்கள் போராட்டக் குழுக்களாலும் தமிழ் தேசிய அரசியல் கட்சிகளாலும் புறக்கணிக்கப்பட்டபோது தேசிய அரசியல் நீரோட்டத்தில் இணைந்து தமது இருப்புக்களையும் உரிமைகளையும் குறைந்த பட்சப் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் மாற்று அரசியல் செயற்பாட்டாளராகப் பயணித்ததில் நியாயப்பாடுகள் இல்லாமல் இல்லை.

வட கிழக்கினை திட்டமிட்டு பிரிப்பு செய்த பெரும்பான்மை தேசியவாத கட்சியுடன் ஒட்டி உறவாடும் பசுத்தோல் போர்த்திய தமிழின பற்றாளர்கள் என கூறிக் கொள்பவர்கள் தற்போதைய ஆளுநருக்கெதிராக வட கிழக்கு இணைப்பிற்கு எதிரானவர் எனக் கூறிக்கொண்டு ஹர்த்தால் போன்ற இனக் குரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவது அவர்களது அரசியல் வங்குரோத்து நடவடிக்கையினை கோடிட்டுக் காட்டுகின்றது.

மறுபுறம் வடமாகாணத்திற்கு நியமிக்கப்பட்டுள்ள ஆளுநர் தமிழீழ தாயகக் கோட்பாட்டில் நம்பிக்கை இழந்தவர் மாத்திரம் அல்லாமல் இந்திய திருத்திட்டமான 13வது சட்டமூலத்துடனேயே தமது அரசியல் பார்வையைக் கொண்டவர். முன்னாள் வடமாகாண முதலமைச்சரும் இக்கருத்தினையே கொண்டிருந்தமை புதிய ஆளுநரை தாம் புகழ்ந்து வரவேற்கக் காரணமாய் அமைந்தது.

புலிகளை ஒரு பயங்கரவாத இயக்கமாக தனது எழுத்துக்களில் திடப்படுத்திய வடமாகாண ஆளுநரை கட்சிபேதங்கள் மறந்து வரவேற்க முன்வந்த தமிழ் தரப்பு கிழக்கில் முஸ்லிம் ஒருவர் ஆளுநராக வருவதை எதிர்ப்பது தமிழ் முஸ்லிம் உறவு குறித்து பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது.

தற்போதைய கிழக்கு மாகாண ஆளுநரைப் பொறுத்தவரையில் அவர் ஒட்டமாவடி கோவிலை இடித்தவர் என்ற குற்றச்சாட்டு உண்மைக்குப் புறம்பானது. ஏனெனில் 1990களில் தமிழ்-முஸ்லிம் உறவு வன்முறைகளாக கூர்மையடைந்த போது புலிகளுக்கும்

முஸ்லிம் தரப்புக் கும் இடைத் தரகை தற்போதைய ஆளுநர் மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டது. கிழக்கிற்கான மின்சார விநியோகத்தை புலிகள் தகர்த்த போது புலிகளது உள்ளார்ந்த கோரிக்கைகள் அரச தரப்பின் உதவியோடு தற்போதைய ஆளுநர் ஊடாகவே மேற்கொள்ளப்பட்டது என்பது வரலாற்று உண்மை.

இந்தவகையில் ஓட்டமாவடி கோவில் காணியை விற்பனை செய்வதில் கோவில் பரிபாலன சபைக்கும், புலிகளுக்கும், அப்போதைய மாவட்ட அரச அதிபர் மற்றும் முஸ்லிம் தரப்புக்கும் மத்தியஸ்தத்தை தற்போதைய ஆளுநர் மேற்கொண்டுள்ளார். மாத்திரமல்லாமல், கடந்த காலங்களில் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சராக இருந்தபோதும் குறைந்தது மாவட்டத்தில் முஸ்லிம்கள் யுத்த காலங்களில் இழந்த ஒரு துண்டு காணியைக் கூட மீளப்பெற்றுக் கொடுக்கவில்லை என்ற கசப்பான உண்மையும் உள்ளது.

அது மாத்திரமல்லாமல் குறைந்தது மீள்குடியேறி வாழும் முஸ்லிம்களின் காணிகளுக்கு ஒப்பங்களைக் கூட பெற்றுக் கொடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டும் முஸ்லிம் தரப்பிடம் காணப்படுகின்றது. தமிழ் சகோதர இனத்துடன் புரிந்துணர்வு அடிப்படையிலேயே காணி விடயம் பேசித் தீர்க்க வேண்டும் என்ற கௌரவ ஆளுனரின் நிலைப்பாடு மறுபுறம் முஸ்லிம் தரப்பை எரிச்சலூட்டாமலும் இல்லை.

தனது புதல்வரின் திருமணத்திற்காக அழைப்பிதழை ஜனாதிபதியிடம் கையளிக்கச் சென்றவேளை எதிர்பாராத விதமாக ஆளுநர் பதவியினை பொறுப்பேற்கச் செய்து சங்கடத்தில் ஆழ்த்தியதாக ஆளுநர் தரப்பு உள்ளக செய்திகள் தெரிவிக்கின்றன.

### கிழக்கு ஆளுநருக்கெதிரான உள்ளக எண்ணெய் வார்ப்புகள்.

குறுகிய அரசியல் அபிலாசையை இலக்காகக் கொண்டு தமிழ் இனவாத பின்புலங்கள் குழப்பங்களை ஏற்படுத்தி வரும் இந்நிலையில் முஸ்லிம் கட்சிகளின் முக்கிய பிரதிநிதிகளும் தமது பங்கிற்கு எரிகின்ற நெருப்பில் எண்ணெய் ஊற்றுகின்ற விடயத்தை கச்சிதமாகச் செய்து கொண்டுள்ளனர். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் மூத்த உறுப்பினர் ஒருவர் கிழக்கில் காணப்படும் குறிப்பாக மட்டக்களப்பில் காணப்படும் முஸ்லிம்களது காணிப் பிரச்சினையை உடனடியாக ஆளுநர் தீர்க்க வேண்டும் என்ற பகிரங்க மடலை ஊடகங்களுக்கு வழங்கி இருந்தார்.

தாம் மாகாண சபையில் இருந்த நான்கு வருட காலப்பகுதியில் தீர்க்க முடியாததை, முஸ்லிம் கட்சிகள் அரசுகளின் பங்காளிகளாக மாத்திரமன்றி முக்கிய அமைச்சுக்களை சுமந்துகொண்டு முஸ்லிம் சமூகத்தை விற்று பிழைப்பு நடாத்தும் பொழுது கிழக்கு ஆளுநர் குறுகிய சில நாட்களுக்குள் முஸ்லிம்களது காணிப் பிரச்சினையை தீர்க்க வேண்டும் என தமிழ் தரப்பிற்கு காட்டிக்கொடுப்பு செய்ய முனைவது வேடிக்கையானது. குறித்த கட்சிகளின் அமைச்சர்களும் ஆளுநர் பதவிப் பிரமாணம் செய்தவுடன் அல்லாமல் ஹர்த்தால் அனுஷ்டிப்பு செய்திகளின் பின்னர் ஆளுநருக்கு வாழ்த்து சொல்ல முனைந்தமை இவர்களது தார்மீகத்தை கேள்விக்குட்படுத்துவதாக உள்ளது.

ஆக மொத்தத்தில் ஆளுநர் என்ற துருப்புச் சீட்டு பல்முனை அரசியல் ஆடுகளத்தில் பரீச்சார்த்தமாக வீசப்பட்டுள்ளது. மறுபுறம் கிழக்கின் ஆளுநராக ஒரு முஸ்லிம் சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்தவர் வரக்கூடாது என்ற வக்கிர எண்ணத்துக்கு மத்தியில் இணைந்த வடகிழக்கில் முஸ்லிகள் தமிழ் தரப்பிடம் இருந்து எதனையும் பெற்றுக்கொள்ளப் போவதில்லை என்ற கசப்பான உண்மையினை தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மௌனத்தில் இருந்தும், இனவாதத்தை மூலதனமாகக் கொண்டுள்ள சில்லறை தமிழ் கட்சிகளிடம் இருந்தும் முஸ்லிம் சமூகம் புரிந்துகொள்ள வாய்ப்பாக உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள்பார்வை விளையாட்டு

## இரண்டு முஸ்லிம் வீரர்களுடன் ஒலிம்பிக்கில் இணையும் வத்திக்கான்




பரிசுத்த பாப்பரசர் வாழும் உலகின் சிறிய நாடான வத்திக்கானிலிருந்து ஒலிம்பிக் போட்டிகளுக்கான அணியொன்றை அனுப்பி வைப்பதற்கு வத்திக்கான தீர்மானித்துள்ளது. இத்தாலிய ஒலிம்பிக் கமிட்டியுடனான இணக்கப்பாட்டுடன் இந்த அணி ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ளது.

தற்போது வத்திக்கானில் 60 பேர் அடங்கிய தடகள விளையாட்டு அணியொன்று உள்ளது. இந்த அணியில் கத்தோலிக்க மற்றும் கிறிஸ்தவ அருட் தந்தை கள், கன்னியாஸ்திரிகள், பாப்பர சருக்கு பாதுகாப்பு வழங்கும் பாதுகாப்புப் பிரிவினர் (Swiss Guards) ஆகியோர் உள்ளடங்கு கின்றனர். இந்த அணியை அறிமுகப்படுத்தும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

வத்திக்கானில் தொழில்புரிபவர்களும் இந்த அணியில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளதோடு, அண்மையில் அகதிகளாக வத்திக் கானில் குடியேறிய செனகல் மற்றும் கம்பிய நாட்டு முஸ்லிம்கள் இருவருக்கும் இந்த அணியில் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

வத்திக்கான் விளையாட்டு வீரர்கள் கலந்து கொள்ளும் முதல் தட கள நிகழ்வாக 10 கிலோ மீட்டர் மரதன் ஓட்டப் போட்டியொன்று 20 ஆம் திகதி நடைபெறவுள்ளது.




## IAAF போட்டிகளில் புதிதாக பால்சமத்துவப் போட்டிகள்

இம்முறை நடக்கவிருக்கின்ற IAAF உலக அஞ்சலோட்டப் போட்டிகள் யொகோஹாமா 2019 இல் புதிய வகைகள் இரண்டு சேர்க்கப்பட்டிருக்கின்றன. இந்தப் போட்டிகள் மே 11, 12 ஆம் திகதிகளில் ஜப்பானின் யொகோஹாமாவில் நடைபெறும்.

வழமையாக ஆண்களுக்கு வேறாகவும் பெண்களுக்கு வேறாகவும் நடைபெற்று வந்த 4 x 100, 4 x 200, 4 x 400 போட்டிகளுக்கு மேலதிகமாக 2 x 2 x 400 போட்டியொன்றும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி ஆண்கள் நிகழ்ச்சிகள் மூன்றும் பெண்கள் நிகழ்ச்சிகள் மூன்றும் ஆண் பெண் வேறுபாடின்றிய போட்டிகள் மூன்றும் நடைபெறவுள்ளன. இந்த அஞ்சலோட்டப் போட்டிகளில் 2 ஆண் களும் இரண்டு பெண்களும் (2 x 2 x 400) கலந்து கலந்து கொள்ளவுள்ளனர்.

புதிதாக அறிமுகமாகும் கலப்பு 110 மீட்டர் தடை தாண்டும் அஞ்சலோட்டப் போட்டி அடுத்த புதிய நிகழ்வாகும். இந்தப் போட்டியில் 110 மீட்டர் தடை தாண்டலை ஆண்கள் ஒரு திசையில் ஓட, அதனைத் தொடர்ந்து பெண் எதிர்த்திசையில் ஓடி தனக்கு எதிர்த் திசையில் இருக்கும் ஆணிடம் மட்டையை ஒப்படைக்க வேண்டும்.

இந்த வகையில் ஆண் பெண் வேற்றுமையை நீக்கிய ஒருபால் போட்டிகளுக்கான அறிமுகமாக இம்முறைய யொகோஹாமா அஞ்சலோட்டப் போட்டிகள் அமையவிருக்கின்றன.

## அயர்லாந்து ஏ அணிக்கெதிரான போட்டியில் சிராஸ்



இலங்கை வந்துள்ள அயர்லாந்து ஏ அணிக்கும் இலங்கை ஏ அணிக்கும் இடையிலான உத்தியோகப்பற்றற்ற டெஸ்ட் போட்டிகளில் விளையாடும் மொஹமட் சிராஸ் பந்து வீச்சில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று வருகிறார். அயர்லாந்து ஏ அணியுடனான கொழும்பு எஸ். எஸ்.ஸீ மைதானத்தில் நடைபெற்ற முதலாவது உத்தியோகப்பற்றற்ற 04 நாள் டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி 10 விக்கட்டுகளால் வெற்றி பெற்றது. அயர்லாந்து ஏ அணி முதலாவது இன்னிங்ஸில் 153 ஓட்டங்களையும் இரண்டாவது இன்னிங்ஸில் 196 ஓட்டங்களையும் பெற்றது.

பந்து வீச்சில் மொஹமட் சிராஸ் முதலாவது இன்னிங்ஸில் 04 விக்கட்டுகளையும் (13-1-47-4), இரண்டாவது இன்னிங்ஸில் 02 விக்கட்டுகளையும் (10-2-47-2) கைப்பற்றினார். இலங்கை ஏ அணி முதலாவது இன்னிங்ஸில் 308 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. இதில் மொஹமட் சிராஸ் 17 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். இரண்டாவது இன்னிங்ஸில் இலங்கை ஏ அணி விக்கட் இழப்பின்றி 44 ஓட்டங்களைப் பெற்று 10 விக்கட்டுகளால் வெற்றியீட்டியது.

வலது கை வேகப்பந்து வீச்சாளரான மொஹமட் சிராஸ், கண்டி மடவளை மதீனா தேசிய பாடசாலையின் பழைய மாணவராவார். தற்போது ஆசீசீ அணிக்காக விளையாடி வருகிறார். இலங்கை கிரிக்கட் சபையினால் நடத்தப்படும் மேஜர் எமெர்ஜிங் லீக் தொடரில் 04 போட்டிகளில் 17 விக்கட்டுகளை வீழ்த்தியுள்ளார். கடந்த வருடம் வர்த்தக நிறுவனங்களுக்கிடையில் நடைபெற்ற டி 20 போட்டிகளில் ஜோன் கீல்ஸ் அணிக்காக விளையாடி 02 போட்டிகளில் 05 விக்கட்டுகளை வீழ்த்தினார். 2017 இல் இடம்பெற்ற 23 வயதின் கீழ் மாகாண அணிகளுக்கிடையிலான போட்டிகளில் தொடரில் அதிக விக்கட்டுகளை வீழ்த்திய வீரராகவும் பதிவானார்.

நேற்று முன்தினம் (16) முடிவடைந்த இரண்டாவது த்தியோகப்பற்றற்ற டெஸ்ட் போட்டி வெற்றி தோல்வி இன்றி நிறைவடைந்துள்ளது. இதில் அயர்லாந்து ஏ அணி முதல் இன்னிங்ஸில் 08 விக்கட் இழப்புக்கு 508 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்திக் கொண்டதோடு இரண்டாவது இன்னிங்ஸில் 03 விக்கட் இழப்புக்கு 84 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இலங்கை ஏ அணி முதல் இன்னிங்ஸில் 303 ஓட்டங்களைப் பெற்றதோடு இரண்டாவது இன்னிங்ஸில் 07 விக்கட் இழப்புக்கு 468 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. பந்து வீச்சில் சிராஸ் முதல் இன்னிங்ஸில் 01 விக்கட்டை (25-1-88-1) வீழ்த்தினார். இரண்டாவது இன்னிங்ஸில் விக்கட் எதனையும் பெறவில்லை. (01-0-09-0). துடுப்பாட்டத்தில் 09 ஓட்டங்களை சிராஸ் அணிக்காகப் பெற்றுக் கொடுத்தார்.

அயர்லாந்து அணியுடனான பயிற்சிப் போட்டிகளுக்காக வலது கை வேகப் பந்து வீச்சாளரான அக்தாப் காதர் ள்வாங்கப்பட்டிருந்தார்.



அட்டாளைச்சேனை பிரதேச செயலக உளவளத்துணை உத்தியோகத்தர் மனூஸ் அபூபக்கர் 2018 ஆண்டின் சிறந்த உளவளத் துணை சேவையினைபிரதேச,மாவட்ட மற்றும் தேசிய ரீதியாக பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெண்கள் மற்றும் சிறுவர்கள் உட்பட இளைஞர்களை விழிப்புணர்வூட்டி வலுப்படுத்தியமைக்கு இன்று அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு ஓ.விமலநாதன் அவர்களினால் பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட உளவளத்துணை இணைப்பாளர் தீன் முஹம்மட் மற்றும் அனைத்து பிரதேச செயலக உளவளத் துணை உத்தியோகத்தர்கள் இணைந்து மேலதிக அரசாங்க அதிபருக்கு நினைவுச் சின்னம் வழங்கி வைப்பதனை படத்தில் காணலாம்.




இப்பொழுது விற்பனையின்

மஃஸூராத்

காலை மாலை திக்ர் அவ்ராதுகள்

விலை - 70.00

தொடர்புகளுக்கு 077 77 98096











கடந்த 10/01/2019 அன்று திஹாரியில் இயங்கும் 'அத்தர்பிய்யா அல் இஸ்லாமிய்யா நிறுவனமும் விஜய கார்டன் குடும்பம் என்ற அமைப்பும் இணைந்து, கலாநிதிப் பட்டப் படிப்பை பூர்த்தி செய்த றவூப் ஸெய்ன் அவர்களை கௌரவிக்கும் முகமாக ஒரு விழாவை ஏற்பாடு செய்திருந்தது. அதில் விஜய கார்டன் குடும்பம் அமைப்பின் தலைவர் அல்ஹாஜ் நவ்ஷாத் அவர்களால் பொன்னாடை போர்த்தப்பட்டு கௌரவிக்கப்பட்டார். இந்நிகழ்வில் அத்தர்பிய்யா அல் இஸ்லாமிய்யா பணிப்பாளர் அஷ்ஷெய்க் மிஹ்ழார் எம். றஷீத் (நளீமி), கலாநிதி றவூப் ஸெய்ன் (நளீமி) மற்றும் அல்-ஹாஜ் அன்ஸார் ஆசிரியர் ஆகியோர் உரையாற்றுவதையும், விழாவில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியரையும் படத்தில் காணலாம்.

Printed and Published by Focus Media (Pvt) Ltd. 49, Sri Mahinda Dhamma Mawatha, Colombo 09.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org